




# தமிழ்நாடு இபேப்பர்.காம்

www. tamilnaduepaper.com








CHENNAI | Volume- 3 | Issue:280 | 25-04-2026 | சனிக்கிழமை | Free E- Paper | ● சென்னை ● மதுரை ● கோவை ● திருச்சி


## இன்றைய பஞ்சாங்கம்

25.04.2026 சித்திரை 12
சனிக்கிழமை

சூரிய உதயம் 5.59

**திதி:**
இன்று அதிகாலை 12.11 வரை அஷ்டமி பின்பு இரவு 10.39 வரை நவமி பின்பு தசமி.

**நட்சத்திரம்:**
இன்று அதிகாலை 12.37 வரை பூசம் பின்பு இரவு 11.30 வரை ஆயில்யம் பின்பு மகம்.

**யோகம் :**
இன்று அதிகாலை 3.36 வரை சூலம் பின்பு கண்டம்.

**கரணம்**
இன்று அதிகாலை 12.11 வரை பவம் பின்பு காலை 11.55 வரை பாலவம் பின்பு இரவு 10.39 வரை கௌலவம் பின்பு தைதுலம்.

**அமிர்தாதி யோகம் :**
இன்று இரவு 11.50 வரை யோகம் சரியில்லை பின்பு அமிர்த யோகம்

**சந்திராஷ்டமம் :**
இன்று அதிகாலை 12.37 வரை மூலம் பின்பு இரவு 11.50 வரை பூராடம் பின்பு உத்திராடம்.

**நல்ல நேரம்**
காலை 7.30 – 8.30 .
மாலை 4.30 – 5.30.

**இராகு காலம்**
காலை 10.30 – 12.00.

**எமகண்டம்**
பிற்பகல் 1.30 – 3.00.

**குளிகை**
காலை 6.00 – 7.30.

ஜோதிட நிபுணர்:
இராஜபாளையம்
இராமமூர்த்தி
செல்: 8189908040

# வாக்கு எண்ணும் மையங்களில் 4 அடுக்கு போலீஸ் பாதுகாப்பு

## சிசிடிவி மூலம் கண்காணிப்பு





**சென்னை, ஏப்.25:**

சென்னையில் வாக்கு எண்ணும் மையங்களில் ஆயுதம் ஏந்திய போலீசார் தீவிர பாதுகாப்பு பணியில் ஈடுபட்டுள்ளனர்.

நேற்று காலை 7 மணிக்கு தொடங்கிய வாக்குப்பதிவு மாலை 6 மணி வரை அமைதியாக முடிவடைந்தது. மாலை 6 மணி நிலவரப்படி 83.15 வாக்குகள் பதிவானதாக தேர்தல் ஆணையம் தரப்பில் தகவல் வெளியிடப்பட்டது. கடந்த 2021 சட்டமன்ற தேர்தலில் சென்னையில் 61.90 சதவீதம் வாக்குகள் பதிவாகி இருந்தது.

வாக்குப்பதிவு முடிந்ததும் 'சீல்' வைக்கப்பட்ட வாக்குப்பதிவு எந்திரங்கள் துப்பாக்கி ஏந்திய துணை ராணுவ வீரர்கள், போலீஸ் பாதுகாப்புடன் வேனில் ஏற்றப்பட்டு வாக்கு எண்ணும் மையங்களுக்கு எடுத்துச் செல்லப்பட்டது.

அதன்படி, ஆர்.கே.நகர், திரு.வி.க.நகர், ராயபுரம், துறைமுகம், சேப்பாக்கம் ,-திருவல்லிக்கேணி ஆகிய 5 சட்டமன்ற தொகுதிகளில் பதிவான மின்னணு வாக்குப்பதிவு எந்திரங்கள் மெரினா ராணிமேரி கல்லூரி வாக்கு எண்ணும் மையத்துக்கும்,

பெரம்பூர், கொளத்தூர், வில்லிவாக்கம், எழும்பூர், ஆயிரம் விளக்கு, அண்ணாநகர் ஆகிய 6 சட்டமன்ற தொகுதிகளில் பதிவான வாக்குப்பதிவு எந்திரங்கள் நுங்கம்பாக்கம் லயோலா கல்லூரி வாக்கு எண்ணும் மையத்துக்கும்,

விருகம்பாக்கம், சைதாப்பேட்டை, தியாகராயர் நகர், மயிலாப்பூர், வேளச்சேரி ஆகிய 5 சட்டமன்ற தொகுதிகளில் பதிவான வாக்குப்பதிவு எந்திரங்கள் கிண்டி அண்ணா பல்கலைக்கழக வாக்கு எண்ணும் மையத்துக்கும் எடுத்து செல்லப்பட்டு வைக்கப்பட்டுப்பட்டுள்ளது. வாக்கு எண்ணிக்கை மே 4ந் தேதி நடைபெற உள்ளது.

சென்னை பெருநகர காவல் ஆணையாளர் அபின் தினேஷ் மோதக் உத்தரவின்பேரில், கூடுதல் ஆணையாளர்கள் மேற்பார்வையில், இணை ஆணையாளர்கள் கண்காணிப்பில், துணை ஆணையாளர்கள் தலைமையில் மேற்படி 3 வாக்கு எண்ணும் மையங்களிலும் 4 அடுக்கு பலத்த காவல் துறை பாதுகாப்பு ஏற்பாடுகள் செய்யப்பட்டுள்ளது.

முதல் அடுக்கில் மத்திய ஆயுத காவல் படையினரும், 2வது அடுக்கில் தமிழ்நாடு சிறப்பு காவல் படையினரும், 3வது அடுக்கில் சென்னை பெருநகர ஆயுதப்படையினரும், 4வது அடுக்கில் சென்னை பெருநகர காவல் சட்டம் மற்றும் ஒழுங்கு, குற்றப்பிரிவு, போக்குவரத்து, சிறப்பு பிரிவுகளைச் சேர்ந்த காவல் அதிகாரிகள் மற்றும் ஆளிநர்களும் நியமிக்கப்பட்டு 24 மணி நேரமும் சுழற்சி முறையில் பலத்த பாதுகாப்பு பணி மேற்கொள்ளப்பட்டு வருகிறது. சென்னை பெருநகர காவல் ஆணையாளர் அபின் தினேஷ் மோதக் நேற்றிரவு ராணி மேரி கல்லூரி, அண்ணா பல்கலைக்கழகம் மற்றும் லயோலா கல்லூரி ஆகிய 3 வாக்கு எண்ணும் மையங்களுக்கு நேரில் சென்று காவல் அதிகாரிகளுடன் பாதுகாப்பு பணிகளை பார்வையிட்டார். மேலும், அங்கு மேற்கொண்டுள்ள பாதுகாப்பு பணிகள் மற்றும் கட்டமைப்புகளை ஆய்வு செய்து மேற்படி வாக்கு எண்ணும் மையங்களில் மேற்கொள்ள வேண்டிய வழிகாட்டுதல் நெறிமுறைகளை கடைபிடித்து, பாதுகாப்பு பணிகள் மற்றும் முன்னெச்சரிக்கை நடவடிக்கைகள் குறித்து காவல் அதிகாரிகளுடன் ஆலோசனை மேற்கொண்டு அறிவுரைகள் வழங்கினார்.

இந்தநிலையில் மயிலாப்பூர், சைதாப்பேட்டை, தியாகராய நகர், வேளச்சேரி மற்றும் விருகம்பாக்கம் உள்ளிட்ட 5 தொகுதிகளுக்கான வாக்கு எண்ணிக்கை மையமாக சென்னை அண்ணா பல்கலைக்கழகம் உள்ளது. காலை முதல் வளாகத்தில் 450 போலீசார் சுழற்சி முறையில் பாதுகாப்பு பணியில் ஈடுபட்டுள்ளனர்.

துணை ராணுவத்தினர், தமிழ்நாடு சிறப்பு காவல் படையினர், ஆயுத படையினர் மற்றும் சட்ட ஒழுங்கு போலீசார் என நான்கு வகையான போலீஸ் பாதுகாப்பு சுழற்சி முறையில் பாதுகாப்பு பணியில் ஈடுபட்டுள்ளனர்.

இந்த வளாகம் முழுவதும் 210 சிசிடிவி கேமராக்களால் கண்காணிக்கப்பட்டு வருகிறது. மேலும், வேட்பாளர்களின் முகவர்களும் நிலைய கட்டுப்பாட்டு அறையில் கண்காணிப்பு கேமராக்களை பார்வையிட ஏற்பாடுகள் செய்யப்பட்டு வருகின்றன.

இது மட்டுமின்றி காவல் துறை உயர் அதிகாரிகளும் இந்த வாக்கு எண்ணிக்கை மையத்தை பார்வையிட்டு வருகிறார்கள். இதே போல் தமிழகம் முழுவதும் உள்ள வாக்கு எண்ணும் மையங்களில் வாக்குப்பதிவு எந்திரங்களில் வைக்கப்பட்டுள்ள அறைகள் சீல் வைக்கப்பட்டு ஆயுதம் ஏந்திய போலீஸ் பாதுகாப்பு வழங்கப்பட்டுள்ளது.

மேலும் வாக்குப்பதிவு எந்திரங்கள் வைக்கப்பட்ட அறைகள் சிசிடிவி கேமிராக்கள் மூலம் கண்காணிக்கப்பட்டு வருகின்றன.

## விருதுநகர் பட்டாசு ஆலை விபத்து: தேசிய மனித உரிமைகள் ஆணையம் தாமாக முன்வந்து விசாரணை

**புதுடெல்லி, ஏப்.25:**

விருதுநகர் மாவட்டம் கட்டனார்பட்டியில் தனியார் பட்டாசு தொழிற்சாலையில் ஏற்பட்ட வெடி விபத்தில் 18 தொழிலாளர்கள் உயிரிழந்த விவகாரத்தை, தேசிய மனித உரிமைகள் ஆணையம் தாமாக முன்வந்து விசாரணைக்கு எடுத்துக்கொண்டுள்ளது.

இது தொடர்பாக தேசிய மனித உரிமைகள் ஆணையம் வெளியிட்டுள்ள அறிக்கை: தமிழ்நாட்டின் விருதுநகர் மாவட்டம், கட்டனார்பட்டியில் உள்ள தனியார் பட்டாசு தொழிற்சாலையில் ஏற்பட்ட வெடிவிபத்தில் 18 தொழிலாளர்கள் உயிரிழந்ததாகவும், ஆறு பேர் காயமடைந்ததாகவும் வெளியான செய்தியை தேசிய மனித உரிமைகள் ஆணையம் தாமாக முன்வந்து விசாரணைக்கு எடுத்துக்கொண்டுள்ளது.

2026 ஏப்ரல் 19 அன்று இந்தச் சம்பவம் நடந்தபோது, பெண்கள் உட்பட 100-க்கும் அதிகமான தொழிலாளர்கள் அந்தத் தொழிற்சாலை வளாகத்தில் இருந்துள்ளனர். ரசாயனங்களைக் கலக்கும்போது, உற்பத்தி செய்யும் நடைமுறையின்போது ஏற்பட்ட உராய்வின் காரணமாக இந்த வெடிவிபத்து நிகழ்ந்ததாகக் கூறப்படுகிறது. அண்மையில் இதே மாவட்டத்தில் நடந்த மற்றொரு சம்பவத்தில் நான்கு பேர் உயிரிழந்ததாகவும் தெரிவிக்கப்பட்டுள்ளது.

அந்த அறிக்கையில் இடம்பெற வேண்டும் என்றும் கூறப்பட்டுள்ளது என்று அந்த அறிக்கையில் தெரிவிக்கப்பட்டுள்ளது.

## தமிழக உள் மாவட்டங்களில் ஏப்.27 வரை 5 டிகிரி வெப்பம் அதிகரிக்க வாய்ப்பு

**சென்னை, ஏப்.25:**

சென்னை வானிலை ஆய்வு மையம் வெளியிட்ட செய்திக் குறிப்பு: தென் தமிழக கடலோர பகுதிகளின் மேல் ஒரு வளிமண்டல கீழடுக்கு சுழற்சி நிலவுகிறது. மேலும், கிழக்கு விதர்பா முதல் குமரிக்கடல் வரை தெலங்கானா, உள் கர்நாடகா மற்றும் தமிழகம் வழியாக ஒரு வளிமண்டல காற்றழுத்த தாழ்வு பாதை சுமார் 900 மீட்டர் உயரத்தில், நிலவுகிறது.

இதன் காரணமாக நாளை (ஏப்.25) முதல் ஏப்.27-ம் தேதி வரை மேற்கு தொடர்ச்சி மலை மாவட்டங்கள் மற்றும் தென் தமிழக கடலோர மாவட்டங்களில் ஓரிரு இடங்களில் லேசானது முதல் மிதமான மழையும், 28-ம் தேதி ஓரிரு இடங்களில் இடி, மின்னலுடன் கூடிய லேசானது முதல் மிதமான மழையும் பெய்ய வாய்ப்புள்ளது. 29, 30 தேதிகளில் தமிழகம், புதுச்சேரியில் ஓரிரு இடங்களில் லேசானது முதல் மிதமான மழை பெய்யக்கூடும்.

உள் தமிழக மாவட்டங்களில் இன்று முதல் 27-ம் தேதி வரை அதிகபட்ச வெப்பநிலை ஒருசில இடங்களில் வழக்கத்தை விட 5 டிகிரி ஃபாரன்ஹீட் வரை உயரக்கூடும்.

சென்னை மற்றும் புறநகர் பகுதிகளில் இன்று வானம் ஓரளவு மேகமூட்டத்துடன் காணப்படும்.

அதிகபட்ச வெப்பநிலை 100 டிகிரி, குறைந்தபட்ச வெப்பநிலை 82 டிகிரி ஃபாரன்ஹீட் அளவை ஒட்டி இருக்கக்கூடும்.

## ஆம் ஆத்மி கட்சி 7 மாநிலங்களவை உறுப்பினர்கள் பாஜகவில் இணைகின்றனர்: ராகவ் சத்தா பேட்டி

**புதுடெல்லி, ஏப்.25:**

ஆம் ஆத்மி கட்சியின் இளம் தலைவர்களில் ஒருவரான ராகவ் சத்தா, 2012-ல் அக்கட்சி தொடங்கப்பட்ட காலத்தில் இருந்தே அதில் தன்னை இணைத்துக்கொண்டவர். ஆம் ஆத்மியின் தலைமை ஒருங்கிணைப்பாளரான அரவிந்த் கேஜ்ரிவாலின் நம்பிக்கைக்கு உரியவராக விளங்கிய இவர், கட்சியின் மாநிலங்களவை உறுப்பினராக தேர்ந்தெடுக்கப்பட்டார்.

சமீப காலமாக கேஜ்ரிவாலுடன் கருத்து வேறுபாடு ஏற்பட்டதை அடுத்து சத்தா, அவரை சந்திப்பதை தவிர்த்து வந்தார். இந்நிலையில், கடந்த சில வாரங்களுக்கு முன்பு ராகவ் சத்தாவிடம் இருந்து கட்சிப் பதவி பறிக்கப்பட்டது.

இந்நிலையில், டெல்லியில் செய்தியாளர்களிடம் பேசிய ராகவ் சத்தா, "ஆம் ஆத்மியின் நிறுவன உறுப்பினர்களில் நானும் ஒருவன். எனது வாழ்வின் 15 ஆண்டுகளை ஆம் ஆத்மி கட்சிக்காக நான் அர்ப்பணித்தேன். நாங்கள் பஞ்சாப், டெல்லி மற்றும் நாட்டின் பிற பகுதிகளில் கட்சியை வளர்த்தெடுத்தோம். ஆனால், இப்போது கட்சி நேர்மையான அரசியலில் இருந்து விலகிவிட்டது. கட்சி தற்போது ஊழல் மலிந்ததாகவும் சமரசங்களுக்கு உட்பட்டதாகவும் மாறிவிட்டது.




தற்போது இருப்பது பழைய ஆம் ஆத்மி கட்சி அல்ல. ஆம் ஆத்மியின் தவறான நடவடிக்கைகளில் நான் ஈடுபட விரும்பவில்லை. எனவே, கட்சியில் இருந்து விலகி மக்களுடன் நெருக்கமாகச் செல்ல இருக்கிறேன். ஆம் ஆத்மியின் மாநிலங்களவை உறுப்பினர்கள் 10 பேரில் 7 பேர் பாஜகவில் இணைய இருக்கிறோம். இது தொடர்பாக மாநிலங்களவை தலைவருக்கு நாங்கள் கடிதம் எழுதி அனுப்பிவிட்டோம்" என தெரிவித்தார். அந்த 7 பேர் யார் யார் என்ற கேள்விக்கு, "ஹர்பஜன் சிங், சுவாதி மாலிவால், ராஜேந்திர குப்தா, விக்ரம் சஹ்னி, அசோக் மிட்டல், சந்தீப் பதக் ஆகிய ஆறு பேருடன் நானும் பாஜகவில் இணைய இருக்கிறேன்" என தெரிவித்தார்.

## பீகார்: நம்பிக்கை வாக்கெடுப்பில் என்டிஏ அரசு வெற்றி

**பாட்னா, ஏப்.25:**

பிஹார் முதல்வராக இருந்த நிதிஷ் குமார் பதவி விலகியதை அடுத்து கடந்த 15-ம் தேதி மாநிலத்தின் புதிய முதல்வராக பொறுப்பேற்றார் சாம்ராட் சவுத்ரி. இதையடுத்து, 243 சட்டப்பேரவை உறுப்பினர்களைக்கொண்ட சட்டப்பேரவையில், இன்று (ஏப். 24) நம்பிக்கை வாக்கெடுப்பு நடத்தப்பட்டது. இதில், சாம்ராட் சவுத்ரி தலைமையிலான அரசு எளிதாக வெற்றி பெற்றது. இதன்மூலம், பிஹாரில் என்டிஏ கூட்டணியின் ஒற்றுமை மீண்டும் உறுதிப்படுத்தப்பட்டுள்ளது.

முன்னதாக நம்பிக்கை கோரும் தீர்மானத்தின் மீது நடந்த விவாதத்தில் பேசிய சட்டமன்ற எதிர்க்கட்சித் தலைவர் தேஜஸ்வி யாதவ், "வளர்ச்சிப் பணிகளை மேற்கொள்ள நிலையான அரசு அவசியம். ஆனால், பிஹார் ஒரு தனித்துவமான மாநிலம். கடந்த ஐந்து ஆண்டுகளில் இது ஐந்தாவது முறையாக அமைந்திருக்கும் அரசாகும். இதற்கு முன் தேர்ந்தெடுக்கப்பட்ட ஒரு முதல்வர் இருந்தார்.

தற்போது நியமிக்கப்பட்ட ஒருவர் முதல்வராகி இருக்கிறார். என்றாலும், அவருக்கு நாங்கள் நன்றி தெரிவிக்கிறோம். லாலு பிரசாத் யாதவின் பள்ளியில் பயின்று பட்டம் பெற்ற ஒருவர், இப்பதவியை ஏற்றுக்கொண்டிருப்பதில் நாங்கள் மகிழ்ச்சி அடைகிறோம். அவர் (சாம்ராட் சவுத்ரி) முதல்வராக பொறுப்பேற்பதைவிட எங்களுக்கு சிறந்த விஷயம் வேறு என்ன இருக்க முடியும்?" என தெரிவித்தார். 2017 முதல் இவர் பாஜகவில் உள்ளார் என்பது குறிப்பிடத்தக்கது.







# திருக்குறள் குறள்-600

உரமொருவற் குள்ள வெறுக்கையஃ தில்லார்
மரமக்க ளாதலே வேறு



ஒருவனுக்கு வலிமையானது ஊக்க மிகுதியே, அவ்வூக்கம் இல்லாதவர் மரங்களே, (வடிவால்) மக்களைப் போல் இருத்தலே வேறுபாடு.

## சிந்திக்க ஒரு நொடி



படிக்க தெரியாதவர்கள் கையில் இருக்கும் புத்தகமும் இரசிக்க தெரியாதவர்கள் வாழ்க்கையும் ஒன்றே

**ராஜகோபாலன். J**
பெங்களூரு

## நம் வாசவி அம்மன் சிறப்பு வழிபாடு





**கிருஷ்ணகிரி, ஏப். 25:** பழையபேட்டை கன்யகா பரமேஸ்வரி அம்மன் திருக்கோயிலில் நம் வாசவி அம்மன் பிறந்த நாளை முன்னிட்டு எட்டாம் நாள் பூஜை அம்மனுக்கு சிறப்பு அபிஷேகங்கள், வண்ணமலர் மாலைகளால் அலங்காரங்கள், பிரசாதம் நெய் வேத்தியங்களுடன், அம்மனுக்கு ஆர்ய வைஸ்ய பெண்கள் அனைவரும் மாவிளக்கு தீபம் செய்து தீபம் ஏற்றி , வேத மந்திரங்கள் ஒலிக்க, பக்தி பாடல்கள் பாடி, மகா தீபாராதனையும் நடைபெற்றது. நம் வாசவி அம்மனை வேண்டி அருள் பெற்றனர். அனைவருக்கும் பிரசாதங்களும் வழங்கப்பட்டது. தமிழ்நாடு இ பேப்பர் செய்தியாளர் நிர்மலா ஸ்ரீதர் திருவண்ணாமலை

## சித்திரை பிரம்மோற்சவம் 4-ஆம் நாள் உற்சவம்






திருவண்ணாமலை மாவட்டம் பென்னாத்தூர் சித்திரை பிரம்மோற்சவத்தை முன்னிட்டு பஞ்ச மூர்த்திகள் சிறப்பு அபிஷேகங்கள், வண்ணமலர் மாலைகளால் அலங்காரங்கள், பிரசாதம், நெய்வேத்தியங்களுடன் மகா தீபாராதனையும் நடைபெற்றது. ஏராளமான பக்தர்கள் பூஜையில் கலந்து கொண்டு வேண்டி அருள் பெற்றனர். அனைவருக்கும் பிரசாதங்களும் வழங்கப்பட்டது.இரவு சுவாமிஅம்மன் மாட வீதி உலா மங்கள வாத்தியங்களுடன் நடைபெற்றது. ஏராளமான பக்தர்கள் மாடவீதி உலாவில் கொண்டு வேண்டி அருள் பெற்றனர். தமிழ்நாடு இ பேப்பர் செய்தியாளர் நிர்மலா ஸ்ரீதர் திருவண்ணாமலை



திருவண்ணாமலை மாவட்டம் ஆரணி வட்டம் தச்சூர் அண்ணா பல்கலைக்கழக பொறியியல் கல்லூரியில் உள்ள பாதுகாப்பு வைப்பறையில் ஆரணி சட்டமன்றத் தொகுதி தமிழ்நாடு சட்டமன்ற பொது தேர்தல் 2026 நடைபெற்றதை தொடர்ந்து திருவண்ணாமலை மாவட்ட தேர்தல் அலுவலர் மற்றும் மாவட்ட ஆட்சித் தலைவர் உயர்திரு. க. தர்ப்பகராஜ் இ. ஆ. ப. அவர்கள் வாக்குப்பதிவு இயந்திரங்களை வைக்கப்பட்டு சீல் வைத்தார். தமிழ்நாடு இ பேப்பர் செய்தியாளர் நிர்மலா ஸ்ரீதர் திருவண்ணாமலை

# உக்கல் மடாவளம் ஸ்ரீ காமாட்சி அம்பாள் கோயிலில் ஸ்ரீ ஜெகத்குரு ஆதிசங்கரர் ஜெயந்தி பெருவிழா

## திரளான பக்தர்கள் பங்கேற்பு

**செய்யாறு, ஏப். 25:** செய்யாறு அடுத்த உக்கல் அருள்மிகு மடாவளம் ஸ்ரீகாமாட்சி அம்பாள் கோயிலில் ஸ்ரீ ஜெகத்குரு ஆதிசங்கர ஜெயந்தி பெருவிழா வெகு விமர்சையாக நடைபெற்றது.

திருவண்ணாமலை மாவட்டம், செய்யாறு அடுத்த உக்கல் அருள்மிகு மடாவளம் ஸ்ரீகாமாட்சி அம்பாள் கோயிலில் ஸ்ரீ ஆதிசங்கரர் ஜெயந்தி பெரு விழா சிறப்பாக நடைபெற்றது.

நேற்று முன்தினம் மாலை 6 மணிக்கு மங்கள கணபதி ஹோமத்துடன் ஸ்ரீ ஆதிசங்கரர் ஜெயந்தி பூஜை ஆரம்பமானது. மாலை 6 15 மணிக்கு இரண்டாம் கால பூஜையும் , ஸ்ரீ ஜெகத்குரு ஹோம லோகன ஹோமமும் நடைபெற்றது.

நேற்று காலை 7 மணிக்கு யாகசாலை பூஜையும் காலை 9 மணிக்கு 108 வலம்புரி சங்குடன் கனகதாரா வேத மங்கள பூஜையும் ஆலய குரு ஸ்ரீ சங்கர் குருஜியால் நடத்தப்பட்டது . நிகழ்வில் பால சந்நியாசி லோகேஸ்வர சரஸ்வதி சுவாமிகள் கலந்து கொண்டார். காலை 10 மணிக்கு மங்கள மகா தீப ஆராதனை நடைபெற்றது.

பின்னர் பக்தர்களுக்கும், பொதுமக்களுக்கும் அறுசுவை அன்னதானம் வழங்கப்பட்டது. திரளான பக்தர்கள் பங்கேற்று சுவாமி தரிசனம் செய்தனர்.



உக்கல் மடாவளம் ஸ்ரீ காமாட்சி அம்பாள் கோயிலில் ஸ்ரீ ஜெகத்குரு ஸ்ரீஆதிசங்கரர் ஜெயந்தி பெருவிழாவில் ஆலய குரு ஸ்ரீ சங்கர் குருஜி, லோகேஸ் சரஸ்வதி சுவாமிகள் பங்கேற்றனர்.

# வந்தவாசி பகுதியில் ஸ்ரீராமானுஜருக்கு திருவாதிரை நட்சத்திர சிறப்பு பூஜைகள்..!

**வந்தவாசி , ஏப்.25:** ஸ்ரீ ராமானுஜர் அவதரித்த சித்திரை திருவாதிரை முன்னிட்டு ஸ்ரீகைங்கர்யம் டிரஸ்ட் சார்பில் வந்தவாசி பகுதியில் உள்ள கீழ்கண்ட கிராம சன்னிதிகளில் எழுந்தருளியிருக்கும் ஸ்ரீபாஷ்யகாரருக்கு விசேஷ திருமஞ்சனத்துடன் உற்சவ மூர்த்திகளுக்கு புஷ்பம் மற்றும் தளிகை சமர்ப்பிக்கப்பட்டு ஸ்ரீபெருமாள் மரியாதையும் செய்யப்பட்டது.

இந்த வைபவத்தில் சுற்றியுள்ள பகுதிகளில் இருந்து ஏராளமான பக்தர்கள் கலந்து கொண்டு தரிசனம் செய்தனர்.

பாதிரி கிராமத்தில் எழுந்தருளியுள்ள ஸ்ரீலக்ஷ்மி நாராயணப் பெருமாள் சன்னதி. விளாநல்லூர் ஸ்ரீ வரதராஜப் பெருமாள் சன்னிதி. மேல்பாதி ஸ்ரீ விஜயராகவப் பெருமாள் சன்னிதி. மேல்மட்டை விண்ணமங்கலம்ஸ்ரீஸ்ரீநிவாசப் பெருமாள் சன்னிதி.

ஒசூர் ஸ்ரீஸ்ரீநிவாஸப் பெருமாள் சன்னிதி.

வந்தவாசி ஸ்ரீரங்கநாதப் பெருமாள் சன்னிதி.

எரமலூர் ஸ்ரீசுந்தரவரத லக்ஷ்மி நாராயணப் பெருமாள் சன்னிதி.



**பா. சீனிவாசன்,
வந்தவாசி.**

## திருப்புல்லாணி ராமர் உற்சவம்



திருப்புல்லாணி ராமர் உற்சவம் இரண்டாம் நாள் காலை

## பவழகால் சப்பரம் புரப்பாடு



உதிராமேறு ஸ்ரீ சுந்தரவரதராஜ பெருமாள் துவஜாரோஹணம் & பவழகால் சப்பரம் புரப்பாடு 24.4.26.






**திருவண்ணாமலை, ஏப்.25:** திருவண்ணாமலை 4 தமிழ்நாடு சட்டமன்ற பொதுத் தேர்தல் 2026 நடைபெற்றதை தொடர்ந்து திருவண்ணாமலை மாவட்ட தேர்தல் அலுவலர் மற்றும் மாவட்ட ஆட்சித் தலைவர் உயர்திரு.க. தர்ப்பகராஜ் இ. ஆ. ப. அவர்கள், செங்கம், கலசப்பாக்கம் சட்டமன்ற தொகுதிகளுக்கான பொது பார்வையாளர் திரு. அபிஷேக் கிருஷ்ணா இ.ஆ. ப. அவர்கள் திருவண்ணாமலை வேளாண்மை ஒழுங்குமுறை விற்பனை கூடத்தில் உள்ள பாதுகாப்பு வைப்பறையில் அனைத்து அரசியல் கட்சி பிரமுகர்கள், வேட்பாளர்கள் முன்னிலையில் வாக்குப்பதிவு இயந்திரங்களை வைத்து சீல் வைக்கப்பட்டது. தமிழ்நாடு இ பேப்பர் செய்தியாளர் நிர்மலா ஸ்ரீதர் திருவண்ணாமலை.

## திருப்புல்லாணி ராமர் உற்சவம்



நேற்று இரவு திருப்புல்லாணி ராமர் உற்சவம்

## ஹம்ஸ வாகனம்



மாம்பலம் ஸ்ரீ கோதண்டராமர் ஸன்னதி பராபவ வருட ப்ரம்மோத்ஸவம் 1ம் திருநாள் மாலை ஹம்ஸ வாகனம்.




**திருவண்ணாமலை, ஏப்.25:** திருவண்ணாமலை வேளாண்மை ஒழுங்குமுறை விற்பனை கூடத்தில் உள்ள பாதுகாப்பு வைப்பறையில் வைக்கப்பட்டுள்ள தமிழ்நாடு சட்டமன்ற பொது தேர்தல் 2026 நடைபெற்றது தொடர்ந்து திருவண்ணாமலை மாவட்ட தேர்தல் அலுவலர் மற்றும் மாவட்ட ஆட்சித் தலைவர் உயர்திரு. க. தர்ப்பகராஜ் இ. ஆ. ப. அவர்கள் வாக்குப்பதிவு இயந்திரங்களை கண்காணிப்பு கேமராக்கள் பொருத்தப்பட்டு கட்டுப்பாட்டு அறையிலிருந்து கண்காணிக்கப்பட்டு வருவதை ஆய்வு மேற்கொண்டார். தமிழ்நாடு இ பேப்பர் செய்தியாளர் நிர்மலா ஸ்ரீதர் திருவண்ணாமலை



தமிழக சட்டமன்றத் தேர்தல் 2026 நடைபெற்று முடிந்த நிலையில் திருப்பத்தூர் மாவட்டத்தில் உள்ள திருப்பத்தூர் வாணியம்பாடி ஜோலார்பேட்டை ஆம்பூர் ஆகிய நான்கு சட்டமன்ற தொகுதிகளில் உள்ள மின்னணு வாக்குப்பதிவு இயந்திரங்கள் அனைத்தும் வாணியம்பாடியில் உள்ள தனியார் கல்லூரியில் வைக்கப்பட்டு தேர்தல் அதிகாரியும் மாவட்ட ஆட்சியரும் மற்றும் மாவட்ட காவல் கண்காணிப்பாளரும் மற்றும் கட்சி பிரமுகர்கள் முன்னிலையில் சீல் வைக்கப்பட்டுள்ளது. இதில் துணை ராணுவம் மற்றும் காவல்துறையினர் பாதுகாப்பு பணியில் ஈடுபட்டு வருகின்றனர் அப்பகுதி முழுவதும் சிசிடிவி கேமராக்கள் பொருத்தப்பட்டுள்ளது குறிப்பிடத்தக்கது

## சென்னையில் வாக்குப்பதிவு சதவீதம் அதிகரித்தாலும், வாக்களித்தவர்களின் எண்ணிக்கை குறைவு



**சென்னை, ஏப்.25:**

234 தொகுதிகளை கொண்ட தமிழக சட்டசபைக்கு நேற்று தேர்தல் நடைபெற்று முடிந்தது. காலை 7 மணிக்கு தொடங்கிய தேர்தல் மாலை 6 மணிக்கு நிறைவடைந்தது. தேர்தலில் மொத்தம் 4 ஆயிரத்து 23 வேட்பாளர்கள் களமிறங்கினர். தேர்தலுக்காக தமிழகம் முழுவதும் 75 ஆயிரத்து 64 வாக்குச்சாவடிகள் அமைக்கப்பட்டன. தமிழக சட்டசபை தேர்தலில் 85.15 சதவீத வாக்குகள் பதிவாகியுள்ளதாக தேர்தல் ஆணையம் தெரிவித்துள்ளது.


சென்னை மாவட்டத்தில் 2016, 2021 தேர்தல்களை விட அதிகமாக 83.7% வாக்குகள் பதிவானாலும், எண்ணிக்கை அடிப்படையில் இரு தேர்தல்களை விட குறைவான வாக்காளர்களே வாக்களித்துள்ளனர்.

2016-ம் ஆண்டு 39.75லட்சம் என இருந்த மொத்த வாக்காளர்களில் 24.33 லட்சம் வாக்குகள் பதிவாகி இருந்தது. இதன் சதவீதம் 61.2 ஆகும்.

2021-ம் ஆண்டு 40.04லட்சம் என இருந்த மொத்த வாக்காளர்களில் 24.16 லட்சம் வாக்குகள் பதிவாகி இருந்தது. இதன் சதவீதம் 60 ஆகும்.

2026-ம் ஆண்டு சிறப்பு தீவிர திருத்தத்திற்கு (SIR) பிறகு 28.30 லட்சம் என இருந்த மொத்த வாக்காளர்களில் 23.69 லட்சம் வாக்குகள் பதிவாகி இருந்தது. இதன் சதவீதம் 83.7 ஆகும்.

## தமிழகத்தில் தேர்தல் பணியில் இருந்த போலீஸ் டி.எஸ்.பி., எஸ்.ஐ. உயிரிழப்பு



**சென்னை, ஏப்.25:**

ராமநாதபுரம் மாவட்டத்தில் போதை பொருள் தடுப்பு பிரிவு சி.ஐ.டி. போலீஸ் துணை சூப்பிரண்டாக பணியாற்றி வந்த வர் ராமகிருஷ்ணன் (வயது 56). இவர் நேற்று மாலை திண்டுக்கல் மாவட்டம் ஒட்டன்சத்திரம் சட்டமன்ற தொகுதிக்குட்பட்ட இடையக்கோட்டை வாக்குச்சாவடி பகுதிகளில் தேர்தல் ரோந்து பணியில் ஈடுபட்டார்.

அப்போது அவருக்கு திடீரென நெஞ்சுவலி ஏற்பட்டது. இதையடுத்து அவர் ஒட்டன்சத்திரத்தில் ஒரு தனியார் மருத்துவமனையில் சிகிச்சைக்காக சேர்க்கப்பட்டார். அங்கு சிகிச்சை பலனின்றி ராமகிருஷ்ணன் பரிதாபமாக இறந்தார். இந்த சம்பவம் தேர்தல் பணியில் ஈடுபட்டிருந்த அதிகாரிகள் மத்தியில் பெரும் அதிர்ச்சியை ஏற்படுத்தியது.

சேலம் மாவட்டம் மல்லிகரை போலீஸ் நிலையத்தில் பணியாற்றி வந்தவர் சிறப்பு சப்-இன்ஸ்பெக்டர் கண்ணதாசன். இவர் கடந்த சில நாட்களாக தம்மம்பட்டி அருகே உள்ள நாகியம்பட்டி பகுதியில் தேர்தல் பணியில் ஈடுபட்டு வந்தார். இந்தநிலையில் நேற்று நாகியம்பட்டியில் உள்ள வாக்குச்சாவடி மையத்தில் சிறப்பு சப்-இன்ஸ்பெக்டர் கண்ணதாசன் பணியில் ஈடுபட்டார்.

அப்போது அவருக்கு திடீரென உடல்நலம் பாதிக்கப்பட்டு அப்பகுதியில் உள்ள தனியார் மருத்துவமனையில் சிகிச்சைக்காக சேர்க்கப்பட்டார். பின்னர் அவர் மேல்சிகிச்சைக்காக சேலத்தில் உள்ள தனியார் மருத்துவமனைக்கு அனுப்பி வைத்தனர். ஆனால் வரும் வழியிலேயே கண்ணதாசன் பரிதாபமாக இறந்தார். இதய செயழிலப்பால் கண்ணதாசன் உயிரிழந்ததாக மருத்துவர்கள் தெரிவித்தனர். இந்த சம்பவம் அப்பகுதியில் சோகத்தை ஏற்படுத்தி உள்ளது.

## திருச்செந்தூர் முருகன் கோவிலில் அதிகாலை முதலே அலைமோதும் பக்தர்கள் கூட்டம்



**திருச்செந்தூர், ஏப்.25:**

முருகனின் அறுபடை வீடுகளில் 2ம் படை வீடாக திருச்செந்தூர் சுப்பிரமணிய சுவாமி கோவில் அமைந்துள்ளது. கடலையொட்டிய இந்த கோவிலுக்கு தினமும் ஏராளமான பக்தர்கள் வந்து செல்கின்றனர். குறிப்பாக வார நாட்களை காட்டிலும் வார இறுதி நாட்களான சனி மற்றும் ஞாயிற்றுக்கிழமைகளில் அதிகமான பக்தர்கள் கோவிலுக்கு வந்து செல்வார்கள். தற்போது கோடை விடுமுறை தொடங்கியுள்ளதால் திருச்செந்தூர் முருகன் கோவிலில் அதிகாலை முதலே பக்தர்கள் கூட்டம் அலைமோதுகிறது. வாக்களிக்க சொந்த ஊருக்கு வந்த மக்களும் முருகனை தரிசிக்க கோவிலுக்கு படையெடுத்ததால் இன்று காலை முதலே பக்தர்கள் கூட்டம் அதிகமாக உள்ளது. பல மணி நேரம் காத்திருந்து பக்தர்கள் முருகனை தரிசித்து சென்றனர். கடுமையான வெயிலுக்கு மத்தியிலும் கடற்கரையிலும் பக்தர்கள் கூட்டம் அதிகமாக இருந்தது.

## சாத்தான்குளம் வழக்கு: 9 பேரின் மரண தண்டனையை உறுதி செய்ய சி.பி.ஐ. தரப்பில் முறையீடு



**மதுரை, ஏப்.25:**

தூத்துக்குடி மாவட்டம் சாத்தான்குளத்தை சேர்ந்த வியாபாரி ஜெயராஜ், அவரது மகன் பென்னிக்ஸ் ஆகியோர் கடந்த 2020-ம் ஆண்டில் விசாரணைக்காக அங்கு உள்ள போலீஸ் நிலையத்துக்கு அழைத்து செல்லப்பட்டனர். அவர்கள் இருவரையும் போலீசார் கடுமையாக தாக்கியுள்ளனர். இதில் படுகாயம் அடைந்த இருவரும் அடுத்தடுத்து பரிதாபமாக இறந்தனர். கொரோனா ஊரடங்கு உத்தரவு அமலில் இருந்த சமயத்தில் அவர்கள் இருவரும் இறந்த சம்பவம் நாடு முழுவதும் அதிர்ச்சியை ஏற்படுத்தியது.

இந்த சம்பவம் தொடர்பாக அப்போதைய போலீஸ் இன்ஸ்பெக்டர் ஸ்ரீதர், சப்-இன்ஸ்பெக்டர்கள் ரகு கணேஷ், பாலகிருஷ்ணன் உள்பட 10 போலீசார் கைதாகி மதுரை மத்திய சிறையில் அடைக்கப்பட்டனர். அதில் பால்துரை என்பவர் 2020-ம் ஆண்டு ஆகஸ்ட்டில் கொரோனா தொற்று காரணமாக உயிரிழந்தார்.

இந்த இரட்டைக் கொலை வழக்கை சி.பி.ஐ. விசாரித்தது. இந்த வழக்கு மதுரை மாவட்ட முதலாவது கூடுதல் செசன்சு கோர்ட்டில் நடக்கிறது. தந்தை, மகன் கொலை வழக்கில் கைதான 9 போலீஸ்காரர்களும் குற்றவாளிகள் என கடந்த 23-ந்தேதி நீதிபதி முத்துக்குமரன் தீர்ப்பளித்தார். அவர்களுக்கான தண்டனை விவரம் இன்று அறிவிக்கப்படும் என்று தெரிவித்திருந்தார்.

இந்த சூழலில் 9 போலீசாருக்கான தண்டனை விவரங்களை கடந்த 6 ம் தேதி மதுரை மாவட்ட நீதிமன்ற நீதிபதி முத்துக்குமரன் வாசித்தார். அதில், காவல் நிலையத்தில் வைத்து இருவரும் காவல் சித்திரவதை செய்யப்பட்டு சாகடிக்கப்பட்டுள்ளனர். தந்தை முன் மகனையும், மகன் முன் தந்தையையும் அடைத்து வைத்து தாக்கியதை எளிதாக கருத முடியாது. இருவரும் நிராயுதபாணியாக இருந்தபோதும், இரவு முழுவதும் காவல் நிலையத்தில் வைத்து தாக்கியுள்ளனர். இருவரும் வியாபாரிகள். சமூகத்தில் நல்ல அந்தஸ்தில் இருப்பவர்கள். அவர்கள் மீது எந்த குற்றவழக்கும் இல்லை என்றே தெரிகிறது.

வழக்கில் கைது செய்யப்பட்ட 9 போலீசாருக்கும் மரண தண்டனை விதிப்பதே சிறந்தது. இதுபோன்ற வழக்குகளில் ஆயுள் தண்டனை வழங்கினால், இப்படி செயல்படும் போலீசாருக்கு அச்சம் ஏற்படாது. எனவே இந்த வழக்கில் குற்றவாளிகளாக அறிவிக்கப்பட்ட இன்ஸ்பெக்டர் ஸ்ரீதர், சப் இன்ஸ்பெக்டர்கள் பாலகிருஷ்ணன், ரகு கணேஷ், தலைமைக் காவலர் முருகன், காவலர்கள் சாமதுரை, முத்துராஜ், செல்லதுரை, தாமஸ் பிரான்சிஸ், வெயில் முத்து ஆகிய 9 பேருக்கும் மரண தண்டனை விதிக்கப்படுகிறது. மேலும் இன்ஸ்பெக்டர் ஸ்ரீதருக்கு ரூ.15 லட்சம் அபராதம் விதிக்கப்படுகிறது” என்று அவர் தெரிவித்திருந்தார்.

இந்நிலையில் சாத்தான்குளம் ஜெயராஜ் - பென்னிக்ஸ் கொலை வழக்கில் போலீசார் 9 பேருக்கு, கீழமை நீதிமன்றம் அளித்த மரண தண்டனையை உறுதி செய்யக்கோரி ஐகோர்ட்டு மதுரை கிளையில் சி.பி.ஐ. தரப்பு முறையீடு செய்துள்ளது. இந்த வழக்கு விசாரணையின்போது 9 குற்றவாளிகளும் சிறையில் இருந்து காணொலி மூலம் ஆஜராகினர். முதல் குற்றவாளியான ஸ்ரீதர், தானே வாதிட உள்ளதாக முறையீடு செய்ய, “முதலில் மேல்முறையீட்டு மனு தாக்கல் செய்யுங்கள்” என அறிவுறுத்தி விசாரணையை வரும் 30-ந்தேதிக்கு நீதிபதிகள் ஒத்திவைத்தனர்.

தமிழ்நாடு இ பேப்பர்.காம்
www.tamilnaduepaper.com

இ பேப்பரை தினமும் இலவசமாக பெற விரும்புபவர்கள்.

"welcome Tamilnadu” என்று கீழ் உள்ள வாட்ஸ்ஆப் எண்ணிற்கு அனுப்பி வையுங்கள். தங்களின் அமைப்பு செய்திகள் தங்கள் பகுதியில் நடைபெறும் நிகழ்ச்சிகளை வெளியிட செய்தி மற்றும் புகைப்படத்தை கீழ்உள்ள வாட்ஸ்ஆப்பிற்கு அனுப்புங்கள்

94452 65389

## 2025-26-ம் நிதியாண்டில் 7,914 ரெயில் பெட்டிகள் தயாரிப்பு - ரெயில்வே தகவல்



**சென்னை, ஏப்.25:**

இந்தியாவில் ரெயில் பயணிகள் எண்ணிக்கை மற்றும் தேவைகளுக்கு ஏற்ப பல்வேறு புதிய மாற்றங்களை ரெயில்வே வாரியம் கொண்டு வருகிறது. குறிப்பாக, பழைய ரெயில் பெட்டிகளுக்கு பதிலாக, நவீன மற்றும் பாதுகாப்பான எல்.எச்.பி. பெட்டிகள் தயாரிப்பை அதிகப்படுத்தியுள்ளது. இந்தியாவில் சென்னை பெரம்பூர் ஐ.சி.எப். தொழிற்சாலை, பஞ்சாப் கபூர்த்தலாவில் உள்ள ஆர்.சி.எப். தொழிற்சாலை, உத்தரபிரதேசத்தில் உள்ள எம்.சி.எப். தொழிற்சாலை ஆகிய 3 ரெயில் பெட்டி தொழிற்சாலைகள் உள்ளன.

இங்கு எக்ஸ்பிரஸ், பயணிகள் ரெயில், மின்சார ரெயில் உள்பட அனைத்து வகை ரெயில் பெட்டிகளும் தயாரிக்கப்பட்டு வருகிறது.

ரெயில் பெட்டிகள் உற்பத்தி செய்யும் பணி ஆண்டுதோறும் கணிசமாக உயர்ந்து வருகிறது. அதன்படி, 2025-26-ம் நிதியாண்டில் 7,914 ரெயில் பெட்டிகள் தயாரிக்கப்பட்டுள்ளது.

இது கடந்த (2024-25) நிதியாண்டில் தயாரிக்கப்பட்ட 7,134 ரெயில் பெட்டிகளைவிட 11 சதவீதம் அதிகமாகும். அதிகரித்து வரும் பயணிகள் தேவையைப் பூர்த்தி செய்வதற்காக ரெயில்வே உள்கட்டமைப்பை நவீனமாக்குவதில் இந்திய ரெயில்வே தீவிரமாக ஈடுபட்டு வருகிறது. 2004-2014 இடையே இந்திய ரெயில்வே ஆண்டுக்கு சராசரியாக 3,300-க்கும் குறைவான பெட்டிகளையே உற்பத்தி செய்தது. தற்போது மேம்பட்ட இணைப்பு மூலம் உற்பத்தி வெகுவாக அதிகரித்திருப்பதாக ரெயில்வே அதிகாரிகள் தெரிவித்தனர்.

## தமிழக சட்டசபை தேர்தலில் வாக்குப்பதிவில் உச்சம் தொட்ட கொங்கு மண்டலம்



**சென்னை, ஏப்.25:**

234 தொகுதிகளை கொண்ட தமிழக சட்டசபைக்கு நேற்று தேர்தல் நடைபெற்று முடிந்தது. காலை 7 மணிக்கு தொடங்கிய தேர்தல் மாலை 6 மணிக்கு நிறைவடைந்தது. தேர்தலில் மொத்தம் 4 ஆயிரத்து 23 வேட்பாளர்கள் களமிறங்கினர். தேர்தலுக்காக தமிழகம் முழுவதும் 75 ஆயிரத்து 64 வாக்குச்சாவடிகள் அமைக்கப்பட்டன. தமிழக சட்டசபை தேர்தலில் 85.15 சதவீத வாக்குகள் பதிவாகியுள்ளதாக தேர்தல் ஆணையம் தெரிவித்துள்ளது.

தமிழ்நாடு சட்டசபை தேர்தலில் கொங்கு மண்டல மாவட்டங்களில் அதிகபட்சமாக வாக்குகள் பதிவாகியுள்ளது. உச்சமாக தமிழ்நாட்டிலேயே அதிகமாக கரூரில் 92.63 % வாக்குகள் பதிவாகியுள்ளன.

அதேபோல், சேலத்தில் 90.76 %, நாமக்கலில் 90.21%, ஈரோடு 90.10 % என 90 சதவீதத்திற்கு மேல் பதிவான அனைத்து மாவட்டங்களும் மேற்கு மண்டலமான கொங்கு பகுதியிலேயே உள்ளன.

தமிழ்நாட்டிலேயே குறைவாக கன்னியாகுமரி மாவட்டத்தில் 75.61% ஆக பதிவாகியுள்ளது; அதேபோல், ராமநாதபுரத்தில் 77.01%, நெல்லை 77.94%, தூத்துக்குடி 80.53 %, தென்காசி 82.41% ஆகவும் குறைவாகவே வாக்குகள் பதிவாகியுள்ளது

சிவகங்கை 76.66%, மதுரை 80.52%, தேனி 81.55%, விருதுநகர் 84.82% என தென்மாவட்டங்களில் எங்கேயுமே 85% வாக்குப்பதிவை தொடவில்லை.

## சட்டசபை தேர்தலில் பதிவான வாக்குகளின் எண்ணிக்கையை சரிபார்க்கும் பணி தொடக்கம்

**சென்னை, ஏப்.25:**

தமிழக சட்டசபை தேர்தல் ஏப்ரல் 23-ந் தேதி நடைபெறும் என்று தேர்தல்கமிஷன் அறிவித்து இருந்தது. அறிவிப்பை தொடர்ந்து தமிழகத்தில் அரசியல் கட்சிகள் சூறாவளி பிரசாரத்தில் ஈடுபட்டன. ஆளும் தி.மு.க., எதிர்க்கட்சியான அ.தி.மு.க., நாம் தமிழர் கட்சி, புதிய வரவான தமிழக வெற்றிக்கழகம் என 4 முனை போட்டி நிலவியது.

இதனையடுத்து நேற்று சட்டமன்ற தேர்தலுக்கான வாக்குப்பதிவு ஒரே கட்டமாக நடைபெற்றது. காலை 7 மணிக்கு தொடங்கிய வாக்குப்பதிவு மாலை 6 மணி வரை நீடித்தது. மொத்த வாக்காளர் எண்ணிக்கை 5 கோடியே 73 லட்சத்து 43 ஆயிரத்து 291 ஆகும். அவர்களில் 2 கோடியே 80 லட்சத்து 30 ஆயிரத்து 658 பேர் ஆண்கள். 2 கோடியே 93 லட்சத்து 4 ஆயிரத்து 905 பேர் பெண்கள், 7,728 பேர் மூன்றாம் பாலினத்தவர் ஆவார்கள்.



காலை 7 மணியில் இருந்தே வாக்காளர்கள் வருகை காணப்பட்டது. இளைஞர்கள், இளம்பெண்கள் உற்சாகத்துடன் வாக்குச்சாவடிகளுக்கு வந்தனர். காலையிலேயே வாக்காளர்கள் வரிசையில் நிற்கத் தொடங்கினர். பாதுகாப்புப்பணியில் போலீசாரும், துணை ராணுவத்தினரும் ஈடுபட்டனர். தமிழகத்துக்கு வந்துள்ள தேர்தல் பார்வையாளர்கள்அவ்வப்போது வந்து வாக்குப்பதிவை கண்காணித்தனர். 300 கம்பெனி துணை ராணுவத்தினர் வந்துள்ள நிலையில், பதற்றமான வாக்குச்சாவடிகளில் கூடுதல் துணை ராணுவத்தினர் பணியமர்த்தப்பட்டனர். 83 ஆயிரத்து 875 தமிழக போலீசாரும், 3 லட்சத்து 60 ஆயிரத்து 68 அரசு ஊழியர்களும் தேர்தல் பணியில் ஈடுபட்டனர்.

மொத்தமுள்ள 75 ஆயிரத்து 64 வாக்குச்சாவடிகளில், 1 லட்சத்து 6 ஆயிரத்து 418 வாக்குப்பதிவு எந்திரங்கள், 75 ஆயிரத்து 64 எண்ணிக்கையில் கட்டுப்பாட்டு எந்திரங்கள் மற்றும் வாக்கை உறுதி செய்யும் ‘விவிபாட்’ எந்திரங்கள் பயன்படுத்தப்பட்டன. அதோடு கூடுதலாக 20 சதவீத வாக்குப்பதிவு எந்திரங்களும், கட்டுப்பாட்டு எந்திரங்களும் ‘ரிசர்வில்’ வைக்கப்பட்டு இருந்தன. 30 சதவீத விவிபாட் எந்திரங்கள் ரிசர்வில் வைக்கப்பட்டு இருந்தன.

சில இடங்களில் எந்திரங்களின் பழுதால் வாக்குப்பதிவு காலதாமதமாக தொடங்கியது. இதுதவிர சில இடங்களில் வன்முறை நடந்ததால் வாக்குப்பதிவு நிறுத்திவைக்கப்பட்டது. பின்னர் சிறிது நேரம் கழித்து தொடங்கியது. சரியாக மாலை 6 மணிக்கு வாக்குச்சாவடிகள் அமைந்துள்ள மையங்களின் பிரதான கதவுகள் அடைக்கப்பட்டன. அந்த மையங்களுக்குள் ஏற்கனவே வந்திருந்தவர்களுக்கு மட்டும் டோக்கன் தரப்பட்டு வாக்குப்பதிவு தொடர்ந்து நடந்தது.

இதனிடையே வாக்குப்பதிவு விவரங்களை தேர்தல் கமிஷன் 2 மணி நேரத்திற்கு ஒருமுறை வெளியிட்டு வந்தது. வாக்குப்பதிவு முடிவடைந்ததும் அங்கிருந்த அரசியல் கட்சிகளின் முகவர்கள் முன்னிலையில் வாக்குப்பதிவு எந்திரங்கள் மூடி சீல் வைக்கப்பட்டன. பின்னர் அவை உரிய பாதுகாப்புடன் வாக்கு எண்ணும் மையங்களில் உள்ள பாதுகாப்பு அறைகளுக்கு கொண்டு செல்லப்பட்டன.

கடந்த தேர்தல்களைவிட இந்த தேர்தலில் நடந்துள்ள வாக்குப்பதிவு மிகவும் வித்தியாசமானதாகும். ஏனென்றால், தமிழக தேர்தல் சரித்திரத்தில் இதுவரை இல்லாத அளவுக்கு 85.15 சதவீத வாக்குகள் பதிவாகியுள்ளன. இதற்கு முன்பு நடந்த தேர்தல்களில் பதிவானதைவிட நேற்று பதிவான வாக்கு சதவீதம் அதிகமாகும். இந்த தேர்தலில் மொத்த வாக்காளர்கள் 5 கோடியே 73 லட்சத்து 43 ஆயிரத்து 291; அதில் வாக்களித்தோர் சுமார் 4.81 கோடி.

இந்நிலையில் தமிழ்நாடு சட்டசபை தேர்தலில் பதிவான வாக்குகளின் எண்ணிக்கையை சரிபார்க்கும் பணிகள் தற்போது தொடங்கி உள்ளது. ஒவ்வொரு வாக்குச் சாவடியிலும் வேட்பாளர்களின் முகவர்களுக்கு வழங்கப்பட்ட படிவம் 17C-யில் பதிவு செய்யப்பட்ட எண்ணிக்கையுடன், மொத்தம் பதிவான வாக்குகளின் எண்ணிக்கை விபரங்கள் ஒப்பீடு செய்து சரிபார்க்கப்படுகிறது. தேர்தல் நடத்தும் அலுவலர்கள், தேர்தல் பார்வையாளர்கள் இணைந்து இப்பணியை மேற்கொண்டு வருகின்றனர்.

சரிபார்ப்புப் பணி முடிந்த பின், தொகுதி வாரியாக வாக்குகளின் புள்ளி விவரங்கள் வெளியாகும்.

## திருமலை ஏழுமலையான் உண்டியல் காணிக்கை ரூ.4.43 கோடி

திருமலை, ஏப்.25:

கோடை விடுமுறையால் திருமலைக்கு பக்தர்கள் வருகை அதிகரித்துள்ள நிலையில், செவ்வாய்க்கிழமை நிலவரப்படி தர்ம தரிசனத்துக்கு 8 (தரிசன டோக்கன்கள் இல்லாதவர்கள்) மணிநேரமும், ரூ.300 விரைவு தரிசனம், நேரடி இலவச தரிசன டோக்கன்கள் பெற்ற பக்தர்களுக்கும் 3 முதல் 4 மணி நேரம் ஆனது.

அலிபிரி நடைபாதை வழியாக மதியம் 2 மணிவரை 12 வயதுக்குட்பட்ட குழந்தைகள், அவர்களின் பெற்றோர் இரவு 10 மணிவரை அனைத்து பக்தர்களும் அனுமதிக்கப்படுகின்றனர். இதற்கிடையே, செவ்வாய்கிழமை முழுவதும் 63,325 பக்தர்கள் தரிசனம் செய்தனர்; 25,550 பக்தர்கள் தலைமுடி காணிக்கை செலுத்தினர். உண்டியல் காணிக்கையை கணக்கிட்டதில் ரூ.4.43 கோடி வசூலானது என தேவஸ்தானம் தெரிவித்துள்ளது.

## ஸ்ரீ பத்மாவதி தாயார் கோயிலுக்கு இரண்டு குளிர்சாதன இயந்திரம் நன்கொடை

திருப்பதி, ஏப்.25 :

ஹைதராபாதைச் சேர்ந்த பக்தர்கள் பூஜா கௌஷிக் மற்றும் சுவாதி கௌஷிக் ஆகியோர், திருச்சானூரில் உள்ள ஸ்ரீ பத்மாவதி தாயார் கோவிலுக்கு ரூ. 78,000 மதிப்புள்ள இரண்டு குளிர்சாதன இயந்திரங்களை புதன்கிழமை நன்கொடையாக வழங்கினர். இந்த நிகழ்வில், நன்கொடையாளர்கள் கோவிலின் உதவி செயல் அதிகாரி தேவராஜுலுவிடம் குளிர்சாதன இயந்திரங்களை ஒப்படைத்தனர். இவை கோயிலின் பரக்கமணி பிரிவில் பயன்படுத்தப்படும் என்று அதிகாரிகள் தெரிவித்தனர். ஊழியர்கள் இந்த நிகழ்ச்சியில் பங்கேற்றனர்.

## திரௌபதி அம்மன் கோயில் தீமிதி விழா கொடியேற்றம்

திருத்தணி, ஏப்.25 :

திருத்தணி பழைய தர்மராஜா கோயில் தெருவில் உள்ள திரௌபதி அம்மன் கோயிலில் நிகழாண்டுக்கான தீமிதி விழாவையொட்டி தணிகாசலம்மன் கோயிலில் இருந்து பெண்கள் சீர்வரிசை எடுத்து ஊர்வலமாக வந்தடைந்தனர்.

வியாழக்கிழமை விழா கொடியேற்றத்துடன் தொடங்கியது தொடர்ந்து மூலவருக்கு சிறப்பு அபிஷேகம், அலங்காரம் மற்றும் தீபாராதனை நடைபெற்றது. தொடர்ந்து உற்சவர் அம்மன் சிறப்பு அலங்காரத்தில் திருத்தணி நகர முக்கிய வீதியுலா வந்து பக்தர்களுக்கு அருள்பாலித்தார். மே 10-ஆ ம் தேதி வரை தினமும் காலையில் மூலவருக்கு சந்தன காப்பு மற்றும் மதியம் மகாபாரத சொற்பொழிவும், இரவு நாடகமும் நடைபெறும். ஏப். 29-இல் திரௌபதி அம்மன் திருக்கல்யாணம், மே 1-இல் சுபத்திரை கல்யாணம், மே 4-இல் அர்ஜுனன் தபசு மற்றும் 10 -இல் காலையில் துரியோதனன் படுகளம் நிகழ்ச்சியும், மாலையில் தீமிதி விழாவும் நடைபெறுகிறது. தொடர்ந்து, மே 11-இல் தர்மர் பட்டாபிஷேகத்துடன் தீமிதி விழா நிறைவு பெறுகிறது.

# சுவாமிமலை முருகன் கோயிலில் சித்திரைத் திருவிழா கொடியேற்றம்!



தஞ்சாவூர், ஏப்.25:

முருகனின் அறுபடை வீடுகளில் நான்காம் படை வீடான சுவாமி மலையில் சித்திரைத் திருவிழா கொடியேற்றத்துடன் தொடங்கியது.

தஞ்சாவூர் மாவட்டம் கும்பகோணம் அருகே சுவாமி மலையில் தமிழ் கடவுள் எனப் போற்றப்படும் முருகனின் அறுபடை வீடுகளில் நான்காம் படை வீடாக சுவாமிநாத சுவாமி திருக்கோயில் அமைந்துள்ளது.

பிரபவ முதல் அட்சய முடியவுள்ள 60 தமிழ் வருடத் தேவதைகள் 60 படிக்கட்டுகளாக அமையப்பெற்ற கட்டு மலைக்கோயிலாகும். நக்கீரரால் திருமுருகாற்றுப்படையிலும், அருணகிரிநாதரால் திருப்புகழிலும் பாடல் பெற்ற தலம் ஆகும். இத்தகைய சிறப்புப் பெற்ற நான்காம் படைவீடான சுவாமிமலையில் ஒவ்வொரு ஆண்டும் சித்திரைத் திருவிழா பத்து நாள்கள் சிறப்பாக நடைபெறுவது வழக்கம். அதுபோல இவ்வாண்டு சித்திரைத் திருவிழா இன்று கொடியேற்றத்துடன் தொடங்கியது.

விழாவினை முன்னிட்டு கொடிமரம் அருகே சுப்பிரமணியசுவாமி வள்ளி தெய்வானையுடனும், விநாயகர், சண்டிகேஸ்வரர் ஆகியோர் சிறப்பு அலங்காரத்தில் எழுந்தருளினர். பின்னர் கொடிமரத்துக்குச் சிறப்பு அபிஷேகம் நடத்தப்பட்டு மங்களவாத்தியங்கள் முழங்கக் கொடியேற்றப்பட்டது.

தொடர்ந்து மலைக்கோயிலிலிருந்து உற்சவ மண்டபத்துக்கு சுப்பிரமணியசுவாமி எழுந்தருளினர். இதையடுத்து விழா நாள்களில் தினமும் காலை, மாலையில் பல்வேறு வாகனங்களில் சுவாமி வீதி உலா நடைபெறுகிறது.

விழாவின் முக்கிய நிகழ்ச்சியான 2 ஆம் தேதி திருத்தேரோட்டம், நடைபெறுகிறது. 3 ஆம் தேதி வெள்ளி மயில் வாகனத்தில் சுவாமி வீதி உலா காவிரியில் தீர்த்தவாரியம் நடைபெறுகிறது.

## திருமலையில் 20 நிமிஷத்தில் 1,320 கிலோ அரிசி வேக வைக்கும் பாத்திரம்



திருமலை, ஏப்.25:

திருமலையில் அன்னதான கூடத்தில் ஒரே சமயத்தில் 1,320 கிலோ அரிசி வேக வைக்கும் ஸ்டீம் பாய்லர்களை தேவஸ்தானம் பயன்படுத்த உள்ளது.

திருமலையில் தினசரி 1.5 லட்சம் பக்தர்கள் அன்னதானம் உண்டு வருகிறார்கள். அவர்களின் தேவைக்கு ஏற்ப தேவஸ்தானம் தினசரி நல்ல தரமான அன்னதானத்தை வழங்கி வருகிறது.

இந்த நிலையில் விரைவாக உணவு சமைக்க தேவஸ்தானம் தற்போது 60 கிலோ அரிசி சமைக்கும் 22 ஸ்டீம் பாய்லர்களை தேவஸ்தானம் கொள்முதல் செய்துள்ளது.

இதில் 20 நிமிஷத்தில் 1,320 கிலோ அரிசியை ஒரே நேரத்தில் சமைக்க முடியும். கடந்த மாதம் கடப்பா மாவட்டம் ஒண்டிமிட்டாவில் நடந்த ஸ்ரீராமர் திருக்கல்யாணத்தின் போது இந்த ஸ்டீம் பாய்லர்கள் பயன்படுத்தி உணவு தயாரிக்கப்பட்டது.

அவை தரமாகவும் விரைவாகவும் சமைத்ததால், அவற்றை திருமலை அன்னதான கூடத்திலும் பயன்படுத்த தேவஸ்தானம் திட்டமிட்டுள்ளது குறிப்பிடத்தக்கது.

## ஸ்ரீபாஷ்யகர்களின் கந்தப்பூ பொடி உற்சவம்



திருப்பதி, ஏப்.25:

திருப்பதி ஸ்ரீகோவிந்தராஜ சுவாமி கோயிலில் ஸ்ரீ பாஷ்யகார்களின் கந்தப்பூ பொடி உற்சவம் வியாழக்கிழமை கொண்டாடப்பட்டது. விழாவையொட்டி சிறப்பு நிகழ்ச்சிகளுக்கு ஏற்பாடு செய்யப்பட்டிருந்தது.

வைணவ குருவான ஸ்ரீமத் ராமாநுஜரின் ஜென்ம நட்சத்திரத்தை முன்னிட்டு 10 நாள்கள் உற்சவம் நடைபெற்றது. அந்த உற்சவத்தின் நிறைவு நாளில் கந்தப்பூப் பொடி உற்சவம் நடைபெறுவது வழக்கம்.

இதையொட்டி, ஸ்ரீபாஷ்யகார்களுக்கு கந்தப் பொடி அபிஷேகம் செய்யப்பட்டது.

பின்னர் கோயிலின் நான்கு மாட வீதிகளில் சுவாமி உலா வந்து பக்தர்களுக்கு தரிசனம் அளித்தார்.

பின்னர், ஆஸ்தானம் நடைபெற்றது. இத்திருவிழாவில் சந்தன அலங்காரத்திற்கு சிறப்பு முக்கியத்துவம் அளிக்கப்பட்டது, பக்தர்களுக்கு மகிழ்ச்சியை அளித்தது.

நிகழ்ச்சியில் ஸ்ரீ ஸ்ரீ ஸ்ரீ பெரிய ஜீயர் சுவாமிகள், ஸ்ரீ ஸ்ரீ ஸ்ரீ சின்ன ஜீயர் சுவாமிகள், கோயில் நிர்வாகிகள், அர்ச்சகர்கள் கலந்து கொண்டனர்.






## நலம் தரும் மருத்துவம்

### செயற்கை பானங்களை விடுங்கள்... பலாப்பழம் சாப்பிடுங்கள்!!

இயற்கை அன்னை ஒவ்வொரு பருவ காலத்திற்கும் ஏற்றவாறு தனித்துவமான கனிகளை நமக்கு வழங்குகிறாள். அந்த வகையில், கோடைக்காலத்தின் வெப்பத்தைத் தணிக்கவும், உடலுக்குத் தேவையான ஊட்டச்சத்துக்களை வழங்கவும் விளையும் முக்கனிகளில் ஒன்று பலாப்பழம் (JACKFRUIT).

இதன் பிரம்மாண்டமான தோற்றத்திற்கு உள்ளே ஒளிந்திருக்கும் சுவையும், மருத்துவ குணங்களும் இதனை ஒரு 'சூப்பர் ஃபுட்' என்று அழைக்க வைக்கிறது.

பலாப்பழம் அதன் சுவைக்காக மட்டுமல்லாமல், கோடை வெயிலைச் சமாளிக்கத் தேவையான அத்தியாவசிய ஊட்டச்சத்துக்களைக் கொண்டிருப்பதாலும் ஒரு முழுமையான உணவாகக் கருதப்படுகிறது.

1. உடனடி ஆற்றல் (INSTANT ENERGY): கோடை வெயிலில் நாம் சீக்கிரம் களைப்படைந்து விடுவோம். பலாப்பழத்தில் உள்ள இயற்கை சர்க்கரைகளான குளுக்கோஸ் மற்றும் பிரக்டோஸ், இரத்தத்தில் சர்க்கரை அளவை திடீரென உயர்த்தாமல் உடலுக்குத் தேவையான உடனடி ஆற்றலை வழங்குகின்றன.

2. அதிக நீர்ச்சத்து மற்றும் பொட்டாசியம்: வெயிலினால் ஏற்படும் வியர்வை மூலம் நம் உடலில் உள்ள தாதுக்கள் வெளியேறும். பலாப்பழத்தில் உள்ள பொட்டாசியம் உடலின் எலக்ட்ரோலைட் (ELECTROLYTE) சமநிலையைப் பராமரிக்க உதவுகிறது. இது இரத்த அழுத்தத்தைக் கட்டுப்படுத்தவும், இதய ஆரோக்கியத்தைப் பாதுகாக்கவும் உதவுகிறது.

3. செரிமான ஆரோக்கியம் (DIGESTIVE HEALTH): வெயில் காலத்தில் செரிமான மண்டலம் சற்று மந்தமாக இருக்கும். பலாப்பழத்தில் உள்ள நார்ச்சத்து (FIBER) குடல் இயக்கத்தைச் சீராக்கி, மலச்சிக்கல் ஏற்படாமல் பாதுகாக்கிறது. மேலும், இது குடலில் உள்ள நச்சுகளை வெளியேற்றவும் உதவுகிறது.

4. நோய் எதிர்ப்பு சக்தி (IMMUNITY BOOSTER): பலாப்பழத்தில் வைட்டமின் C மற்றும் சக்திவாய்ந்த ஆன்டி-ஆக்ஸிடன்ட்டுகள் உள்ளன. இவை கோடைக்காலத்தில் ஏற்படும் வைரஸ் தொற்றுகளில் இருந்து உடலைப் பாதுகாப்பதோடு, செல்கள் சேதமடையாமல் தடுக்கின்றன.

5. சருமப் பாதுகாப்பு: சூரியனின் புற ஊதா கதிர்களால் சருமம் பாதிப்படைவதைத் தடுக்க இதில் உள்ள ஆன்டி-ஆக்ஸிடன்ட்டுகள் உதவுகின்றன. இது சருமத்தை இளமையாகவும், பொலிவாகவும் வைத்திருக்க உதவுகிறது.

பலாப்பழம் ஆரோக்கியமானது என்றாலும், அதை மிதமான அளவில் உண்பதே சிறந்தது. குறிப்பாக சர்க்கரை நோய் உள்ளவர்கள் மருத்துவர் ஆலோசனையுடன் குறைந்த அளவில் உட்கொள்ள வேண்டும். அளவுக்கு அதிகமாக உண்டால் சிலருக்கு உடல் சூடு அல்லது வயிற்று உபாதைகள் ஏற்படலாம்.

# செவ்வாய் கோளிற்கு செல்ல நிலாவில் பெட்ரோல் பங்க்... உண்மையை உடைத்த விஞ்ஞானிகள்!



விண்வெளிக்கு சுற்றுலா செல்வது முதல் செவ்வாய் கிரகத்தில் மனிதர்கள் குடியேறுவதுவரை நமது கனவுகள் நாளுக்கு நாள் விரிவடைந்து கொண்டே செல்கின்றன. ஒரு காலத்தில் வெறும் அறிவியல் புனைகதைகளில் மட்டுமே வந்த விஷயங்கள் எல்லாம் இன்று நிஜமாகிக் கொண்டு இருக்கின்றன.

நீண்ட தூர விண்வெளிப் பயணங்களில் நாம் சந்திக்கும் மிகப்பெரிய சவாலே எரிபொருள் மற்றும் ஆக்சிஜன் பற்றாக்குறை தான். ஆனால், இந்த இரண்டு பிரச்சனைகளுக்கும் ஒரே தீர்வாக நமது நிலவு மாறப்போகிறது என்ற ஒரு தகவல் தற்போது வெளிவந்துள்ளது.

செவ்வாய் கிரகத்திற்குச் செல்லும் ராக்கெட்டுகளுக்கு ஒரு பிரம்மாண்டமான விண்வெளி பெட்ரோல் பங்க் ஆக நிலவு செயல்படப் போகிறது. இதை சாத்தியமாக்கப் போவது அங்கு கண்டுபிடிக்கப்பட்டுள்ள பல கோடி ஆண்டுகள் பழமையான ஒரு பிரம்மாண்ட ஐஸ் கட்டி தான்.

நிலவில் மறைந்துள்ள ஐஸ் கட்டி! : நிலவின் துருவப் பகுதிகளில் எப்போதுமே சூரிய ஒளியே படாத சில மர்மமான இருண்ட பகுதிகள் உள்ளன. நாசா அனுப்பிய விண்கலத்தின் உதவியுடன் சமீபத்தில் ஒரு சுவாரஸ்யமான ஆய்வறிக்கை வெளியிடப்பட்டுள்ளது. அதன்படி, நிலவில் உள்ள இந்த இருண்ட பகுதிகளில் சுமார் 150 கோடி ஆண்டுகளாகவே பனிக்கட்டிகள் தொடர்ச்சியாக உருவாகி பத்திரமாக சேமிக்கப்பட்டு வருவது கண்டுபிடிக்கப்பட்டுள்ளது.

பல லட்சம் ஆண்டுகளுக்கு முன்பு நிலவின் மீது மோதிய பனிப்பாறைகள் மற்றும் சூரியக் காற்று ஆகியவைதான் இந்த நீரை அங்கு கொண்டு சேர்த்துள்ளன. காலப்போக்கில் நிலவின் அச்சு லேசாகச் சாய்ந்ததால், இந்த இருண்ட பகுதிகளின் பரப்பளவு விரிவடைந்து அதிக அளவிலான தண்ணீர் பனிக்கட்டியாக மாறத் தொடங்கியுள்ளது.

புதைந்திருக்கும் பொக்கிஷம்!

இந்த இருண்ட பகுதிகளில் நிலவும் தட்பவெப்ப நிலை மைனஸ் அளவீட்டைத் தாண்டி மிகக் கடுமையாக உறைய வைக்கும் அளவிற்கு இருக்கும். இந்த அதீத குளிரின் காரணமாகத்தான் இவ்வளவு காலமும் அந்தப் பனிக்கட்டிகள் உருகாமல் அப்படியே பாதுகாப்பாக வைக்கப்பட்டுள்ளன. இதில் என்ன ஒரு ஆச்சரியம் என்றால், கொஞ்சம் சமீபத்தில் அதாவது சுமார் 10 கோடி ஆண்டுகளுக்கு முன்பு உருவான பனிக்கட்டிகள் நிலவின் மேல் பரப்பிலேயே நேரடியாகக் காணப்படுகின்றன.

ஆனால், மிகவும் பழமையான நூற்று ஐம்பது கோடி வருடப் பனிக்கட்டிகள் பாதுகாப்பாக நிலவின் மண்ணுக்கு அடியில் மிகவும் ஆழமாகப் புதைந்து கிடக்கின்றன. இது மனித குலத்தின் எதிர்கால விண்வெளி ஆராய்ச்சிக்குக் கிடைத்த ஒரு மிகப் பெரிய லாட்டரி என்றே சொல்லலாம்.

விண்வெளி பெட்ரோல் பங்க் !: நாசாவின் அடுத்தகட்ட பிரம்மாண்டமான ஆர்டெமிஸ் திட்டத்திற்கு இந்த பனிக்கட்டிகள் மிகப் பெரிய அளவில் கைகொடுக்கப் போகின்றன. அங்குள்ள ஐஸ் கட்டிகளை எடுத்து விசேஷ முறையில் பிரித்தால், விண்வெளி வீரர்கள் சுவாசிக்கத் தேவையான ஆக்சிஜனை மிக எளிதாக உருவாக்கிவிடலாம்.

அதேபோல, அதில் இருந்து பிரிக்கப்படும் ஹைட்ரஜனை ராக்கெட்டுகளுக்கான சூப்பரான எரிபொருளாகவும் பயன்படுத்த முடியும். இதனால் பூமியிலிருந்து அதிக எரிபொருளைச் சுமந்து செல்ல வேண்டிய பெரிய செலவு மிச்சமாகும். செவ்வாய் கிரகத்திற்கோ அல்லது அதைத் தாண்டி வேறு கிரகங்களுக்கோ செல்லும் விண்கலங்கள், நிலவில் கொஞ்ச நேரம் இளைப்பாறிவிட்டு எரிபொருளை நிரப்பிக்கொண்டு தங்களின் பயணத்தைத் தொடரலாம்.

பல்லாயிரம் ஆண்டுகளாக நாம் பூமியிலிருந்து அண்ணாந்து பார்த்து ரசித்த நிலவு, எதிர்காலத்தில் மனிதர்களின் விண்வெளிப் பயணங்களுக்கு ஒரு முக்கியமான நடுமையமாக மாறப்போகிறது. அங்குள்ள வளங்களைச் சரியாகப் பயன்படுத்திக் கொண்டால், மனிதர்கள் நிலவில் நிரந்தரமாக முகாம் அமைத்துத் தங்கி அங்கிருந்தபடியே பல புதிய பிரபஞ்ச ரகசியங்களை மிக சுலபமாக ஆராயலாம்.

# "கடைசி பெஞ்ச் மாணவன்"




"அவன் எதுக்கும் லாயக்கில்லை... கடைசி பெஞ்ச்லதான் கடைசி வரைக்கும் இருக்கணும்." கிளாஸ் டீச்சர் சொல்ல வகுப்பில் சிரிப்பொலி எழுந்தது.

ஆனால் அர்ஜுனுக்கு அது வழக்கமான அர்ச்சனை. அவன் எப்போதும் கடைசி பெஞ்ச்தான். முன்னாடி வரச் சொன்னாலும் வர மாட்டான்.

"சோம்பேறி..."

"படிக்காதவன்..."

"உனக்கெல்லாம் எதிர்காலமே இல்லை..."

இவ்வாறு அவனைப் பற்றிய எதிர்மறைக் கணிப்புகள் பள்ளி முழுவதும் பதிவாகியிருக்க, அங்கே யாருக்கும் தெரியாத ஒரு விஷயமும் இருந்தது.

அர்ஜுன் எதையும் கவனிக்காமல் இல்லை. முன் பெஞ்ச் மாணவர்கள் பதில் சொல்லும் விதம்... ஆசிரியர்கள் கேள்வி கேட்கும் முறை. எந்தப் பாடத்திலிருந்து அதிகம் கேட்கிறார்கள்... எல்லாவற்றையும் கவனித்துக் கொண்டுதானிருந்தான்.

அவன் பேச மாட்டான்.

ஆனால் அவன் மனம் வேலை பார்த்துக் கொண்டே இருந்தது.

ஒரு நாள்...

"மாநில அளவிலான தேர்வு." அறிவிப்பு வந்தது.

"இந்த முறை நம்ம பள்ளியிலிருந்துதான் முதல் மாணவன் வரணும்!" என்று ஹெட்மாஸ்டர் அறிவித்திருந்தார் அனைவரும் தயாராகத் துவங்கினர்.

அர்ஜுன் வழக்கம் போல் அதே கடைசி பெஞ்சில் அமர்ந்து எதையோ எழுதினான்.

மற்றவர்கள் பாடங்களை நோட்ஸ் எழுத அவன் பாடத் திட்டத்தை எழுத ஆரம்பித்தான்.

"கடைசி 3 பாடங்களில் இருந்துதான் அதிகமாய்க் கேள்விகள் வருது"

"எல்லா மாடல் கொஸ்டீனிலேயும் சில கேள்விதான் திரும்பத் திரும்ப வருது"

"இந்த வரைபடம் தான் 5 வருடமா வந்துக்கிட்டே இருக்கு..."

இவ்வாறு கேள்வித்தாளின் பேட்டர்னை ஆராய்ந்தான்.

தேர்வு நாள்.

அனைவருக்கும் பதட்டம்.

அர்ஜுன் மட்டும் அமைதியாய்.

கொஸ்டீன் பேப்பரைத் திறந்தான். எல்லாம் அவன் எதிர்பார்த்த கேள்விகளே.

எளிதாய் பதில் எழுதினான்.

சில நாட்களுக்குப் பிறகு, ரிசல்ட் வந்தது


"ஸ்டேட் ஃபர்ஸ்ட் - அர்ஜுன்"

அதே டீச்சர்... அதே கிளாஸ்... "அர்ஜுன்... எப்படி இது நடந்தது?"

அவன் மெதுவாக எழுந்தான். முதல் முறையாக...முன் பெஞ்ச் நோக்கி நடந்தான்.

"நான் படிக்கலன்னு நீங்க நினைச்சீங்க...ஆனா நான் கவனிச்சேன்....எல்லாரும் புத்தகத்தை படிச்சாங்க... நான் கேள்வித்தாளைப் படிச்சேன்....டீச்சர்... நாம எங்க உட்காருகிறோம் என்பது முக்கியமில்லை... எப்படிச் சிந்திக்கிறோம் என்பதே நம் உயரத்தைத் தீர்மானிக்கும்!"

எல்லோரும் அமைதியாகினர்.



**முகில் தினகரன்**
கோயமுத்தூர்

# மனிதனின் மறுபக்கம்

மதியம் இரண்டு மணி. தூத்துக்குடியின் உச்சி வெயில் தார்ச்சாலையை உருக்கிக் கொண்டிருந்தது. ஆனால், ரவியின் மனதிற்குள் எரிந்து கொண்டிருந்த வறுமைத் தீ அதைவிடக் கொடூரமானது. ரவியின் காலணிகள் தேய்ந்து போயிருந்தன, ஆனால் அவன் மனதின் நேர்மை அதைவிட வேகமாகத் தேய்ந்து கொண்டிருந்தது. பசி என்பது ஒரு கொடிய மிருகம்; அது வயிற்றைக் கிள்ளும்போது, மனிதனின் மனசாட்சி மெல்ல மெல்ல மரத்துப் போகிறது. மூன்று நாட்களாக வீட்டில் அடுப்பு எரியவில்லை. கையில் இருந்த பழைய கைக்கடிகாரத்தை விற்று வாங்கிய அரிசி நேற்றோடு தீர்ந்து போனது. "படிச்ச படிப்புக்கு வேலை இல்லை, உழைச்ச உழைப்புக்கு ஊதியம் இல்லை" ரவியின் இந்த ஆற்றாமை அவனைக் கொஞ்சம் கொஞ்சமாக ஒரு கசப்பான மனிதனாக மாற்றியிருந்தது. அவனது நேர்மை பசியின் முன்னால் மண்டியிட்டது. "யாரையாவது ஏமாற்றினால் தான் இன்று என் பிள்ளைகளுக்கு ஒரு வேளை கஞ்சி ஊற்ற முடியும்" என்ற நிலைக்கு அவன் தள்ளப்பட்டான். அந்த இயலாமைதான் அவனை ஒரு போலி தங்க மோதிரத்தோடு வீதிக்குக் கொண்டு வந்தது.

"நேர்மையாக வாழ்ந்து என்ன கண்டேன்? உழைத்த உழைப்புக்கு ஊதியம் இல்லை, படிப்புக்கு வேலை இல்லை. இன்று என் பிள்ளைகளின் பசியைத் தீர்க்க ஒருவனையாவது ஏமாற்றியே தீர வேண்டும்" - இதுதான் ரவியின் இப்போதைய வேதம். வாழ வழியில்லாதவனுக்கு ஏமாற்றுவதும் ஒரு தர்மம் தான்" என்று தனக்குத்தானே பொய் சொல்லித் தேற்றிக் கொண்டான். அவனது வலது கை சட்டைப் பைக்குள் இருந்த அந்தப் போலி தங்க மோதிரத்தை இறுக்கமாகப் பிடித்துக் கொண்டது. அவன் கண்கள் ஒரு வேட்டைக்காரனைப் போலச் சாலையை அளவிட்டன.

அவன் கடந்து வந்த பாதையில் பலர் தென்பட்டனர். ஒரு மூதாட்டி தன் உடைந்த கூடையைச் சரி செய்து கொண்டிருந்தாள். ஒரு பெண்மணி தனது சிதறிய காய்கறிகளைப் பொறுக்கிக் கொண்டிருந்தாள். ஒரு தள்ளுவண்டிக்காரன் வியர்வை வழியப் பாரம் இழுத்தான். அந்த ஏழைகளின் உழைப்பைப் பார்த்தபோது, அவனது கை நீள மறுத்தது. "இவர்களிடம் என் வித்தையைக்காட்ட முடியாது" என்று ரவி ஒதுங்கினான்.

அப்போதுதான் ஒரு புளிய மரத்தடியில் அமர்ந்திருந்த அந்த மனிதனைப் பார்த்தான். கலைந்த தலைமுடி,



அழுக்குச் சட்டை, கையில் ஒரு சிறிய பொட்டலம். "இவன் தான் சரியான ஆள்" என முடிவெடுத்தான் ரவி. தன் மனசாட்சியைச் சட்டைப் பைக்குள் சுருட்டி வைத்துவிட்டு அவனிடம் நெருங்கினான்.

"ஐயா... தப்பா நினைக்காதீங்க. என் பையன் ஆஸ்பத்திரியில இருக்கான். அவசரமா பணம் தேவைப்படுது. இந்த மோதிரத்தை வச்சுக்கோங்க, இது என் குடும்ப நகையில மிச்சம் இருக்குறது. எனக்கு ஒரு ஐநூறு ரூபாய் மட்டும் கொடுங்க, போதும்" என நடுக்கத்துடன் அந்த மோதிரத்தை நீட்டினான்.

அந்த மனிதன் மெல்லத் தலை நிமிர்ந்து ரவியைப் பார்த்தான். அவன் கண்களில் ஒரு விசித்திரமான கருணை இருந்தது. "தம்பி, என்கிட்ட ஏது பணம்? காலையில இருந்து ஒரு டீ கூட குடிக்கல. இதோ இந்தப் பழைய சோறு தான் இருக்கு. வேணும்னா நீயே வச்சுக்கோ" என மிக இயல்பாக நடித்தான்.

ரவிக்கு எரிச்சலாக வந்தது. "இவனென்ன என்னை விடப் பெரிய ஏழையாக இருக்கிறான்?" என நினைத்துத் தன் பொய்களை இன்னும் அடுக்கினான். தான் பெரிய 'புத்திசாலி' என்றும், எதிரே இருப்பவன் 'ஏமாளி' என்றும் நினைத்துக் கொண்டு தன் நாடகத்தைத் தொடர்ந்தான். ஆனால் அந்த மனிதனோ, "உன்னை விட நான் அதிகக் கஷ்டத்துல இருக்கேன்" என்பது போல் ஒவ்வொன்றாகச் சொல்லி ரவியின் ஒவ்வொரு காயையும் முறியடித்தான். ஒரு கட்டத்தில், எதிரே இருப்பவனின் 'இயலாமை' ரவியின் மனசாட்சியைத் தட்டியது. "பசிக்கு ஒரு கவளம் சோறு வைத்திருக்கும் இந்த ஏழையையா நான் ஏமாற்ற நினைத்தேன்?" என்ற எண்ணம் வந்தபோது ரவியின் போலி வேடம் கலைந்தது. அவனது போலித்தனமான வீரம் கரைந்து போனது. என்னிடம் உங்களை ஏமாற்றத் தகுதியே இல்லை" என விம்மித் தணிந்தான்.

"ஐயா, என்னை மன்னிச்சிருங்க. நான் ஒரு அயோக்கியன். வறுமை காரணமா உங்களை ஏமாத்திப் பணம் பறிக்க நினைச்சேன். ஆனா உங்க நிலையைப் பார்த்தப்புறம் தான் புரியுது, நான் எவ்வளவு கீழ்த்தரமா போயிட்டேன்னு" எனத் தன் குற்றத்தை அப்படியே ஒப்புக்கொண்டான்.

அப்போது அந்த மனிதன் மெல்லச் சிரித்தான். தன் அழுக்கு வேட்டிக்குள்ளிருந்து ஒரு கரன்சி கட்டை எடுத்து ரவியிடம் நீட்டினான். "இந்தா தம்பி, உனக்குத் தேவையான பணம் இதுல இருக்கு. இதை நீயே வச்சுக்கோ."

ரவி அதிர்ச்சியில் உறைந்தான். "இது... இது எப்படி? நீங்க ஏழைன்னு நடிச்சீங்களா?"

"ஆமாம் தம்பி. நீ என்னை ஏமாற்றப் போறேன்னு தெரிஞ்ச உடனே, நானும் உன்னை மாதிரி நடிக்க ஆரம்பிச்சேன். ஆனா நீ உன் தப்பை ஒத்துக்கிட்ட பாரு... அங்கதான் உன்னோட 'மறுபக்கம்' ஜெயிச்சிருச்சு. உன்னோட வறுமை உன்னைத் திருடனாக்கப் பார்த்தது, ஆனா உன் மனசாட்சி உன்னை மனுஷனாக்கிடுச்சு. இதை உன் தேவைக்கு வச்சுக்கோ" என்றார் அவர்.

ரவி கண்கலங்கி அந்தப் பணத்தை வாங்கிக் கொண்டான். "ஐயா, இதை நான் எப்படி உங்களுக்குத் திருப்பித் தருவேன்? எனக்கேது வழி? என்னால் முடியாதே?"

அவர் ரவியின் தோளைத் தட்டிச் சொன்னார்: "தம்பி, இதை வைத்து சிறிதாக வியாபாரம் செய்து உழைத்து பிழைத்துக் கொள். உன் நேர்மை உன்னை உயர்த்தி வாழவைக்கும். இதை நீ எனக்குத் திருப்பித் தர வேண்டாம். இன்னொரு சமயம் உன்னை யாராவது இப்படி ஏமாற்ற நினைச்சா, அவன்கிட்ட இதை அப்படியே கொடு. அவனும் உன்னைப் போலவே மனம் மாறி நல்லவனாவான். அன்னைக்கு நான் உனக்குத் தந்த கடன் தீர்ந்துடும்." ரவிக்கு வாழ்க்கை ஒரு புதிய பாடத்தைக் கற்றுக் கொடுத்திருந்தது.

அந்த மனிதன் சிறிது தூரம் நடந்ததும், அங்கு நின்றிருந்த ஒரு சொகுசு காரில் ஏறி அமர்ந்தார். காரில் இருந்த டிரைவர் கேட்டார், "என்ன சார், இன்னைக்கு யாராவது சிக்கினாங்களா?"

அந்த மனிதர் தன் வேஷத்தைக் கலைத்தபடி சொன்னார், "இல்லை, இன்னைக்கு ஒரு 'மனுஷன்' கிடைச்சான். நான் பல வருஷங்களுக்கு முன்னாடி ஒருத்தனை ஏமாற்றித்தான் இந்த வாழ்க்கையையே ஆரம்பிச்சேன். அந்தப் பாவம் என்னை நிம்மதியா தூங்க விடல. அதான் ஊர் ஊராப் போய் இப்படி திருடப் பார்க்குறவங்களை மனுஷனா மாத்திட்டு இருக்கேன். இன்னைக்கு ரவி திருந்துனது, அன்னைக்கு நான் செஞ்ச ஒரு பாவத்துக்குக் கிடைச்ச பிராயச்சித்தம்."

கார் தூத்துக்குடி சாலையை விட்டு மறைந்தது, ரவியின் கையில் இருந்த பணம் இப்போது வெறும் காகிதமல்ல, அது ஒரு நேர்மையின் விதை.



-மை. சத்திய பாரதி

# ஔவையின் குறளும் ஆன்மீகப் பதிவும்

அதிகாரம் 3



▪Banumathi Nachiyar

## குறள் 6

நல்வினையும் தீவினையு முண்டு திரிதருஞ்
செய்வினைக்கும் வித்தா முடம்பு

விளக்கம்


சூட்சம உடம்பானது நல்வினைகளையும் தீவினைகளையும் அனுபவித்து திரியும் அன்றியும் உயிர்களால் செய்யப்படுகின்ற திருவினைகளுக்கும் காரணமாகும். சூட்சம உடம்பானது வினைகளை அனுபவிக்கவும் செய்யவும் காரணமாய் அமையும் என்பது கருத்து. ஸ்தூல தேகத்தின் ஆய பயன் என்பர் நல்வினையும் தீவினையும் உண்டு திரிதரும் செய்வினைக்கும் வித்தாகும் உடம்பு என்று கூறினார்.

## குறள் 7

உள்ளுடம்பின் வாழ்வன வொன்பதுமே
கள்ளவுடம் பாகி விடும்

விளக்கம்

சூட்சம தேகத்தில் வாழ்பவையாகிய ஒன்பது துவாரங்களும், உயிர்களுக்குத் திருட்டு உடம்பாக ஆகும் சூட்சம சரீரம் இவ்வொன்பது துவாரங்களுடன் கூடி வாழ்வதாகும் என்பது கருத்து. ஸ்தூல சரீரத்திற்கு உரியவை இந்த ஒன்பது துவாரங்கள். இறப்பின் போது ஆன்மா இவ்வொன்பதுடன், தலை, உச்சந்தலை ஆகிய இரண்டுடன் சேர்த்து பதினொரு துவாரங்கள் வழியாகப் பிரியும் என்பது அகத்தியர் விளக்கம். அதனை ஒட்டியே ஔவையாரும் நவ துவாரங்களுடன் சேர்ந்த உள்ளுடம்பின் வாழ்வாகிய ஸ்தூல சரீரம் கள்ள உடம்பாகிவிடும் என்கிறார்..



## குறள் 8

பொய்க்கெல்லாம் பாசனமா உள்ளதற்கோர்
வித்தாகு மெய்க்குள்ளா மாயு வுடம்பு

விளக்கம்

ஸ்தூல சரிரத்திற்கு உள்ளே இருக்கும் (மாய உடம்பு) சூட்சம உடம்பானது எல்லாப் பொய்களுக்கும் ஆதாரமாக இருக்கின்ற ஸ்தூல உடம்பிற்கு ஒரு ஆதாரம் ஆகும். பொய்யான ஸ்தூல உடம்பிற்குச் சூட்சம உடம்பு ஆதாரம் ஆகிறது. இதனையே சிவவாக்கியர் பொய் உடம்பு என்பதனை மண்கலம் கவிழ்ந்தபோது அடுக்கி அடுக்கி வைப்பர் நன்கலம் கவிழ்ந்த போது நாறும் என்று போடுவர் என்பர். காற்றடைத்த பையடா என்பது கூட இவ்வடம்பிற்கு உண்டான சொற்களே ஆகும் . "நந்தவனத்தில் ஓராண்டி என்றும் கூத்தாடி கூத்தாடி போட்டுடைத்தாண்டி!" இந்த ஸ்தூல உடம்பை மெய்யெனக் கொண்டு வாழும் மனிதர்கள் என்று கருதுவர். அழியும் உடம்பிற்கு எத்தனை ஆபரணங்கள் என்றும் கூறுவர் . ஔவையாரும் பொய்க்கு எல்லாம் பாசனமாய் உள்ளதற்கோர் வித்தாகும் மெய்க்குள்ளாம் மாய உடம்பு என்கிறார்.

(தொடரும்).

# தலையெழுத்தையே மாற்றவல்லது சிவபுண்ணியம்

அவர் ஒரு பிரபல ஜோதிடர். அவர் ஒருவருடைய ஜாதகத்தை கணித்து ஒரு விஷயத்தை சொன்னால், அது அந்த பிரம்மாவே சொன்னது போல. அந்தளவு ஜோதிடத்தில் பாண்டியத்மும் நிபுணத்துவமும் பெற்றவர்.

எனவே அவரை சந்தித்து தங்கள் எதிர்கால பலன்களை தெரிந்து கொள்ள பல ஊர்களில் இருந்தெல்லாம் மக்கள் வருவார்கள். தனது எதிர்காலம் குறித்தும் மிகவும் கவலை கொண்ட ஒரு ஏழை கூலித் தொழிலாளி அந்த ஜோதிடரை சந்திக்க வந்தான். "நான் மிகவும் வறுமையில் இருக்கிறேன். கடன் பிரச்சனை வேறு என்னை வாட்டுகிறது. எனக்கு இரண்டு பெண் குழந்தைகள் வேறு. அவர்களை எப்படி கரையேற்றப் போகிறேன் என்று தெரியவில்லை. நான் நன்றாக வாழ ஏதாவது வழி இருக்கிறதா? என்று என் ஜாதகத்தை பார்த்துச் சொல்லுங்கள்" என்று தன் ஜாதகத்தை கொடுத்தார். ஜோதிடரும் அந்த ஏழை தொழிலாளியின் ஜாதகத்தை கணிக்கத் தொடங்கினார். சோழிகளை உருட்டிப் போட்டார். கட்டங்களாய் ஆராய்ந்தார். ஒரு கட்டத்தில் ஜோதிடரின் முகம் சுருங்கியது.

பிறகு தொழிலாளியிடம், "ஐயா எனக்கு இன்றைய தினம் மிகவும் முக்கியமான பணி ஒன்று இருக்கிறது. உங்கள் ஜாதகத்தை சற்று விரிவாக ஆராய வேண்டி இருக்கிறது.

எனவே அது என்னிடம் இருக்கட்டும். நீங்கள் இன்று போய் நாளை இதே நேரத்திற்கு வாருங்கள். நான் உங்களுக்கு அனைத்தையும் சொல்லிவிடுகிறேன்" என்றார்.

"சரிங்க ஐயா நான் நாளைக்கு வர்றேன். இப்போ பார்த்ததுக்கு எதாச்சும் தரணுமா ஐயா?" என்று ஜோதிடரிடம் கேட்டார். "அதெல்லாம் ஒன்னும் வேண்டாம்... நாளைக்கு வரும் போது கொடுங்க போதும்..." "ரொம்ப நன்றிங்க ஐயா... நான் நாளைக்கு வர்றேன்..." தொழிலாளி அங்கிருந்து புறப்பட்டார். அப்போது அங்கு வந்த ஜோதிடரின் மூத்த மகள், "அப்பா, ஏன் அவர்கிட்டே அவசர வேலை இருக்குன்னு சொல்லி அனுப்பினீங்க? இன்னைக்கு எனக்கு வேலை எதுவும் இல்லை. முழுக்க முழுக்க வர்றவங்களுக்கு ஜாதகம்தான் பார்த்து பலன் சொல்லப் போறேன்னு சொன்னீங்க?" என்று கேட்டாள். அதற்கு ஜோதிடர், "அம்மா, அவரது ஆயுட்காலம் இன்றிரவு முடியப் போகிறது. அவரது ஜாதகம் உணர்த்துவது அதைத்தான். மேலும் சோழி உருட்டி கூட பார்த்து விட்டேன். பரிகாரம் செய்வதற்கு கூட அவருக்கு அவகாசம் இல்லை. இதை அவரிடம் தெரிவிக்க மனமில்லை. அதனால்தான் பொய் சொல்லி அவரை இங்கிருந்து அனுப்பினேன் பாவம்" என்றார். இதற்கிடையில் அந்த தொழிலாளி தனது ஊரை நோக்கி வயல் வெளிகளுக்கு இடையே நடந்து கொண்டிருந்தார். அப்போது திடீரென வானம் மேகமூட்டமாகி இருள் சூழ்ந்தது. சிறிது நேரத்தில் மழைதூற ஆரம்பித்து வலுப்பெற்று, இடியுடன் பலத்த மழை கொட்டியது. வயல்வெளிக்குள் ஒதுங்க இடமின்றி, ஓட்டமும் நடையுமாக அந்த தொழிலாளி விரைந்து நடக்க ஆரம்பித்தான். சற்று தூரத்தில் ஏதோ ஒரு



ஆள் அரவமற்ற கோவில் போன்ற கட்டிடம் ஒன்று தென்பட, அதை நோக்கி ஓடினான் தொழிலாளி. அது ஒரு பாழடைந்த சிவன் கோவில். அங்குசென்று மழைக்கு ஒதுங்கினான் அந்த தொழிலாளி. மண்டபத்தில் நின்றிருந்த அவர் சிதிலமடைந்து கிடக்கும் கோவிலின் நிலைமையைக் கண்டு மிகவும் வருந்தினார். "ஈசன் குடியிருக்கும் கோவில் இப்படி கவனிப்பாரற்று சிதிலமடைந்து காணப்படுகிறதே. நான் மட்டும் ஏழையாக இல்லாமல் பண வசதியுடன் இருந்தால் இந்த கோவிலைப் புதுப்பித்து கும்பாபிஷேகம் செய்து விடுவேன்' என்று நினைத்துக் கொண்டார். அத்துடன் அவர் மனஓட்டம் நிற்காமல் சிவன் கோவிலை தான் புதுப்பிப்பதாக மானசீகமாக நினைத்துக் கொண்டார். கோபுரம்,ராஜகோபுரம், பிராகாரங்கள், மண்டபங்களை திருப்பணி செய்து சீரமைத்தார். கும்பாபிஷேகத்திற்கு புரோகிதர்களை அமர்த்தி வேத மந்திரங்கள் முழங்க திருக்குடத்தை ஊர்வலமாக எடுத்து வந்து கும்பாபிஷேகம் நடத்தி, கருவறையில் உறையும் இறைவனை வணங்குவது போல் தனது சிந்தனையை ஓட விட்டார்.

அந்த சிந்தனையினூடே அவர் மண்டபத்தின் மேற்பகுதியைப் பார்த்த போது, அங்கே அவரது தலைக்கு மேல் நல்ல பாம்பு ஒன்று படமெடுத்து அவரை கொத்த தயாராக இருப்பது கண்டு அதிர்ச்சியடைந்தார். வினாடி கூட தாமதிக்காமல் அம்மண்டபத்தை விட்டு வெளியே ஓடினார். இவர் வெளியே வந்தது தான் தாமதம், அடுத்த நொடி ஒரு பேரிடி விழுந்து அந்த மண்டபம் இருந்த பகுதி அப்படியே நொறுங்கி தூள் தூளானது. அதில் ஒரு கல்லானது இவர் கால் மேல் விழுந்து தெறிக்க சிறு காயத்துடன் இவர் தப்பினார். நாகத்தை கண்ட அதிர்ச்சியிலிருந்தே மீளாத அந்த தொழிலாளி மேலும் அதிர்ச்சியில் உறைந்து போனார். அப்போது சரியாக இரவு ஏழரை மணி. வீட்டுக்கு சென்று தன் மனைவி மக்களிடம் தான் தப்பித்த கதையை திகிலுடன் கூறினார். மறுநாள் மாலை வழக்கம் போல ஜோதிடரை சந்திக்க சென்றார். தொழிலாளியை பார்த்த ஜோதிடருக்கு ஆச்சரியம் தாங்க முடியவில்லை. அவரை வரவேற்று அமர வைத்து விட்டு ஒரு வேளை தான் சரியாக பலன் கணிக்கவில்லையா என்ற சந்தேகத்துடன் மீண்டும் அந்த தொழிலாளியின் ஜாதகத்தை ஆராய்ந்தார். ஜோதிட நூல்களை, ஓலைச் சுவடிகளை மீண்டும் புரட்டினார். அவர் கணக்கு சரியாகவே இருந்தது. பின் அவர் எப்படி பிழைத்தார்?

இதுபோன்ற கண்டத்திலிருந்து தப்பிக்க வேண்டுமென்றால், அந்த நபர் சிவன் கோவில் ஒன்றைக் கட்டி அதற்கு கும்பாபிஷேகம் செய்த புண்ணியம் பெற்றிருக்க வேண்டும் என்று ஜோதிட நூல்களில் பரிகாரம் குறிப்பிடப்பட்டிருந்தது. ஆனால் இவரோ பரம ஏழை. அந்த பரிகாரத்தை இவர் சொல்லியிருந்தாலும் அதை இவரால் செய்திருக்க முடியாது. இவரால் எப்படி கோவில் கட்டி கும்பாபிஷேகம் செய்ய முடியும்? அதுவும் ஒரு இரவுக்குள்? இப்படி பலவாறு சிந்தித்த படி, "நேற்றிரவு என்ன நடந்தது?" என்று அந்த தொழிலாளியிடம் கேட்டார். ஜோதிடர் தான் சென்றபோது மழை பெய்ததையும், அப்போது மழைக்கு ஒரு பாழடைந்த சிவாலயத்தின் பக்கம் தான் ஒதுங்கியதையும் கூறினார். மேற்கொண்டு என்ன நடந்தது என்று ஜோதிடர் ஆர்வத்துடன் கேட்க, இவர் அந்த சிதிலமடைந்த ஆலயத்தை பார்த்த வருத்தமுற்றதாகவும், பணமிருந்தால் கும்பாபிஷேகம் செய்து வைக்கலாமே என்று தான் கருதியதாகவும் கூறினார். ஜோதிடருக்கு அடுத்த நொடி அனைத்தும் விளங்கிவிட்டது. இந்த தொழிலாளி மனதளவில் செய்ய நினைத்த சிவாலய புனருத்தாரனமும் கும்பாபிஷேகமுமே அவருக்கு முழுமையான பலன்களை தந்து ஈசனருளால் அவரது விதி மாற்றி எழுதப்பட்டதை உணர்ந்து கொண்டார். "இது உங்களுக்கு மறுஜென்மம். அதுவும் ஈசன் கொடுத்த ஜென்மம். இனி உங்களுக்கு எந்தக் குறையும் இருக்காது போய் வாருங்கள்" என்று அவரை வழியனுப்பி வைத்தார். ஆக, போகிற போக்கில் நம்மிடம் தோன்றும் நல்ல சிந்தனை கூட நமது விதியை மாற்ற வல்லவை. எனவே எப்போதும் நல்லதையே நினைக்க வேண்டும். அந்த தொழிலாளிக்கு அடிப்படையிலேயே நல்ல சிந்தனையும் பக்தியும் இருந்ததால் மழைக்கு ஒதுங்கிய இடத்தில் அப்படி ஒரு சிந்தனை தோன்றி அதன் மூலம் விதி மாற்றி எழுதப்பட்டது.

நீங்கள் சிவபுண்ணியச் செயல்களில் தொடர்ந்து ஈடுபட்டு வரவேண்டும்.

சிவபுண்ணியம் என்பது மிக மிக எளிமையானது. ஆனால், தலையெழுத்தையே மாற்ற வல்லது. அந்த தொழிலாளி அன்றிரவு இடி தாக்கி மரணமடைய வேண்டும் என்பது விதி. ஆனால் அவர் மனதால் செய்த சிவபுண்ணியம் அவரை கடைசி நேரத்தில் காப்பாற்றி விட்டது.

இதன் பெயர் தான் வினை சுருங்குதல். அதாவது அனுபவித்தே தீரவேண்டும் என்ற விதியை மாற்றுவது. தலைக்கு வருவதை தலைப் பாகையோடு போகச் செய்யும் சக்தி சிவபுண்ணியத்துக்கு உண்டு.

**நடேஷ் கன்னா**
கல்லிடைக்குறிச்சி.

# தினம் ஒரு தலைவர்கள் — தாரா ராணி ஸ்ரீவஸ்தவா வரலாறு

தாரா ராணி ஸ்ரீவஸ்தவா ஒரு இந்திய சுதந்திரப் போராட்ட வீரர் , மேலும் மகாத்மா காந்தியின் வெள்ளையனே வெளியேறு இயக்கத்தின் ஒரு பகுதியாக இருந்தார் . அவரும் அவரது கணவர் புலேந்து பாபுவும் பீகாரின் சரண் மாவட்டத்தில் வசித்து வந்தனர் . 1942 ஆம் ஆண்டில், அவரும் அவரது கணவரும் சிவானில் காவல் நிலையத்தை நோக்கி ஒரு பேரணியை வழிநடத்திச் சென்றபோது, அவர் போலீசாரால் சுடப்பட்டார். இருப்பினும், அவர் அணிவகுப்பைத் தொடர்ந்தார், பின்னர் திரும்பி வந்தபோது அவர் இறந்துவிட்டதைக் கண்டார். ஐந்து ஆண்டுகளுக்குப் பிறகு நாட்டின் சுதந்திரம் வரை அவர் சுதந்திரப் போராட்டத்தில் ஒரு பகுதியாக இருந்தார்.

தனிப்பட்ட வாழ்க்கை மற்றும் சுதந்திரப் போராட்டம் ஸ்ரீவஸ்தவா பாட்னா நகருக்கு அருகிலுள்ள சரண் என்ற இடத்தில் பிறந்தார் . அவர் சிறு வயதிலேயே புலேந்து பாபுவை மணந்தார். பாலின சமத்துவமின்மை அதிகரிக்க வழிவகுத்திருக்கக்கூடிய பொதுத் திட்டங்களைத் தொடர்ந்து, தாரா ராணி தனது கிராமத்திலும் அதைச் சுற்றியுள்ள பகுதிகளிலும் உள்ள பெண்களை பிரிட்டிஷ் ராஜ்ஜியத்திற்கு எதிரான போராட்டங்களில் சேரத் தூண்டினார் .

ஆகஸ்ட் 12, 1942 அன்று, மகாத்மா காந்தியின் அழைப்பின் பேரில், அவரும் அவரது கணவரும் சிவான் காவல் நிலையத்திற்கு முன்னால் இந்தியக் கொடியை ஏற்றுவதற்காக ஒரு பேரணியை ஏற்பாடு செய்தனர் , இது "ஒரு பெரிய எதிர்ப்பாக" பார்க்கப்படும். காவல்துறையினர் கொடியை ஏற்றுவதைத் தடுத்ததால், போராட்டக்காரர்கள் மீது லத்தி தாக்கினர் . அவர்களால் கட்டுப்பாட்டைப் பெற முடியாதபோது, காவல்துறையினர் துப்பாக்கிச் சூடு நடத்தினர். துப்பாக்கிச் சூட்டில் காயமடைந்தவர்களில் புலேந்து பாபுவும் ஒருவர். இருப்பினும், பாபுவின் காயங்களை தனது சேலையிலிருந்து கிழிந்த துணியால் கட்டிய பிறகு, தாரா ராணி காவல் நிலையத்திற்கு தனது அணிவகுப்பைத் தொடர்ந்தார், அங்கு அவர் கொடியை ஏற்ற முயன்றார்; திரும்பி வந்தபோது, தனது கணவர் காயங்களால் இறந்துவிட்டார் என்பதைக் கண்டுபிடித்தார். ஆகஸ்ட் 15, 1942 அன்று, தனது கணவரின் நாட்டுக்கான தியாகத்தை நினைவுகூரும் வகையில் சாப்ராவில் ஒரு பிரார்த்தனைக் கூட்டம் நடைபெற்றது . ஆகஸ்ட் 15, 1947 அன்று இந்தியப் பிரிவினை வரை அவர் சுதந்திரப் போராட்டத்தில் தொடர்ந்து பங்கேற்றார்.

"நாம் அபாலா என்று அழைக்கும் பெண் சபாலாவாக மாறும்போது, ஆதரவற்றவர்கள் அனைவரும் சக்தி வாய்ந்தவர்களாக மாறுவார்கள்." மகாத்மா காந்தி 1936 டிசம்பரில் அகில இந்திய மகளிர் மாநாட்டில் உரையாற்றும்போது இவ்வாறு கூறினார். இந்திய சுதந்திரப் போராட்டத்தில் பெண்களின் பங்களிப்பு குறித்த மகாத்மா காந்தியின் நம்பிக்கையை இந்த மேற்கோள் உறுதிப்படுத்துகிறது. பெண்கள் மட்டும் இல்லாவிட்டால் - அவர்களின் தியாகங்கள் மற்றும் ஞானம் பெற்றிருக்காது, இந்தியாவின் இரட்சிப்பு அடையப்பட்டிருக்காது. இந்தியப் பெண்கள் எடுக்கும் பொறுப்பு எப்போதும் சுதந்திரப் போராட்டத்தில் மைய இடத்தைப் பிடிக்கும். பெண்களின் பங்கேற்பு ஒரு வகையான நடவடிக்கைக்கு மட்டும் மட்டுப்படுத்தப்படவில்லை, எடுத்துக்காட்டாக, காட்டுமிராண்டித்தனமற்ற சத்தியாக்கிரக இயக்கம். சமூகத்தின் அனைத்து அடுக்குகளிலிருந்தும் தங்கள் தாயகத்தின் சுதந்திரத்தைப் பெறுவதற்காக ஏராளமான பெண்கள் தங்கள் வாழ்க்கையை அர்ப்பணித்தனர். ராணி லட்சுமி பாய், சரோஜினி நாயுடு அல்லது அன்னி பெசன்ட் போன்ற சில அடிக்கடி மீண்டும் மீண்டும் கூறப்படும் பெயர்களைத் தவிர, இந்தியாவின் சிறிய பகுதிகள் மற்றும் உள்நாட்டிலிருந்து பல பெண்களின் சுதந்திரப் போராட்டத்தின் பங்களிப்பு பல ஆண்டுகளாக குறைவான கவனத்தைப் பெற்றுள்ளது. இந்தியாவின் மூலை முடுக்குகளிலும் தேசபக்தியைத் தூண்டுவதில் உடனடி பங்காற்றிய இந்த துணிச்சலான பெண் தலைவர்களின் குரல்கள் நமது வரலாற்றுப் புத்தகங்களில் இடம் பெறவில்லை. நமது சுதந்திர இயக்கத்தின் குறிப்பிடத்தக்க தூணாக இருந்த இந்த இந்தியப் பெண் துணிச்சலான இதயங்களை நாம் நினைவில் வைத்துக் கொண்டு, அவர்களின் முகங்களை நிழல்களிலிருந்து வெளியே கொண்டு வர வேண்டிய நேரம் இது.



அங்கீகரிக்கப்பட்ட பெரும்பாலான பெண் சுதந்திரப் போராளிகள் உயரடுக்கு அல்லது நடுத்தர வர்க்க பின்னணியைச் சேர்ந்தவர்கள் என்றாலும், அவர்களின் எண்ணிக்கை ஒரு சிலரே. பிரிட்டிஷ் ராஜ்ஜியத்தை எதிர்த்துப் போராடிய, தன்னலமற்ற தியாகங்களைச் செய்த, பழமைவாத குடும்பங்கள் மற்றும் முறையான கல்வி இல்லாத பல சாதாரண முகங்கள் இருந்தன. புறக்கணிக்கப்பட்ட ஒரு மறக்கப்பட்ட பெண்மணி திருமதி தாரா ராணி ஸ்ரீவஸ்தவா. பீகாரில் சரண் மாவட்டத்தில் ஒரு எளிய குடும்பத்தில் பிறந்த அவர், இளம் வயதிலிருந்தே சுதந்திரப் போராட்டத்தில் ஆர்வமாக இருந்தார். 13 வயதில் சுதந்திரப் போராட்ட வீரர் புலேந்து பாபுவை மணந்தார், ஆனால் திருமணம் அவரது தேசபக்தி உணர்வுகளைத் தடுக்கவில்லை. அவரது கணவர் மகாத்மா காந்தியின் வெள்ளையனே வெளியேறு இயக்கத்தில் தீவிரமாக பங்கேற்றார். திருமணத்திற்குப் பிறகு ஒவ்வொரு நாளும் தாரா ராணியின் தேசபக்தி உணர்வு மேலும் மேலும் அதிகரித்தது, மேலும் அவர் வசித்து வந்த பாரம்பரிய சமூகத்தைப் பற்றி அவர் கவலைப்படவில்லை. பெண்கள் வீட்டை விட்டு வெளியே வராத ஒரு காலத்தில், காந்திஜியின் சுதந்திரப் போராட்டத்தைப் பற்றி அவர்களுக்குக் கற்பிக்க ஒத்த எண்ணம் கொண்ட பெண்களை அவர் ஒன்று திரட்டினார். சுற்றியுள்ள கிராமங்களில் இருந்து பெண்களை அவர் ஊக்குவித்து, பிரிட்டிஷ் ஆட்சிக்கு எதிராகப் போராட அவர்களைத் தூண்டினார். கிராமப்புறப் பின்னணியைச் சேர்ந்த பெண்களுக்கு ஒரு உந்துதலாக தாரா ராணி உருவெடுத்து, வெள்ளையனே வெளியேறு இயக்கத்தில் பங்கேற்க அவர்களைத் தூண்டினார்.

அவரது முன்மாதிரியான துணிச்சலும் அர்ப்பணிப்புள்ள தேசபக்தியும் ஒரு சம்பவத்தால் சிறப்பிக்கப்பட்டன, இது அவரது சட்டத்தை சாதாரண பெண்களிடமிருந்து ஒரு சுதந்திரப் போராட்ட வீரராக உயர்த்தியது, அதற்கு உரிய பெருமை அளிக்கப்பட வேண்டும். ஆகஸ்ட் 12, 1942 அன்று, மகாத்மா காந்தி சிவானின் காவல் நிலையத்தின் கூரையில் தேசியக் கொடியை ஏற்றுமாறு அழைப்பு விடுத்தார். புலேந்து பாபு தேசியக் கொடியை ஏற்றுவதற்காக ஆண்களும் பெண்களும் ஒரு பெரிய கூட்டத்தைக் கூட்டினார், அவருடன் தோளோடு தோள் நின்று கொண்டிருந்தார், அவரது மனைவி தாரா ராணி ஸ்ரீவஸ்தவாவும் அவருடன் தோளோடு தோள் நின்று கொண்டிருந்தனர். திருமணத்திற்குப் பிறகு சிறிது நேரத்திலேயே தம்பதியினர் பிரிட்டிஷ் நிர்வாகத்திற்கு எதிராக கூட்டத்தின் முன் பாறைகள் போல நின்று தங்கள் தாய்நாட்டின் மீதான அன்பால் நிரப்பப்பட்டனர். காவல் நிலையத்தின் கூரையில் தேசியக் கொடியை ஏற்றி, ஆங்கிலேயர்களுக்கு எதிராக ஒருங்கிணைந்த இந்தியாவின் சக்தியை நிலைநாட்டுவதே அவர்களின் நோக்கமாக இருந்தது.

பிரிட்டிஷ் ராஜ்ஜிய எதிர்ப்பு முழக்கங்களை எழுப்பி, தாரா ராணியின் கைகளில் மூவர்ணக் கொடியையும், ஆண்கள் மற்றும் பெண்கள் அடங்கிய ஒரு பெரிய கூட்டத்தையும் ஏந்தி, சரண் காவல் நிலையத்தை நோக்கி அவர்கள் சென்றனர். ஆர்ப்பாட்டத்தைக் கட்டுப்படுத்த காவல்துறையினர் போராட்டத்தில் ஈடுபட்டிருந்த மக்கள் மீது தடியடி நடத்தினர். ஆனால் நிர்வாகத்தின் மிருகத்தனத்தால் போராட்டம் வேகம் பெற்றது, போராட்டக்காரர்கள் கட்டுப்படுத்த முடியாதபோது, காவல்துறையினர் அவர்கள் மீது துப்பாக்கிச் சூடு நடத்தினர். புலேந்து பாபு விரைவில் காவல்துறையினரின் குண்டுகளுக்கு பலியானார், ஆனால் தாரா ராணி அஞ்சா நெஞ்சத்துடன் இருந்தார். அவர் நினைத்துப் பார்க்க முடியாததைச் செய்தார், தனது கணவரின் காயத்திற்கு கட்டு போட்டது மட்டுமல்லாமல், தேசியக் கொடியை கையில் ஏந்தியபடி காவல் நிலையத்தை நோக்கி அணிவகுத்துச் சென்றார். சுதந்திரப் போராட்டத்திற்கான அவரது அர்ப்பணிப்பு அந்த அளவுக்கு இருந்தது, அவர் தனது நாட்டின் சுதந்திரத்தை தனது வாழ்க்கையின் ஒரே நோக்கமாகக் கொண்டார். அவர் திரும்பி வந்த நேரத்தில், அவரது கணவர் காவல்துறையினரின் துப்பாக்கிச் சூட்டுக்கு ஆளாகி இறந்துவிட்டார். இளம் வயதிலேயே புதிதாகத் திருமணமான பெண்மணியாகவும், பழமைவாத சமூகத்தைச் சேர்ந்தவராகவும் இருந்ததால், திருமண விதிகளை கடைபிடித்து, தனது கணவரைப் பாதுகாக்க இறந்திருக்க வேண்டும். அதற்கு பதிலாக, தேசபக்தியின் உணர்வு அவளது நரம்புகளில் மிகவும் ஊசலாடியதால், அவள் திருமணத்தை விட தனது நாட்டின் சுதந்திரத்தைத் தேர்ந்தெடுத்தாள்.

தனது கணவர் இறந்ததைக் கண்டதும் தாரா ராணி அமைதியாக இருந்தார். 1942 ஆகஸ்ட் 15 ஆம் தேதி சாப்ராவில் (பீகார்) தனது கணவரின் நினைவாக ஒரு பிரார்த்தனைக் கூட்டம் ஏற்பாடு செய்யப்பட்டது. தனது கணவர் நாட்டின் மகத்தான நோக்கத்திற்காக தனது உயிரைத் தியாகம் செய்ததை அவள் புரிந்துகொண்டாள். அவளுடைய காலத்தில் ஒரு பெண்ணிடமிருந்து பலர் எதிர்பார்த்தது போல் அவளுடைய தேசபக்தி அவளுடைய கணவருடன் இறக்கவில்லை.

# நாளை மதுரையில் கருப்பு இசை வெளியீடு




ஆர்.ஜே.பாலாஜி இயக்கத்தில் சூர்யா 'கருப்பு' படத்தில் நடித்துள்ளார். கதாநாயகியாக த்ரிஷா நடித்துள்ளார். நட்டி நட்ராஜ், யோகி பாபு, சுவாசிகா, சிவதா உள்ளிட்டோர் இணைந்து முக்கிய கதாபாத்திரங்களில் நடித்துள்ளனர். இதனை டிரீம் வாரியர் பிக்சர்ஸ் நிறுவனம் தயாரிக்க, சாய் அபயங்கர் இசையமைக்கிறார். இதில் கருப்பு திரைப்படம் வருகின்ற மே 14ம் தேதியன்று திரைக்கு வருகிறது. இதையொட்டி கருப்பு படத்தின் இசை வெளியீட்டு விழாவை வருகின்ற ஏப்ரல் 26ம் தேதியன்று மதுரையில் உள்ள தனியார் பாலிடெக்னிக் கல்லூரியில் நடத்த திட்டமிட்டுள்ளனர் என அறிவிப்பு வெளியாகியுள்ளது.


இளம் நடிகை க்ரித்தி ஷெட்டி தற்போது தமிழிலும் அதிகம் கவனம் செலுத்த தொடங்கி இருக்கிறார். சமீபத்தில் ரிலீஸ் ஆன LIK படத்தில் நடித்து இருந்தார். ஆனால் படத்திற்கு கலவையான ரெஸ்பான்ஸ் தான் கிடைத்தது.

க்ரித்தி ஷெட்டி பட விழாக்களுக்கு வரும்போது செம கிளாமர் ஆன லுக்கில் வந்து ரசிகர்களை கவர்ந்து வருகிறார்.

தற்போது அவர் சேலையிலில் அழகிய போஸ் கொடுத்து இருக்கும் லேட்டஸ்ட் ஸ்டில்களை பாருங்க.



# ஏப்ரல் 24ல் மெக்சிகோவில் திரையிடப்படும் வாரணாசி பட காட்சிகள்!




மகேஷ் பாபு நடிப்பில் எஸ்.எஸ்.ராஜமவுலி இயக்கத்தில் உருவாகி வரும் படம் 'வாரணாசி'. இந்த படம் 2027ம் ஆண்டு ஏப்ரல் ஏழாம் தேதி திரைக்கு வருவதாக அறிவிக்கப்பட்டுள்ளது. அதோடு, மகேஷ் பாபுவுடன் பிரித்விராஜ், பிரியங்கா சோப்ரா, பிரகாஷ்ராஜ் ஆகியோர் முக்கிய வேடங்களில் நடித்து வருகிறார்கள்.

இந்நிலையில் உலக அளவிலான ரசிகர்களின் கவனத்தை ஈர்க்கும் வகையில் வருகிற ஏப்ரல் 24ம் தேதியான நாளை மெக்சிகோவில் வாரணாசி படத்தின் சிசிஎஸ்பி திரையிடப்படுவதாக இப்படத்தின் தயாரிப்பாளரான எஸ்.எஸ்.கார்த்திகேயா அறிவித்திருக்கிறார். அவர் அந்த நிகழ்ச்சியில் கலந்து கொள்ளும் நிலையில், ராஜமவுலி காணொளி மூலம் பார்வையாளர்களிடம் உரையாற்றுகிறார். இந்த நிகழ்ச்சியில் வாரணாசி படத்தின் ஆரம்பகட்ட காட்சிகள் மற்றும் படப்பிடிப்பின் பின்னணி காட்சிகள் என இதுவரை பார்த்திராத பிரத்யேக காட்சிகளை திரையிடுகிறார்கள்.

# சினிமாவில் அறிமுகமான ஜெனிலியாவின் மகன்



தனது குறும்புத்தனம் மற்றும் அப்பாவித்தனமான நடிப்பால் சந்தோஷ் சுப்பிரமணியம், சச்சின் உள்ளிட்ட படங்கள் மூலம் தமிழ் ரசிகர்களை கவர்ந்தவர் பாலிவுட் நடிகை ஜெனிலியா. கடந்த 2012ல் முன்பு பாலிவுட் நடிகரும், தயாரிப்பாளருமான ரித்தேஷ் தேஷ்முக் என்பவரை திருமணம் செய்துகொண்டு குடும்ப வாழ்க்கையில் செட்டிலானார். இவர்களுக்கு 12 வயதில் ரியான் என்கிற மூத்த மகனும் 10 வயதில் ராஹில் என்கிற இளைய மகனும் இருக்கின்றனர்.

தற்போது ரித்தேஷ் தேஷ்முக் மராத்தியில் உருவாகியுள்ள ராஜா சிவாஜி திரைப்படத்தை இயக்கியுள்ளதுடன் அந்த படத்தின் டைட்டில் கதாபாத்திரத்திலும் நடித்துள்ளார். மேலும் அபிஷேக் பச்சன் கதாநாயகனாக நடிக்க முக்கிய வேடங்களில் சஞ்சய் தத், வித்யா பாலன், ஜெனிலியா ஆகியோர் நடித்துள்ளனர். இந்த நிலையில் படத்தில் இளம் வயது சிவாஜி கதாபாத்திரத்தில் ஜெனிலியாவின் இளைய மகன் ராஹில் நடித்துள்ளார் என்கிற விவரம் வெளியாகி உள்ளது. அந்த வகையில் தந்தையின் டைரக்ஷனிலேயே முதன்முறையாக தனது நடிப்பு பயணத்தை துவங்கியுள்ளார் இந்த நட்சத்திர வாரிசு.

**நிழலோவியம்... நடிகை யாஷிகா ஆனந்த் க்ளிக்ஸ்!**



# பெத்தியில் ராம்சரணுடன் ஆடப்போவது சம்யுக்தா இல்ல ஸ்ருதிஷாசன்



ராம் சரண் நடிப்பில் தெலுங்கில் அடுத்ததாக வெளியாக இருக்கும் திரைப்படம் பெத்தி. இந்த படத்தில் ஜான்வி கபூர் கதாநாயகியாக நடிக்க புச்சிபாபு சனா இயக்கியுள்ளார். ஏ.ஆர்.ரஹ்மான் இசையமைத்துள்ளார். இந்த படம் முதலில் மார்ச் 27, பின்னர் ஏப்ரல் 30 என இரு முறை தேதி அறிவிக்கப்பட்டு தற்போது ஜூன் மாதம் வெளியாகும் என புதிய அறிவிப்பு சமீபத்தில் வெளியானது. இதற்கு காரணம் இந்த படத்தில் இன்னும் ஆறு நாட்கள் படப்பிடிப்பு, அதிலும் குறிப்பாக நான்கு நாட்கள் ஒரு பாடல் காட்சி படமாக்கப்பட இருக்கிறதாம். இந்த சிறப்பு பாடலில் ஒரு பிரபல நடிகையை ஆட வைப்பதற்கான பேச்சுவார்த்தை நடைபெற்று வந்ததாகவும் அதனால் தான் இந்த தாமதம் என்றும் சொல்லப்பட்டது.

இந்த பாடலில் மிருணாள் தாக்கூர், மானசா வாரணாசி ஆகியோர் ஆட இருப்பதாக சொல்லப்பட்டு பின்னர் சமீபத்தில் நடிகை சம்யுக்தா இந்த பாடலில் ஆட போகிறார் என்று ஒரு செய்தி பரவியது. இந்த நிலையில் சம்யுக்தாவும் இல்லை, இந்த பாடலுக்கு ராம்சரணுடன் ஆடப் போகிறவர் ஸ்ருதிஹாசன் தான் என்கிற தகவல் தற்போது வெளியாகி உள்ளது. இந்த பாடல் படப்பிடிப்பு வரும் ஏப்ரல் 26ம் தேதி முதல் நடைபெற இருக்கிறது என்றும் லேட்டஸ்ட் தகவல் வெளியாகி இருக்கிறது. கடந்த சில வருடங்களுக்கு முன்பு வெளியான எவடு என்கிற படத்தில் ராம்சரணுடன் ஸ்ருதிஹாசன் இணைந்து நடித்திருந்தார் என்பது குறிப்பிடத்தக்கது.

# வெங்கடேஷ் உடன் ஜோடி சேரும் கீர்த்தி



திருமணத்திற்கு பிறகு தெலுங்கில் விஜய் தேவரகொண்டா உடன் 'ரவுடி ஜனார்த்தனா' என்ற படத்தில் நடித்து வரும் கீர்த்தி சுரேஷ், அதையடுத்து தற்போது தெலுங்கு சினிமாவின் சீனியர் ஹீரோக்களில் ஒருவரான வெங்கடேஷ் நடிக்கும் புதிய படத்தில் கமிட்டாகியுள்ளார். இந்த படத்தில் இன்னொரு நாயகியாக கிர்த்தி ஷெட்டியும் ஒப்பந்தமாகி உள்ளார். அந்த வகையில் தன்னைவிட முப்பது வயது அதிகமான ஒரு நடிகருக்கு ஜோடியாக முதன்முறையாக இணைந்திருக்கிறார் கீர்த்தி சுரேஷ். இதனால் இந்த படத்தில் அவரது சம்பளம் கணிசமான அளவு உயர்த்தப்பட்டிருப்பதாகவும் கூறப்படுகிறது. ஜூன் மாதம் இப்படத்தின் படப்பிடிப்பு தொடங்கப்பட்டு, 2027 சங்கராந்திக்கு படத்தை திரைக்கு கொண்டு வர திட்டமிட்டுள்ளார்கள்.


Happy Birthday
HANEEKA SHERIN


ADVERTISE WITH US
CONTACT US
9438610756


WANTED:
FEMALE ANCHORS
Age 18 to 35
Good Looking
Work from Home
(Full-time/Part-time)
Salary: Rs. 20,000 to 50,000
Call / Whatsapp:
7789941009
9337501889


Vilambaram
We provide Targeted Leads to grow your buisness
Boost your business
Call:: 91 7789941009, 9337501889
www.vilambaram.com



எலாவூர் மிக அருகில்
சுண்ணாம்பு குளம்
Sqft ₹120/_
(மினிமம் 10000sqft)
Ph.9600660997


Seek Strive Succeed
Annai Violet Arts & Science College
(Affiliated to the University of Madras, Co-Ed | NAAC Accredited)
Key Features
BANK LOAN
UG & PG COURSES
SHIFT I
SHIFT II
CERTIFICATE COURSE
ADMISSIONS OPEN
Ph : 044-26861611 | 26864684 | 9344900911 | 6383425388


keerthi foundation
De Addiction Cum Rehabilitation Centre
INTERNSHIP & JOB OPPORTUNITIES
MSW & M.Sc Psychology – Freshers
Internship:
Clinical Training
Counseling Practice
Case Work
Jobs:
Social Worker
Jr Psychologist
Rehab Counselor
Build Your Career in De-Addiction & Mental Health Care
Call: 9841945060 | 7845027710
www.keerthifoundation.com


நிலம் தேவை
தெற்கு சென்னை
திருப்போரூர் to செங்கல்பட்டு ரோடு
1 to 2 ஏக்கர்
தொடர்புக்கு:
Ph. 6384617773


துபாயை தலைமையிடமாகக் கொண்டு
தமிழகத்தில் ஆரம்பிக்கப்பட்டுள்ள
உட்-பி குளோபல் பிரைவேட் லிமிடெட்
(Would Be Global Pvt Ltd)
ஆன்-லைன் வர்த்தக E-Commerce
நிறுவனத்திற்கு தாலுக்கா வாரியாக
பிரான்ச்சீஸ்கள் (Franchise) தேவை.
பொது மேலாளர்:
7092069555 / 7092047555


WANTED
FEMALE TELECALLER
EXP : FRESH / EXPERIENCED
SKILL : GOOD COMMUNICATION SKILL
LANGUAGES: KANNADA, TAMIL, TELUGU, ENGLISH, HINDI...
AGE : 18 YRS -60 YRS
SALARY - 10,000 & ABOVE
LOCATION : TIRUVATIYUR, CHENNAI
FOR PADMA MEDIA HOUSE
PadmaMedia House
Call/Whatsapp
94386 10756


WANTED:
செக்யூரிட்டி வேலைக்கு ஆண்கள் தேவை
வானகரம் பைபாஸ் ரோடு
முகப்பேர்
அம்பத்தூர்
பட்ரவாக்கம்
பெரம்பூர்
மாதவரம்
திருமுல்லைவாயல்
Ph. 9344183870
Ph. 8807470107
Call now for more details and interview.
APPLY NOW


SEVEN STARS LOGISTICS PVT.LTD.
we simplify shipping for your business
Our Services are ...
Freight Forwarding, International Courier, Customs Clearance, Cargo Movement by Air, Sea and Road, Door to Door Service.
# 2, 2nd floor, Krishnan Koil Street, George Town, Chennai - 600 001. INDIA.
+91 44 43570909 +91 96770 88843
info@sevenstarslogistics.com www.sevenstarslogistics.com


just499®
MLM SOFTWARE
All Types of MLM Software Solutions Available
Binary Unilevel Matrix Board Generation ROI / Investment
ONLY Rs. 499
Website: just499.com
Phone/WhatsApp: 7789951009
Email: orderjust499@gmail.com


Manjal Mart
தரமான ஆன்மீக பூஜை பொருட்களை குறைந்த விலையில் நிறைவாக வாங்க
20% OFF
www.manjalmart.com
7789951009
order@manjalmart.com


SADHANA DEVI.K
CAR WASH
SUPREME
Car Wash & Detailing
Car Foam Pressure Wash
Teflon Coating
Ceramic Wax Treatment
Under Chassis Painting
Interior Foam Wash / Stain Remover
Paint Correction / Protection
We Done Here
9840882711
7200043675
Supremecarwashchennai@gmail.com
No.17/4, Senniamman Koil Street, Tondiarpet, Chennai – 600 081.


அருள்மிகு ஸ்ரீ மாலையம்மன் சமேத அருள்மிகு சுப்பிரமணியர் துணை
அருள்மிகு திருச்செந்தூர் முருகர் துணை
ஸ்ரீ ஹரி ஜோதிட மையம்
ஜாதகம், திருமணப் பொருத்தம், ஜாமக்கோள், ஆரூடம் பார்க்கப்படும்.
தாம்பூல பிரசன்னம், சோழி பிரசன்னம், அஷ்ட மங்கல பிரசன்னம்
மேலும் திருமணம், புத்திர பாக்கியம், கல்வி, தொழில் ஆகியவற்றில் ஏற்பட்ட தடைகளுக்கு ஜோதிடரீதியான தீர்வு செய்யப்படும்.
ஜோதிட நிபுணர் இராஜபாளையம் இராமமூர்த்தி MA Astro
81899 08040 / 93425 03572
harisudhan1968@gmail.com


அருள்தரும் தெய்வம்
என்றும் நம் இல்லங்களில்
அற்புதமான ஆன்மீக செய்திகள், பரிகாரங்கள், ஸ்தல வரலாறு மற்றும் சுவாரஸ்யமான தகவல்கள் மாதம் இருமுறை படித்து ஆன்மீகத்தை அறியுங்கள்..
www.arultharumdeivam.com


WANTED
Retd, VRS, Home Makers, NRIs, Business Person
Contact
8248951872




### போர்

அகிலமெங்கிலும்
பொழியும் சமாதானமழை
அமிலமாகி முட்களை
எரிக்கட்டும் அமிழ்தமாகி
அகம்மலரும் பூக்கள்
சிரிக்கட்டும்!

கரும்பைக்கடித்துத்
தின்னாமல் இரும்பைக்
கடித்துக்குதறும்
வெறிப்பிடித்த பற்கள்
இரக்கமற்று நகைப்பதில்
வியப்பென்ன!

பொங்கியெழும்
பொறாமையில் உதயமாகும்
கறுப்புக்கதிரவன்
விடியலுக்கு
வழிவகுப்பதில்லை!

தலைத்தூக்கும்
ஆணவத்தின் உச்சம்

அறத்தின் கண்களுக்கு
கந்தகத்துகள்களைத்
தூவி இரசிக்கின்றன!

தன்கையால் தனக்கும்
தரணிக்கும் சூனியம்
வைக்கும் கரங்களால்
தக்காளியும் தங்கமாய்
விலை உயர்ந்து
பொருளாதாரத்தை
பாதாளத்தில் தள்ளுகின்றன!

பிறரை அழித்துவாழும்
ஈனவாழ்க்கையில் ஈரமில்லை!
தாய்மண்ணிற்கு
உதிரத்தை காணிக்கை
ஆக்குவதைவிட



நட்புணர்வினை
மாணிக்கமாக்குங்கள்
அதன் பிரகாசத்தில்
ஞாலமே ஒளிவீசட்டும்!

**கவிஞர்**
**த.அனந்தராமன்**
துறையூர்

---



என்ன ஆகி விடப்போகிறது
இந்த வாழ்க்கையை ஒரு கை
பார்த்துக்கொள்ளலாம்...
நல்லவனாக இருப்பதால்
தானே இவ்வளவு துன்பம்
என்கிறாய்... அப்படியே
இருந்து விடு...எவ்வளவு தான்
உடைப்பார்கள்
உடைக்க உடைக்க
நீ இன்னும் பலமிக்கவனாக
தான் ஆகிறாய்.. நெஞ்சைக்
கிழிக்கும் பெருந்துயர்கள்
பேராழம் பதிக்க விடாமல்
கடக்கப் பழகு...
இந்தப் பிரபஞ்சத்தில்
நல்லவனாக வாழ்வதே ஆகப்
பெரும் சாதனையே...
நான் நானாக என் இயல்பில்
இருப்பதைத் தான்
விரும்புகிறேன் ..
ஒப்பனைகள் நிறைந்த
உங்களின் முகங்களை
இதுதான் நீ என்கிறீர்கள்..
நீங்கள் எதிர்பார்க்கும்
நானாக இல்லாததால்
முரண்படுவதும்!
மாறுபட்டு நிற்பதுமாய்!
உங்களைக் கடந்து
வருவதென்பது
சற்றுக் கடினம் தான்...

ஒரு சிறு கருணை...
ஆறுதலாய் கரம் அழுத்தி
பாத்துக்கலாம் விடு என்ற
ஒற்றைச் சொல்.. இன்னும்
மிச்சமாய் அன்பாய் ஒரு
புன்னகை.. வேறென்ன
வேண்டும் விழுந்தவனுக்கு
துணிச்சலாய் மீண்டும்
மீண்டெழ...
எதுவும் முடிந்து விடவில்லை
இன்னும்..

**NISHAA**

---



### வாசம் !

என் தெருவினில் ஒரு
குழந்தை கடந்துசென்றது
யூகிக்க முடிகிறது பவுடர்
வாசனை....

ஒரு ஆண் கடந்து
சென்றதை அறிய முடிகிறது
சிகரெட்டின் நிக்கோடின்
வாசனை !



மல்லிகை
வாசம் வீசும்
போதெல்லாம்
உணர்கிறேன்...
நீ வருவதும்...
வந்து
போனதும்!

**எம்.பி.தினேஷ்.** கோவை

---



### கடமை வீரனாகு

தோழனோடு தெரு சுற்றி
தோல்வியை தழுவாதே!
தொடர்ந்து உழைத்து
தொழிலதிபராகு! சினிமா,
நாடகம் என சுற்றி
மனதை குழப்பாதே! புகை
பிடித்து புதுமைகாணாதே!
இளமையில் கற்று இளையர்
பட்டம் வாங்கு! பாரில் உயர
பாடுபடு! கன்னியர் பின்
சுற்றி காலத்தையும் காசையும்



கரியாக்காதே!
கடின
உழைப்பால்
கல்லையும்
கனியாக்கு!
காலம்
உன்னை
உயர்த்தும் கடமை வீரனாக!

**எஸ். சந்திரசேகரன்**
**அமுதா** செஞ்சிக்கோட்டை.

---

### "பல்தொழில் வித்தகர்கள் வீதி."

அச்சிற்றூரில் பல
தொழில் புரிபவர்களும்
குடியிருந்தார்கள்.

மளிகைக்காரர் வீடு
பால்காரர் வீடு வக்கீல் வீடு
மருத்துவர் வீடு தரகர் வீடு
தையல்காரர் வீடு
ஜோதிடர் வீடு
இப்படி இன்னும் எத்தனையோ
வீடுகள் அச்சிற்றூரில்
ஆங்காங்கே பரவி இருந்தது.

புதிதாக அச்சிற்றூருக்கு
வந்த தபால்காரர் கேட்டார்
இப்படி..

"எழுத்தாளர் ஏகாம்பரம்"
51, பல்தொழில் வித்தகர்கள்
வீதி, கைலாசபுரம். என்கிர
முகவரி இங்கே எங்கே
இருக்கு? என்று..!

அங்கே குடியிருந்த
எல்லோரும் அவர் கேட்ட இக்
கேள்விக்கு பதில் சொல்லத்
தெரியாமல் தவித்தார்கள்.
எதேச்சையாக அங்கு வந்த
எழுத்தாளர் ஏகாம்பரம் அது
நான்தாங்க..!

"பல்தொழில் வித்தகர்கள்
வீதி"ன்னு பெயர்வைத்ததை
இங்கு வசிப்போரிடம்
இன்னும் நான்
சொல்லவேயில்லை என்றார்
வேடிக்கையாக..!

### "வாடா மலர்கள்."

"அல்லிக்குளம்
தாமரைக்குளம் பூந்தமல்லி
திருமுல்லை வாயில்" எனும்
இந் நான்கு ஊர்களும்
மலர்களின் பெயர்களைக்
கொண்டிருப்பதை அறிந்த
கவிஞன் தன் கவித்
தொகுப்பு நூலில் அவற்றின்
பெயர்த் தலைப்பினை
வைத்து நறுக்குத்தெறித்தாற்
போன்று நாலு கவிதைகளை



எழுதி
வெளியிட்டான்.
அவனெழுதிய
அந் நாலு
கவிதைகளும்
அன்றுமுதல்
என்றென்றும்
பேசப்படும் "வாடாமலர்"
கவிதைகள் ஆயின..!

**கவிச்சாரல் கொள்ளிடம்**
**காமராஜ்,** திருச்சி

---

### போராடு மகனே..

தூங்கிடுவாய்
என்பதனால் தாலாட்டுப்
பாடவில்லை!..
ஏங்கிடுவாய்
என்பதனால இமைமூட
விடுவதில்லை!
தாங்கிடுவாய்
போர்வாளை
தமிழச்சிமகனே! நீ..
ஓங்கிஅடி.. உதைத்து
எழு.. உறக்கமில்லை
மகனே!

இனப்பகையை சாய்க்க
இளங்கன்றே எழுவாய்!
மனக்குகையில்
உறங்கும்..
வரிப்புலியை எழுப்பு!

கா்னமுயலெய்த
வேலெத்தல் வீனே..
யானையினை நோக்கு
தவறிடினும் நன்றே!
சினம் அழகு இங்கே
சீற்றமொரு ஆயுதம்!
இனமானம் ஒன்றே நம
இன்னுயிராம் அறிவாய்!

மொழியுணர்வு அற்றே
முகிழ்ந்துவரும் காலை
பழியன்றால் அஞ்சி..
பாய்ந்து மார் தாங்கும்!
விழிகளையே விற்று
சித்திரம் வாங்குவாயோ
போர்வாளை வாங்கு..
புதிய உலகம் அரும்பும்!

மலை மிதித்து ஏறு!
தலை சாய்த்து உறங்கா
களம் காண விழிப்பாய்
கானல்களைக்
கணிப்பாய்.
இனி உனது நாளே..
இதை அறிக மகனே!
துணிவுமிகக் கொண்டு
வாளேந்த வருவாய்!

புறையோடிப் போன
பழக்கங்களை புரட்டு..
மறை உனக்கு எது
எனில் திருக்குறளைக்
காட்டு! இறைவன்
எங்கு என்றால்
ஏழைமுகம் காட்டு!
திரையனைத்தும் நீக்கு.
திரு வாளைத் தூக்கு!

**வே.கல்யாண்குமார்.**

---

1. சிந்தித்து செயல்படத் தவறினால் பல சிக்கல்களை சந்திக்க நேரிடும்

2. நினைவுகளான பிறகு மனிதர்கள் நேசிக்கப்படுகிறார்கள்

3. வாழ்க்கை என்பது அதிசய கவிதை உனக்கு ஒரு அர்த்தம் எனக்கு ஒரு அர்த்தம்


4.அன்று செல்லும் கொடுத்து குழந்தைகளை வளர்த்தார்கள் இன்று செல்லை கொடுத்து குழந்தைகளை வளர்க்கிறார்கள்

5. யாருக்கும் பிடித்தவர்களாக இல்லாமல் இருப்பதே மிகப்பெரிய சுதந்திரம்

---------------------------------------------

1. சொந்தமாக ஏதும் இருந்தால் தான் சொந்தம் கூட தேடி வரும்
2. நடுத்தர வர்க்கத்திற்கு இரண்டு கனவுகள் உண்டு ஒன்று எப்படியாவது சொந்த வீடு கட்டுவது மற்றொன்று எப்படியாவது கட்டிய வீட்டின் கடனை அடைப்பது

3. நிகழ்காலத்தில் கவனம் எடுத்துக் கொள் எதிர்காலம் தன்னைத் தனே புதுப்பித்துக்கொள்ளும்
4. பயன்படாது என எதுவும் இல்லை பயன்படுத்த



தெரியாதவர்கள் தான் அதிகம் உள்ளனர்
5. பெத்த பொண்ணு எக்ஸாம் பேப்பரும் ஒன்றுதான் இரண்டையும் கட்டிக் கொடுக்கிற வரை ஒரே டென்ஷன் தான்

**நடேஷ்கன்னா,** கல்லிடைக்குறிச்சி

---



### குறுங் கவிதைகள்

இல்லத்தரசிகள் பெரும்பாலும்
இதர அறைகளில் இருப்பதில்லை.
இடித்துப் பெரிதாகக் கட்டுங்கள்
இன்றே உங்கள் சமையலறையை.

'மழைக் காலம்' பொய்க்கலாம்
'மழைக்காதல்' பொய்ப்பதில்லை.
மாரிகால காதல் கவிதைகள்
மனதை விட்டு அகலுவதில்லை.

சிசி–டிவி காட்சிகளைச் சாட்சியாக்கித்
துப்பு துலக்குகிறது காவல்துறை.
சம்பளத்தில் சரிபாதியை அரசுக்குத்
திருப்பி அளித்தால் தேவலை.

மழையும் மழை–சார்ந்த செய்திகளும்
டிசம்பர் திங்களின் வாடிக்கை
மார்கழி இசைவிழாச் செய்திகள்
மாயமாகிப் போவது வேடிக்கை.

தலைப்பில்லாக் கவிதைகள்
தன்முனைக் கவிதைகளாகும்.
விலை மதிப்பில்லாக் கருத்துகளை
விதைப்பதும் அவையாகும்.

மரங்கள் எளிதாகக் கிடைப்பதால்
சிலுவைகள் உடன்படும் தயாரிப்புக்கு.
மனங்கள் பிராயச்சித்தம் பெறாததால்
நிலுவைகள் நிரந்தரம் பாவமன்னிப்புக்கு

ஓய்வூதியம் பெற்று வருகிறேன்
முப்பது ஆண்டுகள் உழைத்ததற்காக –
இளமைப் பருவம் முழுவதையும்
அரசுப் பணியில் தொலைத்ததற்காக.

பணி–ஓய்வு பெற்று, "பதினான்கு'
நாட்களில் விபத்தில் இறந்தார்
'நல்லவனோ?', 'கெட்டவனோ?'
விசாரிக்காமல்
நீதிமன்றக் காவலுக்கு அனுப்பிவந்தவர்.




புதிய நாட்குறிப்பைத்
திறந்ததும்
ஒவ்வொன்றாக விழத்
தொடங்கின
சென்ற ஆண்டின்
'நிறைவேற்றாத
புத்தாண்டு தீர்மானங்கள்'.

**முனைவர் வே. புகழேந்தி,**
பெங்களூரு.

---

# நூல் விமர்சனம்

"நூலின்றி அமையாது உலகு"
தொகுப்பாசிரியர் :
பேராசிரியர் தமிழ்த்தேனீ இரா. மோகன்
நூல் விமர்சனம் :
கவிஞர் இரா. இரவி
வானதி பதிப்பகம், 23,
தீனதயாளு தெரு, தி.நகர்,
சென்னை–17.
பக்கங்கள் : 244,
விலை : ரூ. 150







'நீரின்றி அமையாது உலகு' எவ்வளவு உண்மையோ அவ்வளவு உண்மை 'நூலின்றி அமையாது உலகு' என்பதும். நூலின் தலைப்பே நூலைப் படிக்க வேண்டும் என்ற ஆவலைத் தூண்டும் வண்ணம் உள்ளது. நூலாசிரியர் பேராசிரியர் தமிழ்த்தேனீ இரா. மோகன் அவர்கள் பேராசிரியர் பணியிலிருந்து ஓய்வு பெற்ற பின்பு மாதம் ஒரு நூல் எழுதி வருகிறார்கள். ஓய்வுக்கு ஓய்வு தந்து தொடர்ந்து தேனீயைப் போல் இயங்கி வருகிறார்கள்.

தமிழ்த்தேனீ என்ற பட்டத்திற்கு முற்றிலும் பொருத்தமானவர். புத்தகம் தொடர்பாக பலர் எழுதிய கட்டுரைகளை தேடிப்பிடித்து படித்து தொகுத்து நூலாக வழங்கி உள்ளார்கள். புத்தகம் தொடர்பாக பலர் எழுதியதை படித்து இருக்கிறோம். படித்துவிட்டு அப்படியே அதனை மறந்து விடுவோம். ஆனால் இந்த நூல் புத்தகத்தின் பெருமையை பறைசாற்றிடும் ஆகச் சிறந்த நூல் என்றே சொல்லலாம். புத்தகம் படிக்கும் பழக்கம் இல்லாதவர்கள் கூட இந்த நூல் படித்தால் புத்தகம் மீது காதல் பிறக்கும். வாசிப்பு வசமாகும்.

கூட்டணி நன்றாக இருந்தால் வெற்றிகள் குவியும். தமிழ்த்தேனீ இரா. மோகன், வானதி இராமனாதன் கூட்டணி நன்றாக அமைந்ததால் வெற்றியின் காரணமாக தொடர்ந்து நூல்கள் வந்த வண்ணம் உள்ளன. மிக நேர்த்தியாக தரமாக அச்சிட்டு வழங்கி வருவதால் இலக்கிய உலகம் வாங்கி மகிழும் என்பது உறுதி. நூலில் பலரது கட்டுரைகள் இருந்தாலும், குறிப்பாக சில மட்டும், பதச்சோறாக உங்கள் பார்வைக்கு.

"என்னைக் கவர்ந்த புத்தகங்கள்" டாக்டர் ஆ.ப.ஜெ. அப்துல் கலாம் அவர்கள் கருத்து :"புத்தகங்கள் எப்போதும் என் தோழர்கள், கடந்த ஐம்பது வருடங்களுக்கும் மேலாக அவை எனக்குக் கனவுகளைக் கொடுத்துள்ளன. தோல்வி நேரங்களில் அவை எனக்குத் துணிச்சலைக் கொடுத்துள்ளன". இலக்கிய இமயம் மு. வரதராசன் அவர்களின் "நல்ல நூல்" கட்டுரையில் இருந்து சில துளிகள் :"பண்புடையாரின் தொடர்பை விட, உயர்ந்த நூல்பயிற்சி மிக்க நன்மை தருவதாகும்".

திரு. ம.ரா.போ. குருசாமி அவர்களின் "ஒரு தீவில் நானும் சில புத்தகங்களும்" கட்டுரையில் : "பொது நூல்கள் எத்தனைதான் இருந்தாலும் அவரவர் மனப்பாங்குக்கும் தேவைக்கும் ஏற்ற வகையில் தனித்தனி நூல் தொகுப்புக்களை ஒவ்வொருவரும் வைத்துக் கொள்வது நல்லது". உண்மை தான். வீடு கட்டும் போது வரவேற்பறை, படுக்கையறை, பூஜையறை, சமையலறை, கழிவறை என்று திட்டமிடும் போது இனி நூலக அறை என்றும் ஒதுக்க வேண்டிய அவசியத்தை உணர்த்தி உள்ளார்.

திரு. அ. சீனிவாசன் எழுதிய, "என்னைக் கவர்ந்த நூல்கள்" கட்டுரையில் சிறு துளிகள் : "சுவை நிரம்பிய கதை, அருமையான நாடகப்பாங்கு, ஆழ்ந்த தத்துவ ஞானம், மெய்யுணர்வு இவை எல்லாம் ஒருங்கே கலந்த காவிய உலகம் கம்பனுடைய உலகம்" சாகிதய அகதெமி விருது பெற்ற திரு. இல.சே. கந்தசாமி அவர்கள் எழுதிய, "நல்ல நூல்களே நல்ல நண்பர்கள்" : "சில நூல்களைத் திரும்பத் திரும்பப் படியுங்கள். சிந்தியுங்கள். செயல்படுங்கள்".

புத்தகங்களைத் தேடி அலைந்த போது ரோஜா முத்தையா, "சென்னை மூர் மார்க்கெட் ஒரு புண்ணிய ஸ்தலம். எத்தனை தடவை இந்த ஸ்தலத்துக்கு யாத்திரை போய் வந்தாலும் அலுப்போ, சலிப்போ தோன்றுவதில்லை. எவ்வளவு பணத்தை இழந்துவிட்டு வந்தாலும் வருத்தம் தோன்றுவதில்லை. கையில் கொள்ளை கொள்ளையாகப் புத்தகங்களாக குவித்து விடக் கூடிய காலமாக இருந்தது முன்பு". முதுபெரும் எழுத்தாளர் ஜெயகாந்தன் புத்தகங்கள் கட்டுரையில், "இதயமே இல்லாத சமூகத்தின் இதயம் எதுவென்றால் புத்தகம். அதுதான் உலகத்திலேயே இல்லாத புதுமைகளையெல்லாம் நிகழ்த்திக் காட்டும்".

தொகுப்பாசிரியர், நூலாசிரியர், தமிழ்த்தேனீ இரா. மோகன் அவர்களும், அவருடைய இலக்கிய இணை தமிழ்ச்சுடர் நிர்மலா மோகன் அவர்களும், நானும், நீதியரசர் எம். கற்பகவினாயகம் அவர்கள் மதுரை வந்த போது, அரசினர் விடுதியில் சந்தித்து உரையாடி மகிழ்ந்தோம். அவரது கட்டுரை படித்தவுடன் மலரும் நினைவுகளாக மலர்ந்தது அவரது நினைவுகள். படியுங்கள், படியுங்கள், படித்துக் கொண்டே இருங்கள் நீதியரசர் எம். கற்பக வினாயகம்.

"ஒவ்வொரு செயலுக்கும் விளைவு உண்டு. இது ஆன்மிகம் சொல்லுகிற உண்மை. அறிவியலும் சொல்லுகிற உண்மை. அந்த விளைவு தாமதமாகலாம். ஆனால் அந்த விளைவு தாமதமாகிறபோது வட்டி போட்டு வந்து சேரும். படியுங்கள். மற்றவர்களைப் படிக்க வையுங்கள்".

பணம் எல்லோருக்கும் மனம் இருப்பதில்லை. வெகு சிலருக்குத்தான் பணமும் நல்ல மனமும் இருக்கும். நல்லி குப்புசாமி செட்டியார் அவர்கள், வருமானத்தில் ஒரு பகுதியை இலக்கியத்திற்கென செலவழித்து வரும் நல்ல மனதிற்கு சொந்தக்காரர். அவர் கட்டுரை "நூல்களின் துணை"!

"புத்தகங்கள் பொழுது போக்க உதவும் நண்பர்கள் மட்டுமல்ல, நல்லறிவு புகட்டும் ஆசான்கள், வழிகாட்டிகள் என்பது சிறுவயதிலேயே நான் கற்றுக்கொண்ட பாடம்". எழுத்து, பேச்சு, நிர்வாகம் மூன்று துறையிலும் முத்திரை பதித்துவரும் முதுமுனைவர் வெ. இறையன்பு இ.ஆ.ப. அவர்களின் "உயிருள்ள தோழர்கள்" கட்டுரையில் இருந்து, "புத்தகங்களைப் பொறுத்தவரையில் அவை உயிருள்ள ஒரு தோழன், இதயத்துடிப்புள்ள இன்னொரு உயிர், புத்தகம் என்பது நாம் துளிர் விடுகின்ற வாய்ப்புகளை ஏற்படுத்திக் கொடுக்கிறது.

இப்படி நூலில் உள்ளவற்றை எல்லாம் எழுதிக்கொண்டே போக ஆசை தான். நூல் விமர்சனத்தில் அனைத்தையும் எழுதுவது முறையன்று. கட்டுரைகள் மட்டுமல்ல, புத்தகம் தொடர்பான கவிதைகளும் உள்ளன. புரட்சிக் கவிஞர் பாரதிதாசன், கவிஞர்கள் ஈரோடு தமிழன்பன், வைரமுத்து, நெல்லை ஜெயந்தா ,தங்கம் மூர்த்தி, இந்த வரிசையில் இரா. இரவி-யான என் கவிதையும் இடம் பெற்றுள்ளது கண்டு மட்டற்ற மகிழ்ச்சி அடைந்தேன்.

இந்த நூல் முழுவதும் நூல்கள் பற்றியே உள்ளது. இந்த நூல் படித்தால் நூல் மீது பற்று இல்லாதவர்களுக்கும் பற்று பிறக்கும். நூல் முழுவதும் நூல் தவிர வேறில்லை. இந்த உலகம் இவ்வளவு நாகரீகம் வளர்ச்சி, அறிவியல் முன்னேற்றம் என அனைத்திற்கும் விதையாக இருந்தது நூல் தான்.

ஈடு இணையற்ற நூலின் சிறப்பை உலகிற்கு உணர்த்தும் வண்ணம் தொகுப்பாசிரியர், நூலாசிரியர், தமிழ்த்தேனீ இரா. மோகன் அவர்களின் கடின உழைப்பை உணர முடிகின்றது. பாராட்டுக்கள்.

தொகுப்பாசிரியர் : பேராசிரியர் தமிழ்த்தேனீ இரா. மோகன் அவர்களின் கடின உழைப்பைக் கண்டு வியந்து போகிறேன். எழுத்து ,பேச்சு இரண்டு துறையிலும் தனி முத்திரைப் பதித்து வருகிறார்கள் .இது வெகு சிலரக்கு மட்டும் வாய்த்திட்ட வரம். இவர் உணவு இல்லாமல் கூட ஒரு நாள் இருந்து விடுவார் .ஆனால் . ஒரு நாளும் நூல் வாசிக்காமல் இருக்க மாட்டார்கள். வாசிப்பை சுவாசம் போல நடத்துபவர் .நாமும் புத்தக வாசிப்பிற்கு என்று சில மணி நேரம் ஒதிக்கினால் வாழ்வில் வெற்றி பெறலாம் என்பபதை உணர்த்திடும் உன்னத நூல் .

---

### சொல்லின் கனம்

நாளையப் பொழுது
நல்லாதாய் விடியுமா?

வாய்மை கொண்டவனும்,
வல்லமை கொண்டவனும்,
பொய்மை பேசியவனும்,
தீரம் கொண்டவனும்,
ஆட்டிப்படைத்தவனும்
ஆடிக் காட்டினவனும்

உறக்கம் வராது
முரண்டு பிடிக்க
மருண்ட மனம் தவிக்க
புரண்டு படுக்க
வறண்ட வினாக்கள்...

நாளையப் பொழுது
நல்லாதாய் விடியுமா?

உற்ற துணை அருகில்
இருக்க;
"பொழுது விடிய
பார்க்கலாம்! அப்போது!
இப்போது உறங்குங்க"
ஒரு மிடறு நீர் விழுங்கி"

என்னுமொரு சொல்;

பின்னும் தரும்
ஒரு ஆனையின் பலம்

அமைதியுறும் மனம்
ஒரே ஒரு சொல்லினால்
எனின்;

வார்த்தையின் கனத்தையும்
முதன்மையையும்
அவர் அறிவார்; அப்போது!


வாய் திறக்கும் முன்.



இனி
கவனித்து
கருத்துடன்
பேசுவாரா?

இப்போது
அவர்
உறக்கம்
நாம் கலைக்கலாகுமா?

**சசிகலா விஸ்வநாதன்**






## ஜீவா..ஜீவா..ஜீவா..!

செங்கொடிக்கு சிவப்புநிறம்..
செவ்வானம் சிவப்புநிறம்..
பொங்குதழல் சிவப்புநிறம்..
பொதுவுடமை ஆகுமன்றோ.!
கங்குலுக்கும் சிவப்புநிறம்..
கண்களுக்குள்
சிவப்புநிறம்.. எங்கெங்கும்
உழைப்போர்க்கு
உதிரமெங்கும் சிவப்புநிறம்.!

செந்நிறத்தில் சிந்தனையை
சேர்த்துவொரு
சிலைசெய்தால்..
அந்தமுகம் தெரியுமன்றோ!
அவர்தோழர் ஜீவானந்தம்.!
நொந்தவர்க்குக்குரல்தருமே..
நொடிந்தவர்க்குச்
சிறைப்புகுமே..
சிந்துக்கவியாம்
பாரதியின்மேல்.. ஜீவனையே
வைத்திருக்கும்.!

பந்தமுடனே..
பசித்தவர்க்கே.. பூவாத்தான்
வேண்டுமென்றே..
படபடக்கும் தோழர்
ஜீவா..! தந்ததெல்லாம்
பொதுவுடமை..! தமிழமுதச்



சொல்லெடுத்து
சிந்துவதோ
கனல்ப்பேச்சு.!
சிந்தையெல்லாம்
தோழர் ஜீவா.!
செங்கொடியே
எங்கள் ஜீவா!

**வே.கல்யாண்குமார்.**

## சந்தோஷம் சந்தோஷம்...

குற்ற உணர்ச்சியில்
மனம் நிம்மதி இழந்து
தவிக்க வில்லை...
முன் தினம் வீடு தேடி
வந்து யாரும்
முகம் மலர்ந்து பேசி
என் சுயசிந்தனை முடிவுக்கு
எதிராய் முட்டுக்கட்டை
போடவில்லை...
போகும் பாதையில்
பலவந்தத் தோரணையில்
குறுக்கிட்டு
சபலம் தட்டும் வகையில்
சம்திங் எதையும் என்னிடம்
யாரும் தள்ள முயலவில்லை...
கடந்த வார காலத்தில்
அப்படி வாங்குவது ஒன்றும்
தப்பில்லை என்று
தவறான பாதைக்கு
எவனும் வக்காலத்து
வாங்கவுமில்லை...
எந்தத் தடவையும் இல்லாத
தெளிவில் குழப்ப ரேகை
எதுவும் படியாமல் மனம்
மாசுமருவில்லாமல்
பளிச்சென்று இருந்தது...
சின்ன வயதில் நான் படித்த
சொந்த ஊர் ஆரம்பப்
பாடசாலையில்
பயமோ பம்மாத்தோ
அழுக்கோ அபவாதமோ
எதுவும் இல்லாமல்
அக்மார்க் தரத்தில்
வாக்களித்து
ஜனநாயகத்துக்கு
வளம் சேர்த்த
பூரண திருப்தி...
உள்ளத்தில் பூப்பூவாய்
மலர்ந்த மகிழ்ச்சி...
முதன் முதலாக



இந்தத்
தடவை தான்
அடியேனுக்கு
சாத்தியமாகி
இருக்கிறது...
சந்தோஷம்...
சந்தோஷம்!

**நெல்லை குரலோன்**
பொட்டல் புதூர்



இன்னொரு முறை
வாய்ப்பில்லாத
அந்த மழைத்துளி
என் மீது பட்டுச் சிதறியதும்..
என் சிறகுகளை
நன்றாய் நனைத்துக்
கொண்டேன்.
என் திசைகளின் ஊடே
தனிமைச் சிறகடித்தல்..
கானகம் தவிர்த்து
நகருக்குள்
வரும்போதெல்லாம்
நிகழ்ந்து விடுகிறது
சில அறிமுகங்களும்..



மறு
பயணத்தில்
சில
நிராகரித்தல்
களும்.
ஆனாலும்
வனம் விட்டு
வராமலிருக்க முடிவதில்லை
அவ்வப்போதாவது.

**ரிஷபன்**



1. காயங்கள் இன்றி காலம்
எதையும் கொடுப்பது இல்லை

2. வளர்ந்த பிறகு
பென்சிலுக்கு பதிலாக
பேனாவை பயன்படுத்துவது
எதற்காக தெரியுமா
நாம் செய்யும் தவறுகளை
திருத்துவதும் அழிப்பதும்
கடினம் என
உணர்த்துவதற்கு தான்

3. வலிமை உள்ள போதே
சேமிக்க பழகு கடைசியில்
யாரும் கொடுத்து
உதவ மாட்டார்கள்.

4. சரியான நேரத்தில்
வெளிப்படுத்தப்படாத
அத்தனையும் வீண் தான்

5. வரதட்சணை இல்லாமல்
நின்று போகும் பெண்களின்
திருமணத்தை விட சொந்த
வீடு இல்லாமல் திருமணம்
ஆகாமல் இருக்கும்
ஆண்களே அதிகம்

-------------------

1. உழைப்பு சம்பாதித்து
கொடுக்கும் ஒழுக்கம்
சேமித்து கொடுக்கும்



2. குழந்தைகள்
மைதானத்தில் ஆடினால்
ஆடை மட்டும் மண்ணாகும்
குழந்தைகள் மொபைலில்
விளையாடினால் வாழ்க்கை
மண்ணாகும்

3. ஏழைகள் உணவை
தேடுகின்றனர் பணக்காரன்
பசியை தேடுகிறான்

4. எல்லா கேள்விகளுக்கும்
பதில் தெரிந்து விட்டால்
மனதில் நிம்மதி இருக்காது

5. நீ எதிர்கொள்ளும்
சவால்களில் தான் உன்
எதிர்காலம் அடங்கி உள்ளது



6. உன்னால்
செய்ய
முடியாததை
கடைப்பிடிக்க
முடியாததை
மற்றவரிடம்
எதிர்பார்க்காதே

**நடேஷ் கன்னா**
கல்லிடைக்குறிச்சி

## ஆசையே விலகிப்போ




அடுத்தவீட்டு வசதிகளைப் பார்த்து பார்த்தே
அதுபோல தான்வாழ வேண்டுமென்று
கடுகடுத்து மனைவியவள் தொல்லை தந்து
கணவனையே சொல்லம்பால் குத்துகின்றாள் !
அடுத்தவீட்டு ஆண்மகனோ நேர்மையின்றி
அதர்மத்தால் பெற்றதந்த வசதியென்றே
எடுத்துரைத்த கணவனையே எடுத்தெறிந்தே
ஏளனமாய்த் தீநாக்கால் ஏசுகின்றாள் !

உண்ணுகின்ற உணவுக்கு வறுமையில்லை
உடல்மறைக்கும் உடைகளுக்கும் பஞ்சமில்லை
கண்மறைய வாழ்வதற்குச் சொந்தமாகக்
கட்டியுள்ள சிறியவீடும் உள்ளதிங்கே
பண்பாக நடுத்தரத்துக் குடும்பமாகப்
பழியேதும் இல்லாமல் வாழுகின்றோம்
எண்ணத்தில் ஆசையினை வளர்த்துக்கொண்டால்
எண்ணற்ற இன்னல்தான் அறிவாய் என்றான் !

பகட்டாக நாம்வாழ வேண்டுமென்றால்
பகற்கொள்ளை குறுக்குவழி செல்ல வேண்டும்
அகந்தன்னில் இரக்கத்தை அன்பு தன்னை
அகற்றிநஞ்சாய் மனந்தன்னை மாற்ற வேண்டும்
முகம்பார்த்து பேசியவர் தூற்றி நம்மின்
முதுகின்பின் கைகொட்டிச் சிரிப்பர் என்றான்
தகவுடைய இவ்வாழ்வே போதும் ; ஆசை
தவறென்றாள் ! உணர்ந்தவளை அணைத்தான் போற்றி !

**பாவலர் கருமலைத்தமிழாழன்**



சொன்னாலும் உன்னை
மட்டும் தானடி கேட்பேன்!
உன்னை விட்டால்
இவ்வுலகில் பெரிது ஏதடி!

நெற்றி தொட்ட முத்தத்தில்
முக்தி பெற்று விட்டது
என் காதல்!

இந்த வாழ்க்கை அற்புதம்தான்
அணைத்து கொள்ள
பொக்கிஷம் நீ கிடைத்ததால்!

தோற்றுப் போக
ஆசைப்படுகிறேன்
தேற்ற நீ வருவாய் என்பதால்!

என் மனதினை ஏனடி
ஸ்ட்ரா போட்டு உறிஞ்சுகிறாய்!

எல்லாம் தொலைத்த பிறகும்
கடக்க நினைக்கும் மனது
உன்னை தொலைத்த பிறகு
என்ன இந்த அற்ப வாழ்வென
எண்ண தோன்றுகிறது!

சேராமல் போனால் தான்
என்னடி? பாரமாய் என்னுள்
மாறாமல் வாழ்ந்திடும்
உன் காதலடி! பிரிவதும்,
சேர்வதும் மட்டுமல்ல
என் சதை நெருப்பில்
வெந்து சாம்பலாகும் வரை
நினைத்து கொண்டிருப்பதும்
காதல் தான்!

திட்டி தீர்க்காதே
கொட்டி தீர்க்கும் மழையில்
நனையடி உன் பேரழகை
நானும்–அந்த மழையும்
இரசித்து தான் போகட்டுமே!

திசை தெரியாத பறவைக்கு
வானம் தான் துணை
என் வானம் நீயடி!

என் பிரபஞ்சத்தில்
உன்னை விட
பெரிது
வேறென்ன இருந்து
விட போகிறது!

கடவுள் வந்து
பெரிதிலும் பெரிது
கேளென்று



**லி.நௌஷாத் கான்**



## பயணங்களில்...

வயல்களோ மரங்களோ
வண்ணப் பூக்களோ
தோன்றத் தோன்ற
ஒவ்வொன்றையும்
சட்டென்று பின்தள்ளும்
ஜன்னலோரப் பயணம்போல
மனதில் தொடர்ந்துதிக்கும்
மாயக் கவலைகளைப்
பின்தள்ள முடியுமானால்



எத்தனை
சுவாரசியமாக
இருக்கும்
வாழ்க்கைப்
பயணம்?

**கே. பி. ஜனார்த்தனன்**



எட்டுக்கால் பூச்சி
தொடர்ந்து
பின்னி
கொண்டு
இருந்தது
முயற்சியை.

**ஜயந்தி சிவக்குமார**
திருச்சி.

## குப்பை...

இயல்பின் லட்சணம்
இயக்கத்தின் அடையாளம்...
எதார்த்தத்தின் ஆணிவேர்...
இனிமையின் எதிரி
ஏற்றத்தின் உதிரி
முன்னேற்றத்தின்
பக்கவிளைவு... சுவாச
நாணயத்தின் சூட்சும முகம்...
முடிவில் எல்லோரும் காட்டும்
முகச் சுளிப்பு...
புறத்தில் அழுக்கு
புரிந்தால், இல்லை இழுக்கு...
முயற்சியின் முகவரி
முழுமையின் அகவரி
பிணிகளின் காரணம்
என்றால் தோற்றப் பிழை..
அணிகளின் தோரணம்
என்றால் மனதின் அக்மார்க்
நிலை... அகலப் பார்வையில்
நெஞ்சில் அருவருப்பு...
ஆழப் பார்வையில்
அத்வைத நெருப்பு!

**நெல்லை குரலோன்**
பொட்டல் புதூர்

## தமிழே, நீ விளையாட வா !

தேன் தமிழே' தென்றலாய் நீ!

கவிதை சோலையில்
மலர்வா நீ!

நாவினில் நயம்
நீ ஆட வா!

நற்றமிழ் உலகை நீ ஆள வா!

கன்னித் தமிழே!
குடியேறு நீ!

பழந்தமிழர் வீரத்தைப்
உரைக்க வா!

திருக்குறள்
அறத்தை நவில வா!

முத்தமிழின்
சுவையை தந்து வா!


முன்னோரின் புகழைப்
முழங்க வா!

பசுமை நிலத்தில் படர்ந்து
வா!

உயிரின் ஓசையாய்
விளையாடவா!

உன்னதத் தமிழே
விளையாட வா!

**பெ.திருமுகம் ,**
மணமேல்குடி



## " தூண்டில் புழு"

நிலத்தின் அடியில்
நிசப்தமாய் வாழ்ந்தேன்!
உருவத்தில் சிறியவனாய்
உழவனுக்கோர் நண்பனாய்!

மண்ணின் மணமும்
இருளின் அமைதியுமே
என் சொந்தம்!

என்னை எடுத்ததோர் கரம்
அன்போடல்ல,
அவசரத்தோடு!

என் உடலைக் குத்தி
ஒரு இரும்பில் கட்டி
தூக்கி வீசியது நீருக்குள்!

அப்போதே புரிந்தது
மீன் பிடிக்கும்
பொருளாகிவிட்ட உண்மை!

என் வலி கண்டு
தண்ணீருக்குள் யாரும்
கண்ணீர் சிந்தவில்லை!

ஆனால்
என் வலியில்தான்
ஒரு மீனின் மரணம்
எழுதப்பட்டது,!

என் துன்பத்தை
உணவென்றெண்ணி,
என் காயத்தில்
வாயை வைத்தது!

ஒரே நொடியில்
இருவரும் சிக்கினோம்
அதே கொடிய கரத்தில்!

நான் பயன்படுத்தப்பட்ட புழு?
அது ஏமாந்த மீன்?

இருவருக்கும் ஒரே விதி
நான் மீன்பசி தீர்க்கும்
சாதனம்!
மீனோ யாரோ ஒருவரின்
பசி தீர்க்கும் சாதனம்!

நீரில் விழும் என் கடைசிக்
கண்ணீர் துளி கேட்கிறது!

எந்தத் தூண்டிலில்



மனிதனைத்
தொங்க
விடுவார்கள்!

**முகில் தினகரன்**
கோயமுத்தூர்



## துளிபாக்கள்

அழகிய ரோஜா இதழ்களை
முத்தமிட்டுச் செல்கிறது
தென்றல்காற்று!

பெண் விழி அசைவில்
நீந்துவதை நிறுத்தியது
மீன்கள் கூட்டம்!

கண் தெரியாதவனுக்கு
காட்சிகள் தெரிகிறது
அழகாக அவன் கனவில்!

மழை ஓய்ந்தபின்
கூரை வீட்டுக்குள்
பானையில் ஜலதரங்கம்!



அன்புடன்
வளர்த்தது
பானையில்
கொதித்தது
கோழிக்
குழம்பாக!

**பூ.சுப்ரமணியன்**
பள்ளிக்கரணை



## காப்பி புராணம்.!

கும்பகோணம் டிகிரி காப்பியே.. நாவிலே
தெம்பு தந்த பில்டர்க் காப்பியே.! செம்பு கலந்த பித்தலையில்
செய்து வைத்த டபரா செட்.. செப்புவதை காதில் வாங்குவாய்.!

காலையிலே தூங்கி யெழுந்து.. கண் விழித்து பார்த்தவுடன்
சுறுசுறுப்பை ஊட்டும் காப்பியே.. எங்கள் சோம்பலினை
விரட்டும் காப்பியே.!

சின்னவுங்க.. பெரியவுங்க.. சிந்தனையை தூண்டிவிட்டு..
கன்னங்கரிய டிக்காசன் கலந்தவுடன் மணக்கின்ற
கும்பகோணம் டிகிரி காப்பியே.!

முந்திவரும் பொழுதெல்லாம்.. மூச்சுக்காற்றில் மணக்கின்ற..
இந்த உலகின் சிந்தையிலே ஊக்கமதைத் தருகின்ற
கும்பகோணம் டிகிரி காப்பியே.!

பண்டிதரும் மேதைகளும்.. பாடுகின்ற புலவர்களும்..
கலைஞர்களும். கண்டு அருந்தும்.. அமுத பானம் டிகிரி
காப்பியே!அதனை ஏந்தித் தரும் டபரா செட் வாழ்க வாழகவே.!




## சுத்து.. சொத்து.. சுத்தம்.!

மலையைச் சுத்துறான்.. சிலபேர் ஊரைச் சுத்துறான்..
கண்ணுக்கு அழகானப் பெண்ணை சுத்துறான்.. தன்னைத்
தானே சுத்துகிற பூமியைச் சுத்துறான்! என்ன சுத்தி என்ன.?
இறுதியில் மண்ணில் பொத்துன்னு விழுந்தான்.!

சொத்து சேர்க்கிறான்.. அதற்கு பணத்தைச் சேர்க்கிறான்!
சுத்தி வேலிகட்டி அது எனக்கு என்கிறான்! சொத்துக்காகவே
அவன் கோர்ட்டுப் படிக்கட்டில் குந்திக் கிடக்குறான்..
பணத்தை அள்ளி இறைக்குறான்! சொந்த இரத்தத்தை மறந்து
கிடக்குறான்!

சுத்தம் செய்யணும்.. மனசை சுத்தம் செய்யணும்.!
சுத்தி வந்துதான் சுத்தம் செய்யணும்! சுத்தி நடப்பதைக்
கண்கள் பார்க்கணும்! சொத்து நிரந்தரம் அல்ல என்பதை
உணர்ந்துப் பார்க்கணும்.! சுத்தம் சுகம் தரும்.! சொத்து
பூஞ்சியம்..! சுத்தி வந்து நாம் வாழ்ந்து பார்க்கணும்.!
இதை அனுபவம் உணர்த்தும்!



## பாரு! பாரு! பயாஸ் கோப்புப் படத்தைப் பாரு.!

பாரு.. பாரு.. நல்லாபாரு.. பயாஸ்கோப்பு படத்தைப் பாரு!
பைந்தமிழ் நாட்டைச் சுற்றிப் பாருங்கோ!
பயாஸ்கோப்பு படத்தில் காட்டப் போறேங்கோ!

தஞ்சாவூரு பெரிய கோவில்.. தலையாட்டும் பொம்மை பாரு!
திருச்சி மலைக் கோட்டையினைப் பாருங்கோ..ரெங்கநாதர்
சயனகோலம் பாருங்கோ!

கல்லணைகள் தாண்டிவந்து.. காவிரிப்பூம் பட்டணமாம்
பூம்புகாரில் காவிரியைப் பாருங்கோ! புனிதம்மிகு
வேளாங்கண்ணி பாருங்கோ! நாகூரு தர்க்காப் பாரு..
நவக்கிரக கோவில் பாரு! யாதும் ஊரு என்றத் தமிழைப்
பாருங்ககோ.. யாவருமே அண்ணன்தம்பி தானுங்கோ!

கல்லழகர் வைகையாற்றில் துள்ளிக்குதித்து இறங்கும்
அழகை.. சொல்ல ஒரு வார்த்தை ஏது பாருங்கோ! சொல்லச்
சொன்னது மதுரை மீனாள் தானுங்கோ! குற்றால மலையழகு!
குதித்துவரும் அருவி அழகு! பொற்றாமரைக் குளத்தை இங்கு
பாருங்கோ! குன்றக்குடி குமரன் கோவில் பாருங்கோ!

குமரிக்கடலில் வள்ளுவரை.. திருச்செந்தூர் வேலவரை..
இராமேஸ்வரம் இராமநாத சாமி பாருங்கோ! தூரமில்லை
தொப்புள்கொடி இலங்கை பாருங்கோ!

காமராசர் கட்டித்தந்த சாத்தனூரு டேமு பாரு! கார்த்திகை
தீபம் காண பேறுங்கோ! அண்ணாமலைக்கு அரோஹரா
பாடுங்கோ! கோவைநகர் அழகுகண்டு.. திருப்பூரு



நகரைக்கண்டு உழைத்துவாழ வேண்டுமென்று
பாடுங்கோ! ஒற்றுமையாய் தமிழர் கூடி
வாழுங்கோ!
இருந்த இடத்தில் இருந்துகொண்டே.. இம்புட்டு
ஊர் பார்த்துவிட்டு.. ரெண்டுரூபா அண்ணன்
ஜோப்பில் போடுங்கோ! பயாஸ்கோப்பு படத்தை
பார்க்க வாருங்கோ!


**வே.கல்யாண்குமார்.**


























# ATTENTION

**ரயில்வே மின்சார ஒப்பந்த பணிக்கு**

10th., ITI Electrical B- Licence, Dip EEE தகுதியுடையோர் விண்ணப்பிக்கலாம்.

தொடர்புக்கு:- 9094176404/ 7904974247.




SMART PROMOTERS
BUSINESS VIDEOS
IN ALL INDIAN LANGUAGES
SUCCESS
GROWTH
MULTIPLE LANGUAGES
PROMOTE WITH US
PROMOTE YOUR BUSINESS THROUGH OUR CHANNEL
1. Promote your Business
2. In Multiple Languages
3. We Promote in Social Media
4. Find Innovation & New Techniques
5. With Less Budget
HIGHLY PROFESSIONAL & ATTRACTIVE CONTENT
ENGLISH TAMIL TELUGU HINDI ODIA BENGALI KANNADA
CALL NOW: 7789951009


WE'RE
HIRING
TELECALLERS
SALARY STARTING FROM
RS.20000/- ONWARDS
+91 7871617005


Low Cost Matrimony Website
MATRIMONY
WEBSITE
RS.15000
Call/Whatsapp - +91 97155 39521


WANTED
EXPERIENCED
SOCIAL MEDIA
CONTENT CREATORS
94386 10756


GREAT OPPORTUNITY
AT
ALL OVER TAMILNADU
Marketing Executive
SALARY Rs.15000/-
+ Incentive
+ Petrol Allowance
vilambarampage@gmail.com
7789941009


அருள்தரும் தெய்வம்
விளம்பர முகவர்கள் &
விற்பனை பிரதிநிதிகள் தேவை
• அருள்தரும் தெய்வம் மாதம் இருமுறை பக்தி இதழுக்காக
• பகுதிநேர / முழு நேர வாய்ப்புகள்
• கமிஷன் அல்லது மாத ஊதிய அடிப்படையில்
• மாதம் Rs. 20000 முதல் Rs. 50000/- வரை ஈட்ட சிறந்த வாய்ப்பு
ஸ்ரீ அகத்தியர் சொன்ன ரகசிய மந்திரங்கள்
CALL / WHATSAPP: 7789941009
இன்றே இணையுங்கள்!


WANTED
— MARKETING EXECUTIVES —
We are hiring Marketing Executives (Male/Female) for immediate openings.
Full-Time / Part-Time
Salary: ₹30,000 - ₹50,000
Open to all, including Retired / VRS candidates and Job Seekers.
Location: All Over Tamil Nadu
Contact: 7789941009


ADVERTISE WITH US
CONTACT US
9438610756


சிங்கபெருமாள்கோயில்
S.P கோயில். On. GST Road
2 ஏக்கர் விற்பனை
1 ஏக்கர் 25cr
25cr
25cr
வண்டலூர்
கேளம்பாக்கம் ரோடு
17 ஏக்கர் விற்பனை
1 acre 16 cr
Ph. 9566055082


Wanted
REPORTERS
சட்டமன்ற தொகுதி வாரியாக
நிருபர்கள் தேவை
PRESS
PRESS
TV NEWS
பேப்பர்பாய்
8122664699


TAMIL
TELECALLER
JOB FOR
WORK FROM HOME
ALL OVER TAMILNADU
APPLY NOW
7789951009
PRINT MEDIA, DIGITAL MEDIA
SOCIAL MEDIA
DAILY & MONTHLY SALARY
SALARY STARING FROM
Rs. 10000/- onwards
Whatsapp: 7789951009






















# ATTENTION

## ரயில்வே மின்சார ஒப்பந்த பணிக்கு

10th., ITI Electrical B- Licence, Dip EEE

தகுதியுடையோர் விண்ணப்பிக்கலாம்.

தொடர்புக்கு:- 9094176404/ 7904974247.


















# பல்சுவை களஞ்சியம்



# மீம்ஸ்







## விரலில் வெள்ளி மோதிரம் அணிவது...
## உங்கள் வாழ்க்கையில் பல அதிசயங்களை உண்டாக்கும் தெரியுமா?..

தங்கம் எந்த அளவிற்கு சிறப்பு வாய்ந்ததாக சொல்லப்படுகிறதோ அதை விட பல மடங்கு உயர்ந்தது வெள்ளி.

நாம் வெள்ளி மோதிரம் அணிவதற்கும், செல்வம் பெருகுவதற்கும் தொடர்பு இருப்பதாக சாஸ்திரம் சொல்கிறது. வெள்ளி என்பது சுக்கிர கிரகத்துடன் தொடர்புடையதாகும். பொதுவாக வெள்ளி மோதிரம் போடுவது சந்திரனை குறிக்கிறது. சந்திரனை மனோ கிரகம் என்று சொல்வோம்.

வெள்ளி மோதிரம் அணிவது என்பது இன்றைய இளைஞர்கள் பலரிடமும் இருக்கும் ஒரு பழக்கமாகும். இதன் நன்மைகள் தெரியாமலேயே அதனை அணியும் பழக்கம் பலருக்கும் இருக்கிறது. அதாவது வெள்ளி மோதிரத்தை அணிவது மிகவும் சிறந்தது.

உண்மையில் வெள்ளி அணிவது உங்களுக்கு ஆரோக்கியம் ரீதியான பல பலன்களை அளிக்கும். அதேசமயம் சரியான விரலில் மோதிரம் அணிவது வாழ்வில் அதிசயங்களையும் உண்டாக்கும். வெள்ளியை எப்படி பயன்படுத்தினால் வாழ்வில் சிறப்பை உண்டாக்கும்? என்று பார்க்கலாம் வாங்க...

**வெள்ளி மோதிரம் அணியும் முறை :**

வெள்ளிக்கிழமை அன்று சுக்கிர ஓரையில் வெள்ளி மோதிரம் வாங்கி சந்தனமும், பன்னீரும் கலந்த நீரில் கழுவி இஷ்ட தெய்வம் அல்லது மகா லட்சுமியின் பாதத்தில் வைத்து அர்ச்சனை செய்த பின் அணிந்து கொள்ளவும்.

வெள்ளி மோதிரத்தை மோதிர விரல் அல்லது நடு விரல் அல்லது ஆள்காட்டி விரல் ஆகிய விரல்களில் அணிந்து கொள்ளலாம்.

அதாவது மேஷம், சிம்மம், தனுசு ஆகிய நெருப்பு ராசியை சார்ந்த பெண்கள் மோதிர விரலிலும், ரிஷபம், கன்னி, மகரம், கடகம், விருச்சிகம், மீனம் ஆகிய நில மற்றும் நீர் ராசியை சார்ந்தவர்கள் நடு விரலிலும், மிதுனம், துலாம், கும்பம் ஆகிய காற்று ராசியை சார்ந்தவர்கள் ஆள்காட்டி விரலிலும் வெள்ளி மோதிரத்தை அணிந்து கொள்ளலாம்.

இவ்வாறு வெள்ளி மோதிரம் அணிவதால் வெள்ளியிலிருந்து வெளிவரும் ஒரு சில மின் அலைகள் உடலில் இருக்கும் நரம்புகள் வழியே சென்று உடல் உள் உறுப்புகளுக்குள் இருக்கும் நோய்களை குணப்படுத்துகிறது.

வெள்ளி மோதிரம் அணிய விரும்பாதவர்கள் கழுத்தில் வெள்ளி செயின் அணிந்து கொள்ளலாம்.

**பலன்கள்:**

வெள்ளி மோதிரம் அணிவதால் அழகும், ஆளுமையும் அதிகரிக்கும்.

வெள்ளி மோதிரமானது சந்திரனின் தாக்கத்தை அதிகரிப்பதுடன் சளி மற்றும் இருமல் போன்றவற்றை சரிசெய்யவும் உதவுகிறது.

தம்பதிகளுக்குள் ஒற்றுமை ஏற்படவும், தொழில், வியாபாரம், மார்க்கெட்டிங் துறையில் உள்ளவர்கள் வாடிக்கையாளர்களை ஈர்க்கவும் வெள்ளி மோதிரத்தை அணியலாம்.

இதனால் வாழ்வில் செல்வ வளமும், அதிர்ஷ்டமும் பெருகும்.

இது கோபத்தை கட்டுப்படுத்தி சந்தோஷமாக வைத்திருக்க உதவும்.

கபம் என்று சொல்லப்படும் நீர் பூதத்தினால் ஏற்படும் நோய்களின் தாக்கத்தை இது குறைக்கிறது.

இது உடலில் உள்ள நச்சுக்களை வெளியேற்றுகிறது.

மூட்டு வலி, மனநிலை பாதிப்பு, மனக்குழப்பம் மற்றும் ஆர்த்ரைடிஸ் போன்ற நோயின் தீவிரம் குறைக்க இது உதவுகிறது.



**எம்.அசோக்ராஜா**
அரவக்குறிச்சிப்பட்டி
திருச்சி



## நல்லா யோசிச்சு பாருங்க...

ஒருவேளை புத்தர் "ஏன் தேவையில்லாம அங்கேயும் இங்கேயும் அலைஞ்சுகிட்டு போதி மரத்தை தேடிப் போய் தியானம் செய்வதை விட...

=================

வீட்டிலேயே ஒரு ஓரமாக தியானம் செய்யலாமுன்னு முடிவு செஞ்சு தியானம் செஞ்சுகிட்டு இருக்காருன்னு வச்சுக்கோங்க...

==================

அப்போ அவர் மனைவி வந்து எட்டிப் பார்த்து "சும்மாதானே உட்கார்ந்து இருக்கீங்க இன்னைக்கு பூண்டு வத்த குழம்பு வைக்கணுமுன்னு ஆசையா இருக்கு வந்து கொஞ்சம் பூண்டு உரிச்சி கொடுங்களேன் !" ன்னு கேக்குறாங்க...

==================

உடனே புத்தர் "நான் தியானத்தில் இருக்கிறேன் இப்போது முடியாது !"ன்னு மறுத்துடுறாருன்னு வச்சுக்குவோம்...

=================

புத்தரின் மனைவி சும்மா விடுமா உடனே "சாப்பாடு மட்டும் வாய்க்கு ருசியா கேக்குது கொஞ்சம் பூண்டு உரிச்சு கொடுக்க முடியாதா?"ன்னு ஆவேசமாக வாக்குவாதம் செய்ய...

==================

உடனே சத்தம் கேட்டு உள்ளே இருந்து புத்தரின் மகன் வந்து "என்னம்மா சத்தம் ஏம்மா அப்பாவை திட்றீங்க?" ன்னு கேட்டா...

==================

"இவ்வளவு நாளா படுத்துகிட்டு தூங்கிகிட்டு கிடந்த உங்க அப்பா இப்போ ஒக்காந்துக்கிட்டே தூங்க ஆரம்பிச்சிட்டாரு ! ரெண்டு பூண்டு உரிச்சு குடுங்கன்னு சொல்றேன் முடியவே முடியாது என்று அடம் பிடிக்கிறார்...

==================

சோறு மட்டும் சாப்பிட முன்னாடியே வந்து உக்காந்துருவாரு !ன்னு புத்தர் மனைவி சொல்லும் போது...

==================


யோசிச்சு பாருங்க... புத்தருக்கு ஞானம் வருமா? கோபம் வருமா?



## விடுகதை

| | |
|---|---|
| 100க்கும் 105க்கும் நடுவுல என்ன இருக்கு? | 0 தான் இருக்கு. |
| ஒருத்தன் பொண்டாட்டி சமையல வாயில வைக்க முடியலன்னு பேங்க் மேனேஜர் கிட்ட போய் சொன்னாலும் ஏன்? | ஏன்னா நம்ம கஷ்டத்தை சொன்னாதான் லோன் கிடைக்கும்னு சொன்னாங்களாம். |
| ஒரு அம்மா எப்போதும் தூங்கும் போது கண்ணாடி போட்டுக்கிட்டு தான் தூங்குமாம் ஏன்? | என அப்பதான் தூக்கத்தில் வரும் கனவு தெளிவா தெரியுமாம். |
| ஒருத்தன் விநாயகர் படத்தின் மேல நடிகர் ராதிகா போட்டோ ஒட்டிட்டு போனானாம் ஏன்? | ஏன்னா அது சித்தி விநாயகர் ஆம். |
| ஒருத்தன் துணி கடைல போய் சேலை கேட்டான் அதுக்கு அவன் கோயில்ல போய் வாங்க என்று சொன்னாலும் ஏன்? | ஏன்னா அவங்க பூ சேரி கேட்டாங்களாம். |





## ஜோக்ஸ்

She - நாம பிரேக்அப் பன்னிக்கலாம்டா

He - ஏன்டி வீட்ல ஒத்துக்க மாட்றாங்களா

She - இல்ல நாம கல்யாணம் பன்னிகிட்டா உன் பேர நம்ம குழந்தைக்கு இனிஷியலா மட்டும்தா வைக்க முடியும் ஆனா வேற ஒருத்தர கல்யாணம் பன்னிகிட்டா என் குழந்தைக்கு உன் பேரயே வைக்கலாம்ல அதான்

He -??????

==================


டன் கணக்கில் துணி துவைக்கும் இடம் எது?
வாஷிங்டன் தான், வேற எது? ஹாஹாஹா !

==================

ரொம்ம காஸ்ட்லியான கிழமை எது?
வெள்ளிக்கிழமை தான், வேற எது? ஹாஹாஹா !

==================

ஒருத்தன் தலையில் இருந்து இலையா கொட்டுச்சாம், ஏன்?
ஏன்னா அவன் மரமண்டையாம். ஹாஹாஹா !



==================

எல்லா பிரியாணிக்கும் டெஸ்ட் வெச்ச எந்த பிரியாணி ஃபெயில் ஆகும்?
முட்டை பிரியாணி தாங்க. பேர்லயே முட்டை இருக்கும்போது எப்படி பாஸ் பண்ணுவாங்க? ஹாஹாஹா !

==================

கோயிலுக்கும் சாமிக்கும் என்ன வித்யாசம்?
வேறென்ன, கோயில் சிம்பு நடிச்சப்படம், சாமி விக்ரம் நடிச்ச படம். இதுதான வித்யாசம். ஹாஹாஹா !

==================

ஆப்பிள நரிக்கி வெச்சா என்னாகும்?
வேற என்னாகும்? நரி சாப்டுடும். ஹாஹாஹா !

==================

அமெரிக்கால பிறந்த குழந்தையோட பல்லு என்ன கலர்ல இருக்கும்?
அட பிறந்த குழந்தைக்குத்தான் பல்லே இருக்காதே. ஹாஹாஹா !

==================

சாப்பிட முடியாத கனி எது?
வேற எது, நம்ப பால்கனிதான். ஹாஹாஹா !

==================

எந்த ஊருல அதிர்ஷ்டமே இருக்காது?
வேற எங்க, நம்ம லக்னோ லதான். லக்னோன்னு வெச்சதுக்கு பதிலா ஒரு எஸ் போட்டு லக்எஸ்னு வெச்சு இருக்கலாம். ஐடியா இல்லாத பசங்க, ஹாஹாஹா !

==================

தினேஷ் எப்போதும் சேர்லே உட்கார்ந்துட்டு இருப்பானாம் ஏன்?
ஏன்னா? அவன் சேர்மேனாம். பேட்மேன்னா எங்க உட்காருவாரு? ஹாஹாஹா !

# வாழ்வு தரும் ஆரோக்கியம்



## வெப்ப அலையில் இருந்து தற்காத்துக்கொள்ளும் வழிகள்...



1 அதிகபட்ச வெப்பத்தை தவிர்க்கவும்.
வெப்பநிலை அதிகமாக இருக்கும் மதியம் 12 மணி முதல் 3 மணி வரையிலான கால கட்டங்களில் வெளியே நடமாடாதீர்கள். முடிந்தவரை வீட்டிற்குள்ளேயே இருங்கள்.

2 பாதுகாப்பு சாதனங்களை பயன்படுத்துங்கள்
இலகுவான, தளர்வான பருத்தி ஆடைகளை அணியுங்கள். வெளியில் செல்லும் போது சன் கிளாஸ், தொப்பி அல்லது குடை பயன்படுத்துங்கள்.

3 திரவங்களை தேர்ந்தெடுங்கள்
உடலில் நீர்ச்சத்து இழப்பைத் தடுக்க ஓ.ஆர்.எஸ் கரைசல், எலுமிச்சை பானம், மோர் அல்லது இளநீர் அருந்துங்கள்.

4 கார்பனேட் பானங்களை தவிர்க்கவும்
மது, டீ, காபி மற்றும் உடலில் நீர்ச்சத்தை இழக்க செய்யும் கார்பனேட் பானங்கள் பருகுவதை தவிருங்கள்.

5 தண்ணீர் குடியுங்கள்
நாள் முழுவதும் நீரேற்றத்துடன் இருங்கள். போதிய அளவு தண்ணீர் பருகுங்கள். பயணம் செய்யும்போது தண்ணீரை உடன் எடுத்துச் செல்லுங்கள்.

6 கடினமான வேலைகளை தவிர்க்கவும்
அதிகபட்ச வெப்பம் நிலவும் நேரங்களில் கடினமான வேலை அல்லது வெளிப்புற செயல்பாடுகளைக் குறைத்துக்கொள்ளுங்கள்.

7 நீர்ச்சத்து நிறைந்த உணவுகளை உண்ணுங்கள்
தர்பூசணி, முலாம் பழம், ஆரஞ்சு, திராட்சை, வெள்ளரிக்காய் மற்றும் கீரை வகைகள், நீர்ச்சத்துள்ள காய்கறிகளை உணவில் சேர்த்துக்கொள்ளுங்கள்.

8 வீட்டை குளிர்ச்சியாக வைத்திருங்கள்
ஜன்னல், கதவுகளில் சூரிய ஒளியை தடுக்கும் திரைச்சீலைகளை பயன்படுத்துங்கள். அதேவேளையில் அறைக்குள் சரியான காற்றோட்டத்தை உறுதி செய்யுங்கள்.

கவனத்தில் கொள்ள வேண்டியவை

* குழந்தைகள், முதியவர்கள், கர்ப்பிணிப் பெண்கள் மற்றும் நோயுற்றவர்கள் சூரிய ஒளியில் நேரடியாக நேரம் செலவிடுவதை தவிர்க்க வேண்டும்.

* நிழலில் இருப்பது வெயிலை விட 10 டிகிரி வரை குளிர்ச்சியாக இருக்கும். மரங்கள் இயற்கையான குளிர்ச்சியை அளித்து, காற்றின் தரத்தை மேம்படுத்தும். அதனால் சாலையில் நிழலான பக்கத்தில் நடங்கள். மரத்தின் நிழலில் ஓய்வெடுங்கள்.

* வீட்டு தோட்ட வேலை, நடைப்பயிற்சி உள்ளிட்ட செயல்களை அதிகாலையில் அல்லது சூரியன் மறைந்த பிறகு செய்யுங்கள்.

* வியர்வை வெளிப்படும்போது உடல் வெப்பம் அந்த திரவத்தை நீராவியாக மாற்றும். அப்போது சருமத்தின் மேற்பரப்பில் இருந்து வெப்பத்தை அகற்றி உடலில் உள் வெப்பநிலையை குறைக்க உதவிடும். ஆனால் வியர்க்கும்போது திரவங்களையும், தாதுக்களையும் உடல் இழக்கும். எனவே தாகம் எடுக்கும் வரை காத்திருக்காமல் தண்ணீர் பருகுவது நல்லது.

* உடலை நீருக்குள் மூழ்கவைப்பது குளிர்ச்சிக்கு வித்திடும். ஏரி, குளம், நீச்சல் குளம் போன்றவற்றில் நேரத்தை செலவிடலாம். நீச்சல் தெரிந்திருப்பது முக்கியமானது.

## கோடை காலத்தில் மண்பானை நீரை ஏன் குடிக்க வேண்டும்?



கோடை காலத்தில் வெயில் சுட்டெரிக்க தொடங்கியதுமே பலரும் குளிர்ந்த நீரை பருக ஆர்வம் காட்டுவார்கள். பெரும்பாலும் பிரிட்ஜில் சேமித்துவைக்கப்படும் நீராகவே இருக்கும். அது பலருக்கும் சளி, இருமல் தொந்தரவை கொடுக்கும். அதற்கு மாற்றாக தனித்துவமான ஆரோக்கிய நன்மைகளை கொண்ட குளிர்ந்த நீராக மண்பானை நீர் விளங்குகிறது. அதனால்தான் இன்றும் பல வீடுகளில் களிமண் பானைக்கு முக்கியத்துவம் அளிக்கப்படுகிறது. கோடை காலத்தில் மண் பானை நீரை ஏன் பருக வேண்டும் என்பது குறித்து பார்ப்போம்.

1. இயற்கையான குளிர்ச்சி
பிரிட்ஜ் இல்லாத அந்த காலத்தில் களிமண் பானை நீர் இயற்கையாகவே குளிர்ந்த நீரை வழங்கியது. இந்த பானைகள் 'ஆவியாதல்' என்ற தத்துவத்தின் அடிப்படையில் செயல்படுகின்றன. அதற்கேற்ப பானையின் மேற்பரப்பில் நுண்ணிய துளைகள் இருக்கும். அவை பானைக்குள் இருக்கும் நீரை சீராகவும் இயற்கையாகவும் குளிர்விக்க உதவிடும். இது வேறு எந்த கொள்கலனிலும் இல்லாத தனித்துவமான பண்பாகும்.

2. தொண்டைக்கு இதமளிக்கும்
பிரிட்ஜுக்குள் இருக்கும் வரை நீர் அதிகப்படியான குளிர்ச்சியுடன் காணப்படும். ஆனால் வெளியே எடுத்ததும் சில நிமிடங்களில் அதிகப்படியான வெப்ப தன்மை நீரை ஆட்கொள்ளும். ஆனால் மண் பானை நீர் கோடை காலத்தில் குடிப்பதற்கு ஏற்ற சரியான வெப்பநிலையில் (இதமான குளிர்ச்சியில்) காணப்படும். அதன் மிதமான குளிர்ச்சி நன்மை தொண்டைக்கு இதமாகவும் இருக்கும். சளி மற்றும் இருமல் தொல்லையால் அவதிப்படுபவர்களும் மண்பானை நீரை தயக்கமின்றி பருகலாம். ஆனால் பிரிட்ஜ் நீரை அப்படியே குடித்தால் சளி, இருமல் ஆட்கொண்டு விடும்.


3. வெப்பத்தாக்கத்தைத் தடுக்கும்
கோடை காலத்தில் பலருக்கும் ஏற்படக்கூடிய பொதுவான உடல்நலப் பிரச்சனைகளுள் ஒன்று, 'வெப்ப பக்கவாதம்'. அதாவது அதிகப்படியான வெயில் மற்றும் வெப்பம் காரணமாக உடல் வெப்பநிலை ஆபத்தான நிலைக்கு (104 டிகிரி பாரன்ஹிட்/40 டிகிரி செல்சியஸுக்கு மேல்) உயர்ந்து, உடல் உறுப்புகள் செயலிழக்கும் நிலைக்கு தள்ளப்படும். பானையில் சேமித்து வைக்கப்பட்ட நீரில் உள்ள வைட்டமின்கள் மற்றும் தாதுக்கள் உடலின் குளுக்கோஸ் அளவை சீராக பராமரிக்க உதவும். மேலும் உடலுக்கு இதமான குளிர்ச்சி உணர்வையும் வழங்கும் என்பதால் வெப்ப பக்கவாதத்தில் இருந்து தற்காத்துக் கொள்ள முடியும்.

4. காரத்தன்மை
மனித உடல் இயல்பாகவே அமிலத்தன்மை (அசிடிக்) கொண்டது. ஆனால் களிமண் இயல்பாகவே காரத்தன்மை (அல்கலைன்) கொண்டது. காரத்தன்மை கொண்ட மண் பானையில் சேமித்த நீரை பருகும்போது உடலின் அமிலத்தன்மையுடன் வினைபுரிந்து உடலில் சரியான பி.எச். சமநிலையை உருவாக்க உதவும். இதனால் தான் மண்பானை நீரைப் பருகுவது நெஞ்செரிச்சல் மற்றும் வயிற்று உபாதைகள் ஏற்படாமல் தடுக்க உதவுகிறது.

5. வளர்சிதை மாற்றத்தை மேம்படுத்தும்
பிளாஸ்டிக் பாட்டில்களில் நீரை சேமித்து பருகும்போது அதில் 'பிஸ்பினால் ஏ' அல்லது 'பி.பி.ஏ.' போன்ற நச்சு வேதிப்பொருட்கள் கலந்திருக்க வாய்ப்புள்ளது. இவை பல வழிகளில் உடலுக்கு தீங்கு விளைவிக்கக்கூடியவை. இந்த வேதிப்பொருட்கள் ஆண்களின் 'டெஸ்டோஸ்டிரோன்' ஹார்மோன் அளவைக் குறைப்பதாகவும், உடலின் நாளமில்லாச் சுரப்பி மண்டலத்தின் செயல்பாட்டைப் பாதிக்கும் தன்மையைக் கொண்டிருப்பதாகவும் ஆய்வுகள் கூறுகின்றன. மாறாக, மண்பானையில் சேமித்து வைக்கப்பட்ட நீரைப் பருகுவது ஹார்மோன் அளவை சமநிலைப்படுத்துவதுடன் உடலின் வளர்சிதை மாற்றத்தையும் மேம்படுத்தும்.

## அழகை அசத்துவதற்கு துவரம்பருப்பா..!





நம்முடைய முன்னோர்கள் எல்லாம் உடலில் பிரச்சனை ஏற்பட்டால் அவர்கள் இயற்கையான முறையை தான் கையாண்டார்கள். மேலும் அவர்களின் உடல் ஆரோக்கியத்திற்கு ஏற்ற உணவுகளை எடுத்து கொண்டார்கள். அதனால் எந்த பிரச்சனையும் இல்லாமல் ஆரோக்கியமாக வாழ்ந்தார்கள். ஆனால் இன்றைய கால கட்டத்தில் உடலில் பல பிரச்சனைகள் ஏற்படுகிறது. அதுமட்டுமில்லாமல் முடி மற்றும் அழகில் இரண்டிலும் பிரச்சனையை ஏற்படுத்துகிறது. இதனை சரி செய்வதற்கு ஆங்கில மருந்துகளை எடுத்து கொள்கிறீர்கள். ஆனால் இயற்கையான முறையை கையாண்டால் நல்ல ரிசல்ட்டை பெற முடியும். அந்த வகையில் எல்லா வீட்டிலும் இருக்க கூடிய துவரப்பருப்பை வைத்து எப்படி அழகை மேம்படுத்தலாம் எப்படி அறிந்து கொள்வோம் வாங்க..

கரும்புள்ளி, தேமல்:
துவரப்பருப்பு ஆனது உடல் ஆரோக்கியம் மற்றும் சமையலுக்கு மட்டும் பயன்படுகிறது என்று நினைத்து கொண்டீர்கள் என்றால் அது தவறான விஷயம். ஏனென்றால் இதனை தோல், தலைமுடி, பாதம் போன்றவற்றில் ஏற்படும் பிரச்சனைக்ளுக்கு மருந்தாக பயன்படுத்தலாம்.

துவரப்பருப்பு 200 கிராம், பச்சை மஞ்சள் சிறிய துண்டு எடுத்து கொள்ள வேண்டும். இவை இரண்டையும் பேஸ்ட்டாக அரைத்து கொள்ள வேண்டும். இந்த பேஸ்ட்டை முகத்தில் கரும்புள்ளி மற்றும் தேமல் இருக்கும் இடத்தில் தடவி 15 நிமிடம் வைத்திருந்து அதன் பிறகு முகத்தை கழுவ வேண்டும். இதன் மூலம் கரும்புள்ளி மற்றும் தேமல் இருந்த இடம் தெரியாமல் மறைந்து விடும்.


தேவையில்லாத முடி:
பெண்களுக்கு உதட்டில் மேல் இருக்கும் முடி ஆனது சில பேருக்கு முக அழகை கெடுக்கும். இதனை சரி செய்வதற்கு பார்லர் சென்று முடியை ரிமூவ் செய்வார்கள். இதன் மூலம் கொஞ்ச நாள் கழித்து மறுபடியும் முடி வளர ஆரம்பித்து விடும்.

இதற்கு துவரம்பருப்பு -1/4 கிலோ, கோரைக்கிழங்கு 100, கல்கண்டு 50 கிராம் போன்றவற்றை பேஸ்ட்டாக அரைத்து கொள்ள வேண்டும். இந்த பேஸ்ட்டை உதட்டிற்கு மேல் இருக்கும் முடியின் மேல் தடவி 10 நிமிடம் வைத்திருந்து அதன் பிறகு கழுவ வேண்டும். இதன் போல் வாரம் ஒரு முறை என்று ஒரு மாதம் குளித்து வந்தால் இருந்த முடி எல்லாம் உதிர்ந்து விடும். மேலும் அந்த இடத்தில் முடியும் மறுபடியும் முளைக்காது.

## வெயில் காலத்தில் உங்கள் முடி பாதியில் உடைந்து விழுகிறதா..?



வெயில்காலம் வந்துவிட்டது என்றால் உடனே அனைவரும் சொல்வது என்னவென்றால் தலை முடி பிரச்சனை தான். இந்த தலை முடி பிரச்சனையானது அனைவருக்கும் இருக்கும். ஆனால் வெயில்காலம் வந்துவிட்டது என்றால் தலை முடி அதிகம் கொட்டும் முடி உடைந்துவிடும். இதற்கு என்ன தான் தீர்வு பற்றி தெரிந்துகொண்டு ஒவ்வொருவரும் கடையில் விற்கும் பொருட்களை அதிகமாக பயன்படுத்தி வருகிறோம். ஆனால் அடுத்து அடுத்து பக்கவிளைவுகள் ஏற்படும். ஆகவே இயற்கை முறையில் தலைக்கு ஹேர் பேக் செய்வதை பற்றி இந்த பதிவின் வாயிலாக தெரிந்துகொள்வோம் வாங்க..!



இந்த தேங்காயை பொறுத்த வரைக்கும் தலைமுடிக்கு தேவையான எசன்ஷியல் சத்துக்கள் அதிகம் உள்ளது. அதனை 1 மூடி திருவி எடுத்துக்கொள்வோம். அதனை கொஞ்சம் கொஞ்சமாக தண்ணீர் சேர்த்து அரைத்து எடுத்துக்கொள்வோம். அதேபோல் அதனை வடிகட்டி தனியாக எடுத்துக் கொள்வோம்..! இதனை ஒரு இரவு அப்படியே வைக்கவும். மறுநாள் காலையில் பார்த்தால் அது ஒரு கிரீம் போல் வந்துவிடும் அதனை அப்படியே எடுத்துக்கொள்ளவும்.

நீங்களே வியந்து பார்க்கும் அளவிற்கு முடி நீளமாக வளர இந்த ஒரு பொருளை மட்டும் போதும்
அடுத்து நாம் எடுத்துக்கொள்ளும் பொருள் தான் கற்றாழை. இந்த கற்றாழை நம்முடைய முடி உடைவதை சரி செய்யும். இது பொடுகு இல்லாமல் வைக்கவும். இது உதவியாக இருக்கும். அதனால் இதில் இருக்கும் ஜெல் மட்டும் தனியாக எடுத்துக்கொள்ளவும்.

இப்போது அதனை நன்கு கலந்துவிடவும். இப்போது அந்த தேங்காய் கிரீம்களை சேர்த்து நன்கு கலந்துவிடவும்.
அடுத்து வைட்டமின் இ மாத்திரை வாங்கி அதில் வாங்கிக்கொள்ளவும். அந்த எண்ணெயை அந்த கற்றாழை மற்றும் தேங்காய் கிரீம்களுடன் கலந்துகொள்ளவும் இப்போது அருமையான ஹேர் பேக் ரெடி..!

பயன்படுத்தும் முறை:
தலையில் நன்கு எண்ணெய் வைத்து இரண்டு பாதியாக பிரித்துக் கொள்ளவும். அதன் பின்பு இந்த ஹேர் பேக் தலையில் அனைத்து பக்கமும் அப்ளை செய்யவும். அதன் பின்பு 15 நிமிடம் அப்படியே ஊறவிட்டு தான் பின்பு தலையில் ஷாம்பு, சீயக்காய் போட்டு குளித்துவிட்டு வரவேண்டும்.

இந்த பகுதியில் உங்கள் படைப்புக்கள் வரவேற்கிறோம்
whatsapp No
8122664699

## மதுரை அருள்மிகு மீனாட்சி சுந்தரேஸ்வரர் திருக்கோயில்சித்திரை திருவிழா



மதுரை அருள்மிகு மீனாட்சி சுந்தரேஸ்வரர் திருக்கோயில்சித்திரை திருவிழா-2026- 24.04.2026 காலை-சுவாமி,அம்பாள் தங்கசப்பரத்தில் திருவீதியுலா முத்தங்கி சேவை

மாணாத புல்லர்கள் கூட்டங்கெழுமி மகிழ்ந்து நின்னைப் பேணாத நாயிற் கொடியென் எனினும் பெரிதும் அஞ்சி நாணாது நின்னைச் சரண் புக்கமையினிந் நாயினுக்குக் காணாத காட்சி அருள்வாய்தென்கூடற் கயற்கண்ணியே-கயற்கண்ணி மாலை

சொக்கே நின் தாளே துணை

## த்வஜாரோஹணம்



திருக்கடல்மல்லை ஸ்ரீஸ்தலசயன பெருமாள் பிரம்மோத்ஸவம் பகல் 1 காலை த்வஜாரோஹணம்

## 2ம் திருநாள் காலை சூர்ய பிரபை



மாம்பலம் ஸ்ரீ கோதண்டராமர் ஸன்னதி பராபவ வருட ப்ரம்மோத்ஸவம் 2ம் திருநாள் காலை சூர்ய பிரபை (காயத்ரி த்யானம்). 24.04.2026

## கருடசேவையில் பெருமாளும் அன்னப்பறவை வாகனத்தில் ஸ்ரீநம்மாழ்வார்






ஆழ்வார்திருநகரி பொலிந்துநின்றபிரான் பெருமாள் சித்திரை உத்திரம் 5ஆம் திருநாள் கருடசேவையில் பெருமாளும் அன்னப்பறவை வாகனத்தில் ஸ்ரீநம்மாழ்வார் 23 4 2026 வியாழன் இரவு.

## திருப்புல்லாணி சிம்ம வாகனம்



இரண்டாம் நாள் திருப்புல்லாணி சிம்ம வாகனம்

## கோவை ஜி.டி.நாயுடு உயர் மட்ட மேம்பாலத்தில் 2 நாட்களுக்கு போக்குவரத்துக்கு தடை விதிப்பு



கோவை ஜி.டி. நாயுடு உயர் மட்ட மேம்பாலத்தில் கண்காணிப்பு கேமரா பொருத்தப்பட இருப்பதால் நாளை (ஏப்.25), நாளை மறுநாள் (ஏப்.26) இரவு 10 மணி முதல் காலை 6 மணி வரை போக்குவரத்துக்கு தடை விதிக்கப் பட்டுள்ளது.பயணிகள் அவிநாசி சாலையை பயன்படுத்துமாறு காவல் துறை அறிவுறுத்தியுள்ளனர்.

## வெள்ளிக்கிழமை ஸ்ரீ ஆற்காட்டம்மனுக்கு சிறப்பு வழிபாடு




விழுப்புரம் மாவட்டம் விக்கிரவாண்டி பேரூராட்சி நல்ல தண்ணீர் குளத்தருகில் அமைந்திருக்கும் ஸ்ரீஆற்காட்டம்மன் ஆலயத்தில் அமைந்திருக்கும் ஆற்காட்டம்மனுக்கு வெள்ளிக்கிழமையை முன்னிட்டு சிறப்பு அபிஷேகங்கள், வண்ணமலர் மாலைகளால் அலங்காரங்கள், பிரசாதம், நெய்வேத்தியங்களுடன் மகா தீபாராதனையும் நடைபெற்றது. ஏராளமான பக்தர்கள் ஆற்காட்டம்மனை வேண்டி அருள் பெற்றனர். அனைவருக்கும் பிரசாதங்களும் வழங்கப்பட்டது. தமிழ்நாடு இ பேப்பர் செய்தியாளர் நிர்மலா ஸ்ரீதர் திருவண்ணாமலை

## சித்திரை பிரம்மோற்சவம்.



திருக்கடிகை ஸ்ரீ பக்தோசிதன் ஹம்ச வாகன திவ்ய சேவை சித்திரை பிரம்மோற்சவம். ஸ்ரீ பராபவ வருட சித்திரை-11, 24.04.2026 வெள்ளிக்கிழமை.

## சந்திரப்ரபை வாகனம் புறப்பாடு.




திருக்குடந்தை ஸ்ரீ ஆராவமுதன் சன்னதி சித்திரை பிரம்மோற்சவம் இரண்டாம் திருநாள் சந்திரப்ரபை வாகனம் புறப்பாடு.

## ரவுசு மணி

ஏமாந்த நல்லவனுக்கு ஏமாளி பட்டம்...

ஏமாற்றிய கெட்டவனுக்கோ புத்திசாலி பட்டம்...

இதுதான் உலகம்....



V. முத்து ராமகிருஷ்ணன்

## தமிழகத்தில் வாக்கு சதவிதம் அதிகரித்த காரணம் என்ன? - எல்.முருகன் விளக்கம்

**பழநி, ஏப்.25:**

"தமிழகத்தில் வாக்குப்பதிவு சதவீதம் அதிகரித்த காரணம் திமுக அரசின் மீதான மக்களின் கோபமும், ஆதங்கமும் தான்" என்று மத்திய இணை அமைச்சர் எல்.முருகன் தெரிவித்துள்ளார்.

திண்டுக்கல் மாவட்டம் பழநி தண்டாயுதபாணி சுவாமி மலைக்கோயிலில் மத்திய இணை அமைச்சரும், அவினாசி தொகுதி பாஜக வேட்பாளருமான எல்.முருகன் வெள்ளிக்கிழமை (ஏப்.24) மாலை சுவாமி தரிசனம் செய்தார். கோயிலுக்கு வந்திருந்த பக்தர்களுடன் புகைப்படம் எடுத்துக் கொண்டார்.




பின்னர், எல்.முருகன் செய்தியாளர்களிடம் கூறியதாவது: நாடு முழுவதும் தேர்தல் ஜனநாயக முறையில் அமைதியாக நடந்துள்ளது. தோல்வி பயத்தில் தேர்தல் ஆணையரை நீக்கக் கோரி எதிர்க்கட்சி எம்பிக்கள் நோட்டீஸ் அனுப்பியுள்ளனர்.

அவினாசி தொகுதியில் எனது வெற்றி 100 சதவீதம் உறுதி செய்யப்பட்டுவிட்டது. ஒரு லட்சம் வாக்குகள் வித்தியாசத்தில் வெற்றி பெறுவேன். தமிழகத்தில் வாக்குப்பதிவு சதவீதம் அதிகரித்த காரணம் திமுக அரசின் மீதான மக்களின் கோபமும், ஆதங்கமுமே ஆகும். மக்கள் திமுக அரசு மீது வெறியாக இருந்ததால் விறுவிறுப்பான வாக்குப்பதிவு நடந்துள்ளது.

பிரதமர் மோடியின் செயல்பாடுகள் மற்றும் 2047 'விக்ஷித் பாரத்' (வளர்ச்சியடைந்த இந்தியா) கனவின் மீது மக்கள் வைத்துள்ள நம்பிக்கையால் தான் பலரும் பாஜகவை நோக்கி வருகின்றனர். திராவிட மாடல் 2.0 இல்லை. அது வெறும் ஜீரோ தான்.

திமுக அரசை தூக்கு எறிய மக்கள் அதிகமாக வாக்களித்துள்ளனர். இவ்வாறு அவர் தெரிவித்தார்.

## திருப்பதியில் குறைந்த பக்தர்களின் கூட்டம்



**திருப்பதி, ஏப்.25:**

தமிழகத்தில் நேற்று முன்தினம் சட்டப்பேரவைத் தேர்தல் விறுவிறுப்பாக நடைபெற்றது. இதன் காரணமாக திருப்பதி ஏழுமலையான் கோயிலில் வழக்கத்தை விட சற்று குறைந்தே பக்தர்களின் கூட்டம் காணப்பட்டது. நேற்று முன்தினம் ஏழுமலையானை பக்தர்கள் 2 முதல் 3 மணி நேரத்துக்கு உள்ளாகவே தரிசனம் செய்து வெளியே வந்தனர். ஆனால், தமிழக தேர்தலையொட்டி மதுபான கடைகள் அடைக்கப்பட்டன. இதனால் கடந்த 2 நாட்களாக தமிழக - ஆந்திர எல்லையில் உள்ள சித்தூர், திருப்பதி, காளஹஸ்தி, குப்பம், புத்தூர், நகரி, பிச்சாட்டூர், சத்யவேடு, பலமனேர், கார்வேட்டி நகரம் ஆகிய பகுதிகளில் தமிழகத்தில் இருந்து பைக்குகள், கார்களில் வந்து மது அருந்தியும், மதுபான பாட்டில்களை வாங்கியும் சென்றனர். இதனால் ஆந்திர எல்லைகளில் உள்ள மதுக்கடைகளில் 2 நாட்களாக கூட்டம் அலைமோதியது.

## ஸ்ரீஅமிர்தவல்லி தாயார் வில்வம் அர்ச்சனை



பாக்கம் ஸ்ரீ அமிர்தவல்லி தாயார் ஸமேத ஸ்ரீ கரிய மாணிக்க பெருமாள் திருக்கோயில் சுக்ர வாரம் ஸ்ரீஅமிர்தவல்லி தாயார் வில்வம் அர்ச்சனை நடைபெற்றது


# சுற்றுலா: கைலாசகோனா அருவிக்குப் போயிருக்கீங்களா?

ஜூன் மாதமாகியும் சென்னை மற்றும் சுற்றுவட்டார மாவட்டங்களில் வெயில் மக்களை வாட்டி வதைத்து வரும் நிலையில், சென்னையிலிருந்து 100 கிமீ தொலைவிற்குள் ஒரு குளிர்ச்சியான அருவி இருக்கிறது என்றால் நம்ப முடிகிறதா? வாருங்கள் இந்த கட்டுரையின் மூலமாக அருவியை சுற்றிப் பார்க்கலாம்.

"எப்பா.. என்னா வெயிலு.. ஜூன் மாசமாகியும் விடலையே.. ஒரு மோர் கொடுங்கண்ணே!" என மக்களை புலம்ப வைத்து இருக்கிறது தலைநகர் சென்னையை வாட்டி வதைத்து வரும் சூரியன். வெயில் குறையாத நிலையில் நாளை பள்ளிகளும் திறக்க இருப்பதால் குளிர் பிரதேசங்களுக்கு சுற்றுலா செல்ல விடுமுறை கிடைப்பதும் கடினம்.

இப்படி சென்னையில் இக்கட்டான நிலையில் இருப்பவர்கள், வார விடுமுறை கிடைக்கும் ஒரே நாளில் ஜாலியாக குளிர்ச்சியான பகுதிக்கு டூர் போய்விட்டு வரும் அளவுக்கு ஒரு கூலான டூரிஸ்ட் ஸ்பாட் இருக்கிறது. அப்படி என்ன பகுதி? அங்கு எப்படி செல்வது என்பன போன்ற தகவல்களை நாம் விரிவாக பார்ப்போம்.

கோடை வெயிலில் தகிக்கும் கான்கிரீட் காடான சென்னைக்கு ஒரு நாள் விடைகொடுத்துவிட்டு, எட்டும் திசையெங்கும் பச்சை போர்வை போர்த்தியதைபோல் பசுமையாக காட்சியளிக்கும் ஒரு பகுதிசென்னையில் இருந்துசுமார் 95 கிலோ மீட்டர் தொலைவில் அமைந்து இருக்கிறது. ஆனால்,





தமிழ்நாட்டில் அல்ல. அண்டை மாநிலமான ஆந்திர பிரதேசத்தில்.

அதுதான் கைலாசாகோனா அருவி. ஆந்திரா - தமிழ்நாடு எல்லையில் இருக்கும் தமிழர்கள் அதிகம் வாழும் மாவட்டமான சித்தூரில்தான் இந்த இயற்கை எழில் கொஞ்சும் அழகான அருவி உள்ளது. அடிக்கும் வெயிலுக்கு இந்த அருவியில் தண்ணீர் வருமா என்று கேட்டால், மே, ஜூன் மாதங்களில் போய் ஜமாய்க்கலாம் என்று சொல்கிறார்கள் அனுபவித்து வந்தவர்கள்.

சரி, மலை உச்சியில் இருந்து கொட்டும் தண்ணீர், அடிக்கும் வெயில் பட்டு சூடாக இருக்குமே என்றுஅஞ்சவேண்டாம். அவ்வளவு சில்லென்று இருக்கிறதாம். மாதக்கணக்கில் சென்னை வெயிலில் கருகிய நம் மேனிக்கு கைலாசாகோனா அருவியில் கொட்டும் நீர் மருந்துபோல் இருக்கும். மருந்துபோன்றா.. மருந்தேதான்.

ஆம், மலை உச்சியில் இருந்து கொட்டும் நீரில் இயற்கையான தாது பொருட்கள் கலந்து இருப்பதால் உடல்நலனுக்கு நன்மை தரும். அருவியில் குளிப்பதற்கு இவ்வளவு தூரம் போக வேண்டுமா? என்று சலித்துக்கொள்ள வேண்டாம். இங்கு போனசாக இன்னொரு விசயமும் உள்ளது.

அதுதான் டிரெக்கிங். மலையேற்ற பிரியர்கள், இயற்கை விரும்பிகள், திரில்லிங்கான அனுபவத்தை எதிர்பார்ப்பவர்கள் கைலாசகோனா மலைப்பகுதியில் டிரெக்கிங் செய்யலாம்.

ஆனால், திடகாத்திரமான உடலும், மலையேற்றத்துக்கான அடிப்படை பயிற்சியும், போதிய பாதுகாப்புடனும் வந்திருந்தால் மகிழ்ச்சியோடு அதையும் அனுபவிக்கலாம்.

அதே நேரம் காட்டின் உரிமையாளர்களான குரங்குகளை கைலாசாகோனா அருவி பகுதியில் அதிகம் காண முடியும். எனவே உங்கள் உடமைகளை பாதுகாப்பாக வைத்துக்கொள்வது அவசியம்.

காலை 6 மணி முதல் மாலை 6 மணி வரை இந்த அருவிக்கு செல்ல சுற்றுலா பயணிகள் அனுமதிக்கப்படுகிறார்கள். சென்னையில் இருந்து கார் அல்லது சித்தூர் செல்லும் பேருந்தின் மூலமாக இந்த அருவியை அடையலாம். 2 நாள் விடுமுறை கிடைத்தால் அதன் அருகிலேயே விடுதியில் தங்கி முழுமையாக ஜாலி செய்துவிட்டு வரலாம்.

பின்குறிப்பு: இயற்கை கொடுத்த இந்த அழகிய பகுதியை எதிர்கால தலைமுறையினரும் நம்மைபோல் அனுபவிக்க அங்கு பிளாஸ்டிக் கவர்களை தூக்கிவிசிவிட்டு வருவது, சோப், ஷாம்பு போன்றவற்றை பயன்படுத்துவதை தவிர்க்கலாம்.

# வேலைவாய்ப்பு கார்னர்

## மத்திய அரசின் மின் நிறுவனத்தில் வேலை: யாரெல்லாம் விண்ணப்பிக்கலாம்?

மத்திய அரசின் பொதுத்துறை மின் நிறுவனமான பவர்கிரிட் நிறுவனத்தில் காலியாக உள்ள பணியிடங்களை நிரப்ப அறிவிப்பு வெளியாகியுள்ளது. மொத்தம் 660 காலியிடங்களை நிரப்ப அறிவிப்பு வெளியிடப்பட்டுள்ளது. இது பற்றிய விவரங்கள் வருமாறு: பணியிடங்கள்: 660

பதவியின் பெயர்: நான் எக்ஸிகியூட்டிவ்

கல்வித்தகுதி: ஐடிஐ, பிஇ/பிடெக், பிபிஏ/பிபிஎம், பிபிஎஸ், சிஏ/சிஎம்ஏ

வயது வரம்பு: 18 வயது முதல் 27 வயதுக்குள் உள்ளவர்கள் விண்ணப்பிக்கலாம்.

தேர்ச்சி முறை: எழுத்துத் தேர்வு, திறன் தேர்வு

தேர்வு மையம்: சென்னை

விண்ணப்பிக்கும் முறை: ஆன்லைனில் விண்ணப்பிக்கலாம்.

விண்ணப்பக் கட்டணம்: ரூ. 300. எஸ்.சி./எஸ்.டி. பிரிவினருக்கு கட்டணம் இல்லை. கடைசிநாள்: 11.5.2026 கூடுதல் விவரங்களுக்கு: powergrid.in.

## நிலக்கரி நிறுவனத்தில் சேர விருப்பமா...

மத்திய அரசின் கீழ் செயல்படும் வடக்கு நிலக்கரி நிறுவனத்தில் காலியிடங்களுக்கு அறிவிப்பு வெளியிடப்பட்டுள்ளது.

எச்.இ.எம்.எம்., ஆப்பரேட்டர் டிரைனி 472, பாராமெடிக்கல் டிரைனி 75, சிவில் 30 என மொத்தம் 577 இடங்கள் உள்ளன.

கல்வித்தகுதி: பிளஸ் 2/டிப்ளமோ/ பி.எஸ்சி., / நர்சிங் / டி.பார்ம் வயது: 18–30 (1.5.2026ன் படி)

தேர்ச்சி முறை: ஆன்லைன் தேர்வு, சான்றிதழ் சரிபார்ப்பு, விண்ணப்பிக்கும் முறை: ஆன்லைன்

விண்ணப்பக்கட்டணம்: ரூ. 1180. எஸ்.சி., / எஸ்.டி., பிரிவினருக்கு கட்டணம் இல்லை.

கடைசிநாள்: 1.5.2026

விவரங்களுக்கு: nclcil.in

# கள்ளழகர் ஆற்றில் இறங்கும் விழாவுக்காக வைகை அணையிலிருந்து நீர் திறப்பு



**மதுரை, ஏப். 25:**

மதுரை சித்திரை திருவிழா என்பது சைவமும், வைணவமும் இணைந்த உலகப்புகழ் பெற்ற ஒப்பற்ற விழா ஆகும். இதில் மீனாட்சி-சுந்தரேசுவரர் திருக்கல்யாணம், மாசி வீதிகளில் தேரோட்டம், கள்ளழகர் எதிர்சேவை, வைகை ஆற்றில் அழகர் இறங்கி அருள்பாலிக்கும் வைபவம் ஆகியவை முத்தாய்ப்பு நிகழ்ச்சிகள் ஆகும்.

இவ்வாறு முத்திரை பதிக்கும் இந்த சித்திரை பெருவிழா கடந்த 19-ம் தேதி கொடியேற்றத்துடன் தொடங்கியது. விழா நாட்களில் சுவாமியும், அம்மனும் பல்வேறு வாகனங்களில் நான்கு மாசி வீதிகளில் வலம் வந்து காட்சி அளிப்பார்கள். 26-ந் தேதி முதல் முக்கிய நிகழ்ச்சிகள் தொடங்குகின்றன. அன்று இரவு 7.05 மணி முதல் 7.29 மணிக்குள் மீனாட்சி அம்மன் பட்டாபிஷேகம் நடக்கிறது. 27-ந் தேதி திக்கு விஜயம் நடைபெறுகிறது.

சிகர நிகழ்ச்சியாக மீனாட்சி-சுந்தரேசுவரர் திருக்கல்யாண வைபவம் 28-ந் தேதி நடக்கிறது. 29-ந் தேதி மாசி வீதிகளில் தேரோட்டம் நடைபெறும்.

இதற்கிடையே கள்ளழகர் கோவில் சித்திரை விழாவில் 29-ந் தேதியன்று அழகர் மதுரை புறப்படுகிறார். 30-ந் தேதி கள்ளழகர் எதிர்சேவையும், மே 1-ந் தேதி கள்ளழகர் வைகை ஆற்றில் எழுந்தருளும் வைபவமும் நடைபெறுகின்றன. இதற்கான ஏற்பாடுகளை கோவில் நிர்வாகத்தினர் செய்து வருகின்றனர்.

இந்த நிலையில், மதுரையில் கள்ளழகரகை ஆற்றில் இறங்கும் விழாவுக்காக வைகை அணையிலிருந்து தண்ணீர் திறக்கப்பட்டுள்ளது. விநாடிக்கு 500 கன அடி வீதம் 6 நாட்களுக்கு ஆற்றில் தண்ணீர் திறக்கப்படுகிறது. வைகை அணையிலிருந்து நீர் திறக்கப்படுவதால் தேனி, மதுரை மாவட்ட மக்களுக்கு வெள்ள எச்சரிக்கை விடுக்கப்பட்டுள்ளது.

பகல் நேரத்தில் வெயில் தாக்கம் அதிகமாக உள்ளதால், இரவில் தண்ணீர் திறக்கப்பட உள்ளது. ஆரம்பத்தில் கூடுதலாக தண்ணீர் திறக்கப்பட்டு பின்னர் படிப்படியாக குறைக்கப்படும் என்றும் அதிகாரிகள் தெரிவித்துள்ளனர்.

# தமிழகத்தில் ஆட்சி மாற்றம் ஏற்படுமா? - கமல்ஹாசன் பதில்

**சென்னை, ஏப்.25:**

மக்கள் நீதி மய்யம் தலைவர் கமல்ஹாசன், தன்னுடைய மகள் சுருதிஹாசனுடன் சென்னை ஆழ்வார்ப்பேட்டை, எல்டாம்ஸ் சாலையில் உள்ள அரசு மேல்நிலைப் பள்ளியில் உள்ள வாக்குச்சாவடியில் நேற்று ஓட்டுப் போட்டார். நீண்ட வரிசையில் மக்களோடு, மக்களாக நின்று வாக்கை செலுத்தினார்.

பின்னர் வெளியே வந்த கமல்ஹாசன் நிருபர்களிடம் கூறுகையில், 'என்னுடைய ஜனநாயக கடமையை செய்துவிட்டு வந்துள்ளேன்' என்றார். மேலும் அவரிடம், 'மாற்றம் வருமா?' என்று நிருபர்கள் கேள்வி எழுப்பினர்.

அதற்கு கமல்ஹாசன், 'மாற்றம் வந்து கொண்டே இருக்கும்' என்றார். மேலும் நிருபர் ஆட்சி மாற்றமா? என்று அவரிடம் கேட்டார். அதற்கு, 'ஆட்சி மாற்றம் இல்லை. உங்கள் வாழ்க்கை மாறும்' என்று பதில் அளித்து புறப்பட்டு சென்றார்.

# தேர்தல் நிறைவு! குடும்பத்துடன் வெளிநாடு புறப்பட்டார் துணை முதல்வர் உதயநிதி!

**சென்னை, ஏப்.25:**

தமிழ்நாடு சட்டப்பேரவைத் தேர்தலுக்கான வாக்குப்பதிவு நேற்று அமைதியான முறையில் நடைபெற்ற நிலையில், இன்று காலை துணை முதல்வர் உதயநிதி, குடும்பத்துடன் விமான நிலையம் வந்திருந்தார்.

தமிழ்நாடு சட்டப்பேரவைத் தேர்தலுக்கான வாக்குப்பதிவு ஏப்ரல் 23ஆம் தேதி நடைபெற்றது. முன்னதாக ஏப்ரல் மாதம் முதல் அரசியல் கட்சித் தலைவர்களும் வேட்பாளர்களும் தீவிர பிரசாரம் மேற்கொண்டிருந்தனர்.

தமிழக முதல்வரும், துணை முதல்வரும், திமுக வேட்பாளர்கள் மற்றும் கூட்டணிக் கட்சி வேட்பாளர்களை ஆதரித்து சூறாவளி சுற்றுப் பயணம் மேற்கொண்டிருந்தனர்.

இந்த நிலையில், செவ்வாய்க்கிழமையுடன் பிரசாரங்கள் நிறைவு பெற்று



வியாழக்கிழமை தமிழ்நாட்டில் வாக்குப்பதிவு முடிவடைந்தது. ஒட்டுமொத்தமாக தமிழகத்தில் 85 சதவிகித வாக்குகள் பதிவாகியுள்ளன. இது வரலாறு காணாத சாதனை என்றும் கூறப்படுகிறது.

இந்த நிலையில், இன்று காலை, துணை முதல்வர் உதயநிதி ஸ்டாலின், தன்னுடைய மனைவி மற்றும் மகளுடன் சென்னை விமான நிலையம் வந்தார். அவர் வெளிநாடுக்கு செல்லவிருப்பதாகவும் தகவல்கள் வெளியாகியுள்ளன.

சென்னையில் கொளுத்தும் வெய்யிலில் சுழன்று சுழன்று பிரசாரம் செய்த துணை முதல்வர், வாக்கு எண்ணிக்கைக்கு முன்னதாக ஒரு சிறு இடைவேளைக்காக குடும்பத்துடன் வெளிநாடு சென்றிருப்பதாகவும் கூறப்படுகிறது.

# திமுக ஆட்சிக்கு எதிரான கொந்தளிப்பின் விளைவே 85.12% வாக்குகள் பதிவு - அன்புமணி

**சென்னை, ஏப்.25:**

"திமுக ஆட்சிக்கு எதிராக மக்கள் பெரும் கொந்தளிப்பில் இருந்தனர். திமுக ஆட்சியை அகற்றுவதற்காக திரண்டு வந்து வாக்களித்துள்ளனர். தேர்தலில் தங்களின் கோபத்தை தீர்ப்பாக வெளிப்படுத்தி விட்டனர். அதன் விளைவுதான் வரலாறு காணாத வகையில் 85.12% வாக்குகள் பதிவாகியிருக்கிறது" என்று பாமக தலைவர் அன்புமணி கூறியுள்ளார்.

இது குறித்து அவர் வெளியிட்டுள்ள அறிக்கையில், "தமிழ்நாடு சட்டப்பேரவை தேர்தலில் 85.12% வாக்குகள் பதிவாகியிருப்பதாக தேர்தல் ஆணையம் தெரிவித்திருக்கிறது. தமிழ்நாட்டில் தேர்தல் வரலாற்றில் இந்த அளவு வாக்குகள் பதிவாகியிருப்பது இதுதான் முதல் முறையாகும்.

தமிழ்நாட்டில் திமுக ஆட்சிக்கு எதிராக மக்கள்



பெரும் கொந்தளிப்பில் இருந்தனர்; திமுக ஆட்சியை அகற்றுவதற்காக திரண்டு வந்து வாக்களித்துள்ளனர் என்பதையுமே இது காட்டுகிறது.

தமிழ்நாட்டு மக்கள் எப்போதுமே ஜனநாயகத்தை மதிப்பவர்கள்; அமைதிப்புரட்சி செய்பவர்கள். இப்போதும் அதைத்தான் நிகழ்த்திக் காட்டியிருக்கிறார்கள். திமுக ஆட்சிக்கு வந்த நாள் முதலாகவே மக்களுக்கு எதிரான நடவடிக்கைகள் அரசால் கட்டவிழ்த்து விடப்பட்டன.

இன்னொருபுறம் சட்டம் - ஒழுங்கை பாதுகாத்தல், கஞ்சா உள்ளிட்ட போதைப் பொருள்களை கட்டுப்படுத்துதல், பெண்கள் மற்றும் குழந்தைகளின் பாதுகாப்பை உறுதி செய்தல், வேலைவாய்ப்பு வழங்குதல் உள்ளிட்ட ஓர் அரசின் அடிப்படைக் கடமைகள் எதையுமே திமுக அரசு செய்யவில்லை.

அதனால், கொந்தளித்துப் போன மக்கள் திமுகவுக்கு பாடம் புகட்டுவதற்காக காத்திருந்தனர். மக்கள் தங்களின் உணர்வுகளை அப்பட்டமாக வெளிப்படுத்தாமல், தெளிந்த நீரோடையாக இருந்தாலும், ஆழ்கடலின் பிரளயம் போன்று அவர்களின் மனதுக்குள் திமுகவை இந்தத் தேர்தலில் வீழ்த்த வேண்டும் என்ற கோபம் நீரு பூத்த நெருப்பாக கனன்று கொண்டே இருந்தது.

# காச்சிகுடா-தூத்துக்குடி எக்ஸ்பிரஸ் ரெயில் சேவையில் மாற்றம்!

**சென்னை, ஏப்.25:**

பராமரிப்பு பணிகள் காரணமாக காச்சிகுடாதூத்துக்குடி இடையிலான வாராந்திர எக்ஸ்பிரஸ் ரெயில் சேவையில் நேர மாற்றம் செய்யப்பட்டுள்ளதாக தெற்கு ரெயில்வே தெரிவித்துள்ளது. இதுகுறித்து வெளியிடப்பட்ட செய்திக்குறிப்பில் கூறியிருப்பதாவது:-

தெலுங்கானா மாநிலம் காச்சிகுடாவில் இருந்து தூத்துக்குடி நோக்கி இயக்கப்படும் எக்ஸ்பிரஸ் ரெயில் (வண்டி எண் 17615) வருகிற ஜூன் 15ஆம் தேதி முதல் மாற்றிய நேர அட்டவணைப்படி இயக்கப்படும்.

அதன்படி, திருச்சிக்கு மாலை 4.55 மணிக்கு பதிலாக மதியம் 2 மணிக்கே ரெயில் வந்து சேரும். தொடர்ந்து, மதுரைக்கு மாலை 4.20 மணி, விருதுநகருக்கு மாலை 5.03 மணி, தூத்துக்குடிக்கு இரவு 10.30 மணிக்கு பதிலாக இரவு 7.15 மணிக்கே ரெயில் சென்றடையும்.

இவ்வாறு அதில் தெரிவிக்கப்பட்டுள்ளது.

# விஜய்யுடன் எப்போதும் கூட்டணி இல்லை - பா.ஜ.க. தலைவர் நிதின் நபின்

**புதுடெல்லி, ஏப்.25:**

பா.ஜ.க. தேசிய தலைவர் நிதின் நபின் தனியார் செய்தி சேனலுக்கு பேட்டி அளித்தார். அப்போது, 5 மாநில சட்டசபை தேர்தல் நிலவரம் குறித்து கேட்கப்பட்டது.

அதற்கு அவர் கூறியதாவது:- சட்டசபை தேர்தல் நடக்கும் 5 மாநிலங்களிலும் உள்ள நிலவரம் மாறுபட்டது. இருப்பினும், 5 மாநிலங்களிலும் பா.ஜனதாவுக்கு சாதகமான சூழ்நிலை நிலவுவதாக கருதுகிறேன். அசாம், புதுச்சேரி ஆகியவற்றில் எங்கள் அரசு நிச்சயமாக மீண்டும் அமையும். அதில் எந்த சந்தேகமும் இல்லை. மேற்கு வங்காளத்தை பொறுத்தவரை பா.ஜனதாவுக்கு ஆதரவாக ஆச்சரியமளிக்கும் முடிவு வரப்போகிறது. அங்கு பா.ஜனதா முதல்முறையாக ஆட்சி அமைக்கப்போவது 100 சதவீதம் உறுதி. மக்களின் மனநிலையை பார்த்தால், தனிப்பெரும்பான்மையுடன் பா.ஜனதா ஆட்சி அமைக்கும்.

எத்தனை தொகுதிகள் கிடைக்கும் என்று இப்போதே சொல்ல முடியாது. போகப்போக தெளிவான நிலை உருவாகும். தற்போதைய நிலவரத்தை பார்த்தால், நாங்கள் ஆட்சி அமைப்பது நிச்சயம். அதுபோல், தமிழ்நாட்டில் தேசிய ஜனநாயக கூட்டணி வெற்றி பெறும். அங்கு நாங்கள் தலைமை கட்சி அல்ல. கூட்டணிக்கு அ.தி.மு.க தலைமை தாங்குகிறது. ஆளும் தி.மு.க.வின் ஊழல், அராஜகம், சனாதன எதிர்ப்பு ஆகியவற்றுக்கு எதிராக மக்கள் மனநிலை காணப்படுகிறது. களத்தை பார்த்தால், தி.மு.க.வுக்கு எதிரான அலை வீசுவது தெளிவாக தெரிகிறது. நான் தமிழ்நாட்டில் பிரசாரம் செய்த அனுபவத்தை வைத்து பார்த்தால், இத்தேர்தலில் தி.மு.க.வுக்கு கணிசமான பின்னடைவு ஏற்படும். விஜய் அரசியலுக்கு புதிதாக வந்துள்ளார். ஆனால் புதிதாக ஒருவர் வந்தவுடன் உடனடியாக பெரிய தாக்கத்தை உருவாக்க முடியாது. தமிழ்நாட்டில் எங்கள் கூட்டணி மிக வலுவாக உள்ளது. தேர்தலுக்கு பிறகு விஜய்யுடன் கூட்டணி அமைக்க வேண்டிய அவசியம் எழாது. விஜயுடன் கூட்டணி தேவையில்லை. எங்கள் கூட்டணி கட்சிகள் ஒற்றுமையாக போட்டியிட்டன. தமிழ்நாட்டில் தேசிய ஜனநாயக கூட்டணி தனித்தே ஆட்சி அமைக்கும். இவ்வாறு அவர் கூறினார்.

# ஹார்முஸ் ஜலசந்தி நெருக்கடி - ஏப்.30-ல் தூதரக தலைவர்கள் மாநாட்டில் பிரதமர் மோடி விளக்க உரை

**புதுடெல்லி, ஏப்.25:**

ஹார்முஸ் ஜலசந்தியில் அமெரிக்காவும் ஈரானும் ஆதிக்கம் செலுத்தி வரும் நிலையில், வரும் 30-ம் தேதி டெல்லியில் நடைபெற உள்ள இந்திய தூதரகத் தலைவர்கள் மாநாட்டில் பிரதமர் நரேந்திர மோடி இது குறித்து விளக்க உரை நிகழ்த்த உள்ளதாக தகவல் வெளியாகி உள்ளது.



கடந்த பிப்.28-ம் தேதி அமெரிக்காவும் இஸ்ரேலும் இணைந்து ஈரான் மீது தாக்குதல் நடத்தின. இதையடுத்து, இஸ்ரேலுக்கு எதிராகவும், வளைகுடா நாடுகளில் உள்ள அமெரிக்க நிலைகளை குறிவைத்தும் ஈரான் தாக்குதல் நடத்தியது. மேலும், ஹார்முஸ் ஜலசந்தியை முடக்கியது.

இரு தரப்புக்கும் இடையே மோதல் முற்றிய நிலையில், பாகிஸ்தானின் தலையீடு காரணமாக கடந்த 8-ம் தேதி இரு வாரங்களுக்கு போர் நிறுத்தம் அறிவிக்கப்பட்டது. இதைத்தொடர்ந்து அமெரிக்காவும் ஈரானும் பேச்சுவார்த்தையில் ஈடுபட்டன. எனினும், அது பலனளிக்காத நிலையில், போர் நிறுத்தத்தை காலவரையின்றி நீட்டிப்பதாக கடந்த 22-ம் தேதி அமெரிக்க அதிபர் டொனால்ட் ட்ரம்ப் அறிவித்தார்.

மேலும், ஈரான் துறைமுகங்களையும் ஹார்முஸ் ஜலசந்தியையும் அமெரிக்க கடற்படை முடக்கியுள்ள நிலையில், அமெரிக்காவுடன் அந்த நாடு உடன்பாடு மேற்கொள்ளும் வரை முடக்கம் தொடரும் என்று அறிவித்தார். ஈரான் மற்றும் அமெரிக்காவின் நடவடிக்கைகளால் ஹார்முஸ் ஜலசந்தி வழியாக கப்பல்கள் வெளியேறுவதோ உள்ளே செல்வதோ முடியாத நிலை உள்ளது. இந்திய துறைமுகங்களுக்கு வர வேண்டிய 14 கப்பல்கள் தற்போது ஹார்முஸ் ஜலசந்திக்கு உள்ளே நிறுத்திவைக்கப்பட்டுள்ளன. இதனால், இந்தியாவின் எரிசக்தி பாதுகாப்பு பாதிக்கப்பட்டுள்ளது.

இந்நிலையில், ஏப்ரல் 28 முதல் 30 வரை மூன்று நாட்களுக்கு இந்திய தூதரக தலைவர்கள் மாநாடு புதுடெல்லியில் நடைபெற உள்ளது. இதில், பல்வேறு நாடுகளில் இந்திய தூதர்களாக செயல்பட்டு வருபவர்கள் கலந்து கொள்ள இருக்கிறார்கள்.

இந்த மாநாட்டின் முதல் நாள், வெளியுறவுச் செயலாளர் விக்ரம் மிஸ்ரி தலைமையில் நடைபெற உள்ளது. இதில், மேற்கு ஆசியாவில் நிலவும் நெருக்கடி மற்றும் ஹார்முஸ் ஜலசந்தியை அமெரிக்காவும் ஈரானும் முற்றுகையிட்டு உள்ளதால் ஏற்படும் கடுமையான பொருளாதார பின்விளைவுகள் ஆகியவை குறித்து விக்ரம் மிஸ்ரி விளக்கம் அளிக்க உள்ளார்.

## விளையாட்டு செய்திகள்

### மும்பை இந்தியன்ஸுக்கு எதிராக சதம் விளாசிய முதல் சிஎஸ்கே வீரர் சஞ்சு சாம்சன்!

**வான்கடே, ஏப்.25:**

வான்கடேயில் நடைபெற்ற ஐபிஎல் 2026-ன் 33-வது போட்டியில் சஞ்சு சாம்சன் சிஎஸ்கேவுக்காக விளாசிய 54பந்து 101 ரன் காட்டடி இன்னிங்ஸின் ரன்களை மும்பை இந்தியன்ஸின் 11 வீரர்களும் சேர்ந்து 19 ஓவர்களில் எடுத்து 104 ரன்களுக்கு வீழ்ந்தது. ஒருவர் அடித்த ரன்களை மும்பையின் 11 வீரர்கள் சேர்ந்து எடுத்தது மும்பை இந்தியன்ஸின் ஐபிஎல் வரலாற்றில் மாபெரும் அடி.

இந்த வெற்றி சிஎஸ்கே அணியின் ஐபிஎல் தொடரின் மிகப்பெரிய வெற்றியாகும். அதே வேளையில் ஐபிஎல் வரலாற்றில் மும்பை இந்தியன்ஸின் ஆகப்பெரும் தோல்வியாகும். 2013-ல் ராஜஸ்தான் ராயல்ஸ் அணிக்கு எதிராக 87 ரன்களில் தோல்வி அடைந்த பிறகு மும்பை இந்தியன்ஸின் மாபெரும் அடிசறுக்கல் இதுவே. குறிப்பாக வான்கடேயில் ஆர்சிபிக்கு எதிராக 2015-ம் ஆண்டு 39 ரன்களில் தோற்றதுதான் அதிக ரன்கள் வித்தியாசத்தில் தோற்றதாகும் நேற்று அது தவிடு பொடியாகி 103 ரன்கள் வித்தியாசத்தில் தோல்வி அடைந்தது. சிஎஸ்கே ஐபிஎல் தொடரில் முதன் முதலாக 100+ ரன்கள் வித்தியாசத்தில் வெற்றி பெற்றது. இதற்கு முன்பு 2015 தொடரில் சேப்பாக்கத்தில் கிங்ஸ் லெவன் பஞ்சாபை 97 ரன்கள் வித்தியாசத்தில் வீழ்த்தியதே மிகப்பெரிய வெற்றியாக இருந்தது. அதே போல் சிஎஸ்கேவுக்கு எதிராக மும்பை இந்தியன்ஸ் எடுத்த 104 ரன்களுக்கு ஆல் அவுட் ஆனது, சிஎஸ்கேவுக்கு எதிராக ஆகக்குறைந்த ரன் எண்ணிக்கையாகும். மும்பை இந்தியன்ஸை 19 முறை சிஎஸ்கே வீழ்த்தி சிஎஸ்கே சாதனை புரிந்துள்ளது. பஞ்சாப் கிங்ஸ் மும்பை இந்தியன்ஸ் அணியை 18 முறை தோற்கடித்துள்ளது.

### டி20 தொடரை இழந்தது இந்திய அணி

**ஜோகன்னஸ்பர்க், ஏப்.25:**

இந்திய மகளிர் கிரிக்கெட் அணி தென் ஆப்பிரிக்காவில் சுற்றுப்பயணம் செய்து விளையாடி வருகிறது. இரு அணிகள் இடையிலான 3-வது டி20 போட்டி நேற்று முன்தினம் இரவு ஜோகன்னஸ்பர்க்கில் உள்ள வாண்டரர்ஸ் மைதானத்தில் நடைபெற்றது. முதலில் பேட் செய்த இந்திய மகளிர் அணி 20 ஓவர்களில் 4 விக்கெட்கள் இழப்புக்கு 192 ரன்கள் குவித்தது. கேப்டன் ஹர்மன்பிரீத் கவுர் 38 பந்துகளில், 3 சிக்ஸர்கள், 7 பவுண்டரிகளுடன் 66 ரன்களும், ஷபாலி வர்மா 46 பந்துகளில், 2 சிக்ஸர்கள், 8 பவுண்டரிகளுடன் 64 ரன்களும் விளாசினார். ஸ்மிருதி மந்தனா 35 பந்துகளில், ஒரு சிக்ஸர், 5 பவுண்டரிகளுடன் 37 ரன்கள் சேர்த்தார். 193 ரன்கள் இலக்குடன் பேட் செய்த தென் ஆப்பிரிக்க மகளிர் அணி 16.3 ஓவர்களில் ஒரு விக்கெட்டை மட்டும் இழந்து 193 ரன்கள் எடுத்து வெற்றி பெற்றது. கேப்டன் லாரா வோல்வார்ட் 53 பந்துகளில், 5 சிக்ஸர்கள், 14 பவுண்டரிகளுடன் 115 ரன்களும், சுனே லஸ் 42 பந்துகளில், 2 சிக்ஸர்கள், 6 பவுண்டரிகளுடன் 64 ரன்களும் விளாசினர். இந்த ஜோடி முதல் விக்கெட்டுக்கு 183 ரன்கள் குவித்தது. 9 விக்கெட்கள் வித்தியாசத்தில் வெற்றி பெற்ற தென் ஆப்பிரிக்க மகளிர் அணி 5 ஆட்டங்கள் கொண்ட டி 20 தொடரை 3-0 என தன்வசப்படுத்தியது. அந்த அணி முதல் போட்டியில் 6 விக்கெட்கள் வித்தியாசத்திலும், 2-வது போட்டியில் 8 விக்கெட்கள் வித்தியாசத்திலும் வெற்றி கண்டிருந்தது.

# வருமான வரித்துறை சோதனை! ஆதாரங்களை வெளியிட்டார் செல்வப்பெருந்தகை

**சென்னை, ஏப்.25:**

காங்கிரஸ் தலைவர் செல்வப்பெருந்தகை தொடர்பான இடங்களில் வருமான வரித்துறை சோதனை நடைபெற்றதாக ஆதாரங்களை வெளியிட்டுள்ளார்.



தமிழ்நாடு காங்கிரஸ் கமிட்டியின் தலைவர் செல்வப்பெருந்தகை தொடர்பான இடங்களில் வருமான வரித்துறை திடீர் சோதனை நடைபெற்றதாகவும், அவற்றை ஊடகங்களில் ஏன் அறிவிக்கவில்லை எனவும் செய்தியாளர்கள் சந்திப்பில் அவர் கூறினார்.

செய்தியாளர்கள் சந்திப்பின் போது, புகைப்படம் மற்றும் விடியோ ஆதாரங்களை வெளியிட்ட செல்வப்பெருந்தகை, "இந்தப் புகைப்படங்களில் இருப்பவர்களெல்லாம் யார்? எந்த அதிகாரிகள்? இவர்கள் மீது நடவடிக்கை எடுக்கப்படுமா? அவர்கள் சோதனை செய்யவே இல்லை என உண்மையை மறைக்கிறார்களே. என் மீது புகாரும் கொடுக்கின்றனர்.

இப்போது இந்த புகைப்படங்களையும் வன்தட்டையும் (HARD DISK - ஹார்ட் டிஸ்க்) நான் ஒப்படைக்கிறேன். நீங்கள் சோதனை செய்வது தவறு கிடையாது. சோதனை மேற்கொண்டதை மக்களிடமோ பத்திரிகையாளர்களிடமோ தெரிவித்தீர்களா? ஏன் தெரிவிக்கவில்லை. இதில் என்ன ரகசியம் இருக்கிறது?

இந்த அதிகாரிகளெல்லாம் யார்? காவல்துறை ஏன் நிற்கின்றனர்? அதிமுக, அமமுக, பாமகவினர் வீட்டிலெல்லாம் எவ்வளவு சோதனை செய்திருக்கிறீர்கள்? எவ்வளவு கைப்பற்றினீர்கள்? எத்தனை இடங்களில் சோதனை செய்தீர்கள் என வெள்ளை அறிக்கை கொடுக்க வேண்டும்" என்று தெரிவித்தார்.

# போதிய பேருந்துகள் இல்லாததால் கிளாம்பாக்கம், செங்கையில் பயணிகள் மறியல்

**செங்கல்பட்டு, ஏப்.25:**

சட்டப்பேரவை தேர்தலில் வாக்களிக்க போதிய பேருந்துகள் இல்லாததால் கிளாம்பாக்கம், செங்கல்பட்டில் பயணிகள் பல மணி நேரம் காத்திருந்து அதிருப்தியடைந்து மறியல் போரட்டத்தில் ஈடுபட்டனர்.



தமிழக சட்டப்பேரவை தேர்தலையொட்டி சொந்த ஊர்களுக்குச் சென்று வாக்களிக்க நேற்று முன் தினம் கிளாம்பாக்கம் பேருந்து நிலையத்தில் பயணிகள் திரண்டதால் பெரும் பரபரப்பு ஏற்பட்டது. போதிய பேருந்துகள் இல்லை எனக் கூறி பயணிகள் சாலை மறியல் போராட்டத்தில் ஈடுபட்டனர். தென் மாவட்டங்களுக்கு செல்லும் ஏழை மற்றும் நடுத்தர மக்கள் அரசுப் பேருந்துகளை நாடி கிளாம்பாக்கத்தில் குவிந்தனர். திருச்சி, மதுரை, கோவை, திருநெல்வேலி உள்ளிட்ட முக்கிய நகரங்களுக்குப் போதிய பேருந்துகள் இயக்கப்படவில்லை.

இதனால் பெண்கள், குழந்தைகள் என ஆயிரக்கணக்கான பயணிகள் விடிய விடிய பேருந்து நிலையத்திலேயே காத்திருக்கும் நிலை நேரிட்டது. பேருந்துகள் வந்தபோது மக்கள் முண்டியடித்து ஏறியதால் தள்ளுமுள்ளு ஏற்பட்டது.

இதில், ஆத்திரமடைந்த பயணிகள் போக்குவரத்து அதிகாரிகளுடன் வாக்குவாதத்தில் ஈடுபட்டனர். ஒருகட்டத்தில் பேருந்து நிலையத்துக்கு உள்ளேயே அமர்ந்து பயணிகள் போராட்டம் நடத்தினர்.

மேலும், அவர்கள் ஜிஎஸ்டி சாலையில் மறியலில் ஈடுபட முயன்றபோது போலீஸார் தடுத்து நிறுத்தி பேச்சுவார்த்தை நடத்தினர். நேற்று அதிகாலை 4 மணி வரை பயணிகள் அனுப்பி வைக்கப்பட்டனர்.

இருப்பினும் கூட்டத்தைக் கட்டுப்படுத்த முடியாமல் வண்டலூர் ஜிஎஸ்டி சாலையில் கடும் போக்குவரத்து நெரிசல் ஏற்பட்டது. அதிகாரிகள் முன்னெச்சரிக்கை நடவடிக்கை எடுக்கவில்லை என பயணிகள் குற்றம் சாட்டினர்.

மேலும், நேற்று காலை 9 மணிக்கு பேருந்து இல்லாததால், திண்டிவனம், திருவண்ணாமலை, வந்தவாசி, செய்யூர் விழுப்புரம் சேலம் போன்ற இடங்களுக்கு செல்லும் பயணிகள் கடும் அவதியடைந்தனர். அப்போது மீண்டும் பயணிகள் கிளாம்பாக்கத்தில் போராட்டத்தில் ஈடுபட்டனர். இதனால் சுமார் 3 மணி நேரம் ஜி.எஸ்.டி சாலையில் கடும் போக்குவரத்து நெரிசல் ஏற்பட்டது. இதனால் சொந்த வாடகை வாகனத்தில் ஊருக்கு சென்றவர்கள் அவதியடைந்தனர்.

## க்ரைம் கார்னர்

### 18 ஆண்டு விசாரணைக்குப் பிறகு போதைப் பொருள் வழக்கில் உ.பி. நபருக்கு 10 ஆண்டு சிறை

**லக்னோ, ஏப்.25:**

உ.பி.யில் போதைப் பொருள் வைத்திருந்த ஒருவருக்கு 18 ஆண்டு கால விசாரணைக்குப் பிறகு ஜான்சி நீதிமன்றம் 10 ஆண்டுகள் சிறை மற்றும் ரூ.1 லட்சம் அபராதம் விதித்துள்ளது.

இது குறித்து ஜான்சி மாவட்ட உதவி அரசு வழக்கறிஞர் தீபக் திவாரி கூறுகையில், "உத்தர பிரதேச மாநிலம் கான்பூர் மாவட்டம் கல்யாண் பூரை சேர்ந்தவர் சஞ்சய் சிங். இவர் தற்போது மகாவீரன் பகுதியில் வசித்து வருகிறார். இவர் கடந்த 2008ம் ஆண்டு ஏப்ரல் 2ம் தேதி பிரேம்நகர் போலீஸார் நடத்திய சோதனையில் கைது செய்யப்பட்டார். சஞ்சய் சிங்கிடம் இருந்து 300 கிராம் போதைப் பொருளை கைது செய்த போலீஸார் அவர் மீது வழக்குப் பதிவு செய்து சிறையில் அடைத்தனர்" என்று தெரிவித்தார்.

சஞ்சய் சிங் மீது சங்கிலி பறிப்பு, கொள்ளை உள்ளிட்ட பல்வேறு குற்ற வழக்குகள் பல்வேறு காவல் நிலையங்களில் பதிவு செய்யப்பட்டுள்ளன. இந்நிலையில் போதைப் பொருள் வழக்கில் ஜான்சி கூடுதல் மாவட்ட மற்றும் அமர்வு நீதிபதி சரத் சவுத்ரி புதன்கிழமை அளித்த தீர்ப்பில், சஞ்சய் சிங் குற்றவாளி என உறுதி செய்தார். அவருக்கு 10 ஆண்டுகள் சிறைத் தண்டனையும், ரூ.1 லட்சம் அபராதமும் விதித்து உத்தரவிட்டார்.

### கம்போடியாவுக்கு ஆட்களை கடத்த முயன்ற 4 பேர் கும்பல் கைது: சைபர் க்ரைம் போலீஸார் நடவடிக்கை



**சென்னை, ஏப்.25:**

வெளிநாட்டு வேலை என்ற பெயரில் ஏழைகளை குறிவைத்து, அவர்களுக்கு அதிக சம்பளம் தருவதாக ஆசை வார்த்தை கூறி வெளிநாட்டுக்கு அழைத்துச் சென்று, அவர்களுக்கு தெரியாமலே அவர்களை அக்கும்பல் கம்போடியாவில் உள்ள சைபர் மோசடி கும்பலிடம் விற்பனை செய்ய முயல்வதாக, தமிழக சைபர் க்ரைம் போலீஸாருக்கு ரகசிய தகவல் கிடைத்தது.

குறிப்பாக, மதுரை, மேலூரைச் சேர்ந்த சிலரை வெளிநாட்டில், 'டேட்டா என்ட்ரி' வேலை என்ற பெயரில் சில முகவர்கள் அணுகி உள்ளனர். அதிக சம்பளம், எளிதான வேலை, இலவச தங்கும் இடம் வழங்குவதாக உறுதி அளித்துள்ளனர். இதற்கு சம்மதம் தெரிவித்தவர்களுக்கு தட்டச்சு சோதனை விடியோ நேர்காணல் மற்றும் மருத்துவ பரிசோதனை போன்றவற்றை போலியாக நடத்தியுள்ளனர். இதில் தேர்வானவர்களை கம்போடியாவுக்கு அழைத்துச் செல்ல ஏற்பாடுகள் நடைபெற்றுள்ளன. இதை அறிந்த மாநில சைபர் க்ரைம் கூடுதல் டிஜிபி அனிஷா ஹூசைன், இந்த கும்பலை கைது செய்ய உத்தரவிட்டார். அதன்படி, அப்பிரிவு எஸ்.பி. ஷஹ்னாஸ் தலைமையிலான தனிப்படை போலீஸார் விசாரித்தனர்.

இதில், மோசடி கும்பல் மதுரையைச் சேர்ந்தவர்களை சென்னை விமான நிலையத்திலிருந்து விமானம் மூலம் வெளிநாட்டுக்கு அழைத்துச் சென்று, அங்கு கம்போடியா நாட்டு சைபர் மோசடி கும்பலிடம் விற்பனை செய்ய திட்டமிட்டது தெரிந்தது. இதையடுத்து, சென்னை விமான நிலையத்தில் கண்காணித்து 3 முகவர்கள் மற்றும் 1 வழிகாட்டி என 4 பேரை கைது செய்தனர். மேலும், சைபர் மோசடி கும்பலுக்கு விற்பனை செய்யப்பட இருந்தவர்களை மீட்டு குடும்பத்தினரிடம் ஒப்படைத்தனர். சைபர் மோசடி கும்பலிடம் விற்பனை செய்யப்படுபவர்கள் சைபர் குற்றச் செயல்களில் ஈடுபடகட்டாயப்படுத்தப்படுகிறார்கள். மறுப்பவர்கள் அல்லது இலக்கை சாதிக்காதவர்கள் அடித்து துன்புறுத்தப்படுகிறார்கள்.

எனவே, வெளிநாட்டு வேலை பெறுவதற்கு முன்னர் நம்பகத் தன்மை குறித்து தெரிந்து கொண்டு செயல்படுங்கள் என சைபர் க்ரைம் போலீஸார் பொதுமக்களுக்கு அறிவுறுத்தியுள்ளனர்.

## வணிகச் செய்திகள்

### இந்தியாவில் ரூ.2,800 கோடி முதலீடு: அமேசான் நிறுவனம் அறிவிப்பு

**புதுடெல்லி, ஏப்.25:**

இந்தியாவில் தனது விநியோகக்கட்டமைப்பு வசதிகளை மேம்படுத்தவும், ஊழியர்களின் நலன் சார்ந்த திட்டங்களை விரிவுபடுத்தவும் ரூ.2,800 கோடிக்கும் அதிகமான தொகையை முதலீடு செய்ய உள்ளதாக அமேசான் இந்தியா நிறுவனம் தெரிவித்துள்ளது.

இதுகுறித்து அமேசான் நிறுவனம் வெளியிட்டுள்ள செய்திக்குறிப்பில் தெரிவிக்கப்பட்டுள்ளதாவது: இந்தியாவில் 2030-ம் ஆண்டுக்குள் 35 பில்லியன் டாலர் (சுமார் ரூ. 3 லட்சம் கோடி) முதலீடு செய்ய இலக்கு நிர்ணயிக்கப்பட்டுள்ளது. இதன் ஒரு பகுதியாக, தற்போது ரூ.2,800 கோடி (300 மில்லியன் டாலர்) முதலீடு மேற்கொள்ளப்பட உள்ளது. இந்தத் தொகையானது அமேசான் நிறுவனத்தின் விநியோக மையங்களை வலுப்படுத்தவும், வாடிக்கையாளர்களுக்கு அதிவேகமாகப் பொருட்களை விநியோகிக்கும் குயிக் காமர்ஸ் சேவையை விரிவுபடுத்தவும் பயன்படுத்தப்படும். ஊழியர்கள் பாதுகாப்பு, உடல்நலம் முதலீட்டின் மற்றொரு முக்கியப் பகுதியாக, ஊழியர்களின் பாதுகாப்பு, உடல்நலம் மற்றும் நிதி சார்ந்த நலத் திட்டங்கள் மேம்படுத்தப்பட உள்ளன. குறிப்பாக, 'புராஜெக்ட் ஆஷ்ரே' போன்ற நலத்திட்டங்கள், மருத்துவ மற்றும் விபத்துக் காப்பீட்டு வசதிகள் போன்றவை விரிவு படுத்தப்படும். கடந்த 2025-ம் ஆண்டில் அமேசான் நிறுவனம் மேற்கொண்ட ரூ.2,000 கோடி முதலீட்டின் மூலம், இந்தியாவில் 17 புதிய சேமிப்புக் கிடங்குகள், 6 தரம் பிரிக்கும் மையங்கள் மற்றும் 75 விநியோக நிலையங்கள் உருவாக்கப்பட்டன.

# கோடை வெயிலின் தாக்கம் அதிகரித்துள்ளதால் தமிழகத்தின் மின் நுகர்வில் புதிய உச்சம்

**சென்னை, ஏப்.25:**

கோடை வெயிலின் தாக்கம் காரணமாக, தமிழகத்தின் மின் நுகர்வு 466.16 மில்லியன் யூனிட்கள் என்ற புதிய உச்சத்தை எட்டியுள்ளது.

தமிழகத்தில் கோடை வெயிலின் தாக்கம் கடந்த சில நாட்களாக அதிகரித்து வருகிறது. வெப்பம் அதிகரித்துள்ளால் வீடுகளில் எந்த நேரமும் மின் விசிறிகள் ஓடிக் கொண்டே இருக்கின்றன.

இரவு நேரங்களில் ஏசி பயன்பாடு அதிகரித்துள்ளது. தமிழகத்தின் தினசரி மின்சார தேவை சராசரியாக 16 ஆயிரம் மெகாவாட் என்ற அளவில் இருக்கும். கோடை காலங்களில் 20 ஆயிரம் மெகாவாட்டையும் கடந்து மின் தேவை அதிகரிக்கும்.

தமிழகத்தில் கடந்த 2024-ம் ஆண்டு மே 2-ம் தேதி மின்சார தேவை 20,830 மெகாவாட் பதிவான நிலையில், இந்த ஆண்டு கோடை காலத்துக்கு முன்பு இதுவே அதிகபட்ச அளவாக இருந்த நிலையில், கடந்த ஏப்.17-ம் தேதி 21,010 மெகாவாட் மின் தேவை பதிவாகி புதிய உச்சத்தை எட்டியது.

இந்நிலையில், நேற்று முன்தினம் (22-ம் தேதி) இதுவரை இல்லாத அளவில் 21,051 மெகாவாட் மின் தேவை பதிவாகியுள்ளது. இதேபோல, மின் நுகர்வு புதிய உச்சத்தை எட்டியுள்ளது.

இந்த ஆண்டு கோடை காலத்துக்கு முன்பாக 2024-ம் ஆண்டு ஏப்.30-ம் தேதி மின் நுகர்வு 454.32 மில்லியன் யூனிட்களாக இருந்த நிலையில், கடந்த 18-ம் தேதி 462.66 மில்லியன் யூனிட்கள் மின் நுகர்வு இருந்தது.

தற்போது, இந்த அளவையும் தாண்டி நேற்று முன்தினம் (22-ம் தேதி) 466.16 மில்லியன் யூனிட்கள் மின் நுகர்வு பதிவானது.

இதுகுறித்து, மின்வாரிய அதிகாரிகள் கூறுகையில், "வழக்கமாக மின்சாரத் தேவை மதிய நேரத்தில் தான் உச்சத்தில் இருக்கும்.

ஆனால், இந்த ஆண்டு இரவு நேரங்களில் வெப்பத்தின் தாக்கம் மிக அதிகமாக இருப்பதால், வீடுகளில் ஏசி பயன்பாடு பல மடங்கு அதிகரித்துள்ளது.

இதுவே மின் தேவை புதிய உச்சத்தைத் தொட முதன்மையான காரணமாக அமைந்துள்ளது.

மேலும், வெயிலின் தாக்கம் அதிகரிக்கும் போது 23 ஆயிரம் மெகாவாட் வரை மின் தேவை இருக்கும் என எதிர்பார்க்கப்படுகிறது" என்றனர்.

# இந்தியா - நியூஸிலாந்து இடையே தடையற்ற வர்த்தக ஒப்பந்தம்!

புதுடெல்லி, ஏப்.25:

இந்தியா - நியூஸிலாந்து இடையேயான தடையற்ற வர்த்தக ஒப்பந்தம் ஏப். 27-ல் கையெழுத்தாகவுள்ளதாக நியூஸி. பிரதமர் கிறிஸ்டோபர் லக்ஸன் அறிவித்துள்ளார்.



இந்தியா - நியூஸிலாந்து இடையே தடையற்ற வர்த்தகம் ஒப்பந்தம் மேற்கொள்ள 2025 மார்ச் மாதத்தில் பேச்சுவார்த்தை தொடங்கப்பட்டு, 2025 டிசம்பரில் பேச்சுவார்த்தை நிறைவடைந்தது.

இந்த நிலையில், இரு நாடுகளும் தடையற்ற வர்த்தக ஒப்பந்தத்தில் திங்கள்கிழமையில் (ஏப். 27) கையெழுத்திடவுள்ளதாக அறிவித்துள்ளார். நியூஸிலாந்தில் இந்தியப் பொருள்களுக்கு கட்டணமில்லா சலுகையை மேற்கொள்ளுவதே இந்த ஒப்பந்தத்தின் முக்கிய நோக்கமாகும். மேலும், இந்த ஒப்பந்தத்தின் மூலம் அடுத்த 15 ஆண்டுகளில் 20 பில்லியன் டாலர் முதலீட்டைக் கொண்டுவரும் என்றும் எதிர்பார்க்கப்படுகிறது.

இந்தியாவில் விவசாயத் துறை மற்றும் உள்நாட்டுத் தொழிற்துறையின் நலன்களைக் கருத்தில்கொண்டு, நியூஸிலாந்திலிருந்து இறக்குமதி செய்யப்படும் பால், க்ரீம், தயிர், சீஸ் போன்ற பால் பொருள்கள், வெங்காயம், சர்க்கரை, மசாலா பொருள்கள், சமையல் எண்ணெய், ரப்பர் ஆகியவற்றுக்கு இந்தியா வரிச் சலுகை அளிக்கவில்லை.

ஆனால், நியூஸிலாந்திலிருந்து ஆட்டிறைச்சி, கம்பளி, நிலக்கரி, மரப் பொருள்கள் முதலியவை வரிச் சலுகை பெறும். இந்த ஒப்பந்தத்தின்கீழ், தகவல் தொழில்நுட்பம், பொறியியல், சுகாதாரம், கல்வி, கட்டுமானம் போன்ற துறைகளைச் சேர்ந்த 5,000 இந்தியத் தொழில் வல்லுநர்களுக்கு தற்காலிக வேலைவாய்ப்பு நுழைவு விசா வழங்கப்படும்.

## இந்தியர்கள் பிரான்ஸ் செல்ல இனி விசா தேவையில்லை

புதுடெல்லி, ஏப்.25:

இந்திய வெளியுறவு அமைச்சகத்தின் செய்தி தொடர்பாளர் ரந்தீர் ஜெய்ஸ்வால் கூறியதாவது:-

ஐரோப்பிய பிராந்தியமான பிரான்ஸ் வழியாகப் பயணிக்கும் இந்தியர்களுக்கான விசா இல்லாத பயணத்தை பிரெஞ்சு அரசாங்கம் இப்போது செயல்படுத்தியுள்ளது.

இந்த முடிவு, இருதரப்பு உறவுகளை வலுப்படுத்துவதில் பிரதமர் நரேந்திர மோடி மற்றும் அதிபர் இம்மானுவேல் மக்ரோன் ஆகியோரின் ஆழ்ந்த அர்ப்பணிப்பைக் காட்டுகிறது. இந்த அறிவிப்பை நாங்கள் வரவேற்கிறோம். உங்களுக்கு நினைவிருக்கலாம். இந்த ஆண்டு பிப்ரவரியில் மும்பையில் நடந்த சந்திப்பின் போது பிரதமர் மற்றும் அதிபர் மக்ரோன் இடையே இந்திய கடவுச்சீட்டு வைத்திருப்பவர்களுக்கான போக்குவரத்து விசா தேவையை நீக்குவது குறித்து ஒப்புக்கொள்ளப்பட்டது குறிப்பிடத்தக்கது.

இவ்வாறு அவர் கூறி உள்ளார்.

## பல வாகனங்கள் மோதி விபத்து உ.பி.-யில் 11 பேர் உயிரிழப்பு

மிர்சாபூர், ஏப்.25:

உ.பி.யின் மிர்சாபூர் மாவட்டம், திராமண்ட் கஞ்ச் பள்ளத்தாக்கில் இருந்து லசோடா நோக்கி இறங்கும் தேசிய நெடுஞ்சாலையில் புதன்கிழமை இரவு பல வாகனங்கள் அடுத்தடுத்து மோதி விபத்து நிகழ்ந்தது. இந்த கோர விபத்தில் குழந்தைகள் உட்பட 11 பேர் உயிரிழந்தனர்.

இது மிகவும் துயரமான மற்றும் நெஞ்சை உலுக்கும் விபத்து என்று உ.பி. முதல்வர் யோகி ஆதித்யநாத் கூறியுள்ளார். இந்த விபத்து குறித்து பிரதமர் மோடி 'எக்ஸ்' தளத்தில் வெளியிட்டுள்ள பதிவில், "மிர்சாபூர் விபத்தில் ஏற்பட்ட உயிரிழப்புகளால் நான் மிகுந்த வேதனை அடைந்துள்ளேன். துயருற்ற குடும்பங்களுக்கு எனது ஆழ்ந்த இரங்கல்கள்" என்று கூறியுள்ளார். மேலும் இறந்தவர்களின் குடும்பத்தினருக்கு தலா ரூ.2 லட்சம், காயம் அடைந்தவர்களுக்கு தலா ரூ.50 ஆயிரம் நிவாரண நிதி வழங்கப்படும் என அறிவித்துள்ளார்.

## திருப்பதியில் குறைந்த பக்தர்களின் கூட்டம்

திருப்பதி, ஏப்.25:

தமிழகத்தில் நேற்று சட்டப்பேரவைத் தேர்தல் விறுவிறுப்பாக நடைபெற்றது. இதன் காரணமாக திருப்பதி ஏழுமலையான் கோயிலில் வழக்கத்தை விட சற்று குறைந்தே பக்தர்களின் கூட்டம் காணப்பட்டது. நேற்று ஏழுமலையானை பக்தர்கள் 2 முதல் 3 மணி நேரத்துக்கு உள்ளாகவே தரிசனம் செய்து வெளியே வந்தனர். ஆனால், தமிழக தேர்தலையொட்டி மதுபான கடைகள் அடைக்கப்பட்டன.

இதனால் கடந்த 2 நாட்களாக தமிழக - ஆந்திர எல்லையில் உள்ள சித்தூர், திருப்பதி, காளஹஸ்தி, குப்பம், புத்தூர், நகரி, பிச்சாட்டூர், சத்யவேடு, பலமனேர், கார்வேட்டி நகரம் ஆகிய பகுதிகளில் தமிழகத்தில் இருந்து பைக்குகள், கார்களில் வந்து மது அருந்தியும், மதுபான பாட்டில்களை வாங்கியும் சென்றனர். இதனால் ஆந்திர எல்லைகளில் உள்ள மதுக்கடைகளில் 2 நாட்களாக கூட்டம் அலைமோதியது.

## திருச்சூர் வெடிவிபத்து: சம்பவ இடத்தில் மேலும் உடல் பாகங்கள் கண்டெடுப்பு

திருச்சூர், ஏப்.25:



திருச்சூர் வெடிவிபத்தில் சம்பவ இடத்தில் மேலும் உடல் பாகங்கள் கண்டெடுக்கப்பட்டதால், பலி எண்ணிக்கை உயரலாம் என தகவல்கள் தெரிவிக்கின்றன.

கேரளத்தில் ஏப்ரல் 26-ல் நடைபெறவுள்ள பிரசித்திபெற்ற திருச்சூர் பூரம் விழாவுக்காக பாதுகாக்கப்பட்டு வந்த பட்டாசுகள் கடும் கோடை வெய்யிலில் திடீரென வெடித்து விபத்துக்குள்ளானது. இந்த விபத்தில் 14 பேர் பலியாகினர். சம்பவத்தின்போது, அங்கு 38 பேர் இருந்திருக்கலாம் என விசாரணையில் தகவல்கள் கூறுகின்றன. அதுமட்டுமின்றி, வெடிவிபத்துக்கு மத்தியில் 4 பேர் காணாமல் போயுள்ளனர்.

இந்த நிலையில், சம்பவ இடத்தில் இரண்டாவது நாளாகத் தொடர்ந்த சோதனையின்போது மேலும் சில உடல் பாகங்கள் இருப்பதை மோப்ப நாய்கள் கண்டறிந்தன. சம்பவ இடத்தில் 125 அதிகாரிகள் மற்றும் 5 நாய்கள் மேற்கொண்ட சோதனை நடவடிக்கையில் மேலும் 5 உடல் பாகங்கள் கண்டறியப்பட்டன.

இதுவரை, சுமார் 132 உடல் பாகங்கள் மீட்கப்பட்டு, திருச்சூர் மருத்துவக் கல்லூரிக்கு மாற்றப்பட்டு, அங்கு டி.என்ஏ பரிசோதனைக்கு உட்படுத்தப்படவுள்ளது.

மீட்கப்பட்ட உடல்களில் இருந்து டிஎன்ஏ மாதிரிகளை பிரித்தெடுக்கவும், காணாமல் போனவர்களின் உறவினர்களிடமிருந்து சேகரிக்கப்பட்ட மாதிரிகளுடன் அவற்றை பொருத்தும் பணியிலும் நிபுணர்களின் குழு ஈடுபட்டுள்ளது.

## மருத்துவம் மக்களின் நம்பிக்கை: குடியரசு துணைத் தலைவர் சி.பி. ராதாகிருஷ்ணன்

புதுடெல்லி, ஏப்.25:



தேசத்தைக் கட்டமைப்பதில் மருத்துவர்களுக்கும் முக்கியப் பங்கு உள்ளது. மருத்துவச் சேவையை மக்களின் நம்பிக்கையாக கருதி செயல்பட வேண்டும்' என்று குடியரசு துணைத் தலைவர் சி.பி.ராதாகிருஷ்ணன் வலியுறுத்தினார்.

உத்தரகண்ட் மாநிலம் ரிஷிகேஷில் உள்ள எய்ம்ஸ் மருத்துவக் கல்லூரியில் வியாழக்கிழமை நடைபெற்ற 6-ஆவது பட்டமளிப்பு விழாவில் பங்கேற்று மாணவ, மாணவிகளுக்கு பட்டச்சான்றிதழ்களை வழங்கிய குடியரசு துணைத் தலைவர் ராதாகிருஷ்ணன், பின்னர் பேசியதாவது: மருத்துவப் பட்டதாரிகள் தங்களின் தொழில்சார் கடமைகளை அர்ப்பணிப்புடனும், குறிக்கோள் உமர்வுடனும் பணியாற்ற வேண்டும். கரோனா பாதிப்பு காலத்தில், மீள்திறனையும், புதிய கண்டுபிடிப்பு மற்றும் கடமை உணர்வையும் இந்தியா வெளிப்படுத்தியது. அனைவருக்கும் சமமான மருத்துவச்சேவை கிடைப்பதை உறுதிப்படுத்தும் வகையில், 140 கோடி மக்களுக்கும் கட்டணமின்றி கரோனா தடுப்பூசி போடப்பட்டது. லாப நோக்கு கருதாமல், மனித நலனுக்காக தடுப்பூசிகளை இந்திய விஞ்ஞானிகள் உருவாக்கினர். நூறுக்கும் மேற்பட்ட நாடுகளுக்கு கரோனா தடுப்பூசிகளை இந்தியா வழங்கி, கருணைமிக்க உலகளாவிய கூட்டாளி என்பதை உறுதிப்படுத்தியது.

கடந்த 10 ஆண்டுகளில் புதிய எய்ம்ஸ் மருத்துவக் கல்லூரி மருத்துவமனைகள் தொடங்கப்பட்டதன் மூலம், பின்தங்கிய பகுதிகளிலும் தரமான மருத்துவச் சேவை கிடைப்பது வலுப்படுத்தப்பட்டுள்ளது. அந்த வகையில், மருத்துவச் சேவை என்பதை மருத்துவமனை வளாகத்தைத் தாண்டி பின்தங்கிய கிராமப்புற மக்களையும் சென்றடைய வேண்டும். தேசத்தைக் கட்டமைப்பதில் மருத்துவர்களுக்கும் முக்கியப் பங்கு உள்ளது. மருத்துவச் சேவையை மக்களின் நம்பிக்கையாக கருதி செயல்பட வேண்டும். நோய்த் தடுப்பு சிகிச்சை, கிராமப்புற மருத்துவச் சேவை, ஆராய்ச்சி, புதிய கண்டுபிடிப்புகள் மூலம் மட்டுமின்றி பரிவுணர்வு மற்றும் நேர்மையான வழிகளில் மருத்துவர்கள் தங்களின் பங்களிப்பை ஆற்ற வேண்டும் என்றார்.


## தங்க கடத்தல் வழக்கில் நடிகை ரன்யா ராவுக்கு ஜாமீன்

பெங்களூரு, ஏப்.25:

கர்நாடக போலீஸ் டிஜிபி ராமசந்திர ராவின் வளர்ப்பு மகளும், நடிகையுமான ரன்யா ராவ் (32) துபாயில் இருந்து 14.8 கிலோ தங்கம் கடத்தி வந்ததாக கடந்த ஆண்டு மார்ச்சில் பெங்களூருவில் கைது செய்யப்பட்டார். அவரது வீட்டில் நடத்திய சோதனையில் ரூ.2.8 கோடி தங்கம், ரூ.2.4 கோடி ரொக்கம் சிக்கியது.

வருவாய் புலனாய்வு இயக்குநரக அதிகாரிகள் அவர் மீது தங்கக் கடத்தல், அந்நிய செலாவணி மோசடி உட்பட 5 பிரிவுகளில் வழக்குப் பதிவு செய்தனர். காபிபோசா வழக்கில் அவருக்கு ஓராண்டு சிறை தண்டனை விதிக்கப்பட்டது. அந்த தண்டனை காலம் நேற்று முன்தினத்துடன் நிறைவடைந்தது. தங்கக் கடத்தல் வழக்கில் தனக்கு ஜாமீன் மறுக்கப்பட்டதை எதிர்த்து ரன்யா ராவ் உயர் நீதிமன்றத்தில் மேல்முறையீடு செய்தார். அவரது ஜாமீன் மனுவை விசாரித்த நீதிபதி விஸ்வ நாத் கவுடர், ரன்யா சிறையில் அடைக்கப்பட்டு ஓராண்டு நிறைவடைந்த நிலையில் நேற்று நிபந்தனை ஜாமீன் வழங்கி உத்தரவிட்டார். நீதிமன்ற உத்தரவு அதிகாரிகளிடம் வழங்கப்பட்டதை அடுத்து சிறையில் இருந்து ரன்யா ராவ் வெளியே வந்தார்.

## இந்து கடவுள்களை அவமதிப்பதா? - பிரகாஷ்ராஜ் மீது ரூ.100 கோடிக்கு மான நஷ்டஈடு வழக்கு



திருப்பதி, ஏப்.25:

இந்து கடவுள்களை அவமானப்படுத்தி யார் பேசினாலும் அவர்கள் மீது சட்டப்படி நடவடிக்கை எடுப்போம் என திருமலை திருப்பதி தேவஸ்தான அறங்காவலர் குழு உறுப்பினர் பானு பிரகாஷ் ரெட்டி எச்சரித்துள்ளார். இவர் நடிகர் பிரகாஷ்ராஜ் மீதும் ரூ.100 கோடிக்கு மான நஷ்ட ஈடு வழக்கை தொடர்ந்துள்ளார்.

அறங்காவலர் குழு உறுப்பினரும், பாஜகவின் ஆந்திர மாநில செய்தித் தொடர்பாளருமான பானு பிரகாஷ் ரெட்டி, சமீபத்தில் ராமர், லட்சுமணர் பற்றி கேலியாக பேசிய நடிகர் பிரகாஷ்ராஜ் மீது ரூ. 100 கோடிக்கு மான நஷ்ட ஈடு வழக்கை தொடர்ந்துள்ளார். இது தொடர்பாக அவர் நடிகர் பிரகாஷ்ராஜ் மீது வழக்கு பதிவு செய்ய வேண்டுமென ஆந்திர டிஜிபியிடம் புகார் அளித்துள்ளார்.

இது தொடர்பாக பானு பிரகாஷ் ரெட்டி கூறியதாவது: இந்து கடவுள்கள், இந்து கலாச்சாரங்களை கொச்சைபடுத்தும் வகையில் சமூக வலைதளத்தில் பேசுவது பலருக்கு வாடிக்கையாகி விட்டது. அப்படி பேசுபவர்களின் பேச்சை இனி கேட்டுக்கொண்டு இருக்க முடியாது. சமீபத்தில் இந்து கடவுள்களை இழிவாகவும், கேலியும், கிண்டலுமாக பேசிய நடிகர் பிரகாஷ்ராஜ் மீதும் ரூ.100 கோடிக்கு மான நஷ்ட ஈடு வழக்கு தொடரப்பட்டுள்ளது.

சிலர் இதையே பிழைப்பாக வைத்துக்கொண்டு சமூக வலைதளங்கள் மூலம் பேசுகின்றனர். சனாதன தர்மத்தை யார் தரக்குறைவாக பேசினாலும் நாங்கள் வேடிக்கை பார்த்து கொண்டு இருக்க மாட்டோம். கோயில்கள் என்பது மதசார்பற்ற இடம் கிடையாது. அது இந்துக்களுக்கு மட்டுமானது. இனி கோயில்களில் இந்துக்கள் மட்டுமே பணியாற்ற வேண்டும். வியாபாரங்களும் இந்துக்கள் மட்டுமே செய்ய வேண்டும்.

ஸ்ரீசைலம் மல்லிகார்ஜுனர் கோயிலிலும் வேற்று மதத்தினர் பலர் பணியாற்றுகின்றனர் எனும் தகவல்கள் வருகின்றன. இது குறித்தும் ஆந்திராவில் கூட்டணி அரசு ஆலோசித்து முடிவெடுக்கும். ஆந்திராவில் இந்து கோயில்கள் மீது தாக்குதல் நடத்தினால் சட்டப்படி கடும் நடவடிக்கை எடுக்கப்பட்டு வருகிறது. மத்தியில் உள்ள பாஜகவின் ஆட்சியால் நாட்டில் இந்து கோயில்கள், கலாச்சாரத்திற்கு பாதுகாப்பு உள்ளது. இவ்வாறு அவர் கூறினார்.


## இந்திய வான்வெளியில் பறப்பதற்கு பாகிஸ்தான் விமானங்களுக்கு மே 24 வரை தடை நீட்டிப்பு

புதுடெல்லி, ஏப்.25:

ஜம்மு காஷ்மீரின் பஹல்காமில் கடந்த ஆண்டு ஏப்ரல் 22-ம் தேதி பாகிஸ்தான் தீவிரவாதிகள் நடத்திய கொடூர தாக்குதலில் 26 பேர் உயிரிழந்தனர். இதையடுத்து ஏப்ரல் 30-ம் தேதி, இந்திய வான்வெளியில் பாகிஸ்தான் விமானங்கள் பறப்பதற்கு மத்திய அரசு தடை விதித்தது. ஆனால் இந்தியாவுக்கு முன்னதாகவே, மே 24 முதல் இத்தகைய தடையை பாகிஸ்தான் விதித்தது. பாகிஸ்தான் வான்வெளியில் இந்திய விமானங்கள் பறக்க தடை விதிக்கப்பட்டது. இரு நாடுகளும் தங்கள் வான்வெளியை மற்ற நாட்டின் விமானங்களுக்கு மூடுவதற்கான தடையை கடந்த ஆண்டு ஏப்ரல் முதல் மாறி மாறி நீட்டித்து வருகின்றன. பாகிஸ்தான் தனது வான்வெளி தடையை கடந்த செவ்வாய்க்கிழமை மே 24 வரை நீட்டித்தது. இந்நிலையில் மத்திய அரசு புதன்கிழமை வெளியிட்ட விமானிகளுக்கான அறிவிப்பு (NOTAM) ஒன்றில் "பாகிஸ்தான் விமானங்கள் (ராணுவ விமானங்கள் உட்பட) இந்திய வான்வெளியை பயன்படுத்த இயலாது. இந்த தடை மே 23ம் தேதி 23:59 மணி (UTC) வரை அமலில் இருக்கும். இந்திய நேரப்படி (IST) மே 24ம் தேதி காலை 05:30 மணி வரை அமலில் இருக்கும்" என்று கூறப்பட்டுள்ளது. இரு நாடுகளின் இந்த நடவடிக்கை ஓராண்டாக நீடித்து வருவது குறிப்பிடத்தக்கது. பஹல்காம் தாக்குதலுக்கு பதிலடியாக பாகிஸ்தான் மற்றும் பாகிஸ்தான் ஆக்கிரமிப்பு காஷ்மீரில் செயல்பட்டு வந்த 9 தீவிரவாத முகாம்களை ஆபரேஷன் சிந்தூர் ராணுவ நடவடிக்கை மூலம் இந்தியா தாக்கி அழித்தது. மேலும் சிந்து நதி நீர் ஒப்பந்தத்தை இந்தியா ரத்து செய்தது.

# பொருளாதார சீர்திருத்தம் மேற்கொள்ளாவிட்டால் பின்னடைவு: மோடிக்கு பெர்ன்ஸ்டீன் நிறுவனம் எச்சரிக்கை

புதுடெல்லி, ஏப்.25:




பிரதமர் நரேந்திர மோடிக்கு அந்த நிறுவனம் அனுப்பியுள்ள கடிதத்தில் கூறப்பட்டுள்ளதாவது: கடந்த 6 ஆண்டுகளில் கொள்கை முடிவுகள் சரியான திசையில் இருந்ததால், பொருளாதார நிலைத்தன்மை மற்றும் ஜிடிபி தரவரிசையில் இந்தியா முன்னேற்றம் கண்டுள்ளது. எனினும், இந்த அண்மைக் கால வெற்றிகளைக் கண்டு நாம் மனநிறைவு அடைந்துவிடக் கூடாது. உலகளாவிய விநியோகச் சங்கிலி மாற்றமடைந்து வரும் வேளையில், இந்தியா தனது சீர்திருத்தங்களை வேகப்படுத்துவது அவசியம். இல்லாவிட்டால் இதுவரை ஈட்டிய பலன்களை இந்தியா இழக்க நேரிடும்.

இந்தியாவின் நடுத்தர வர்க்கத்தை உயர்த்திய சேவைத்துறைக்கு, தற்போது செயற்கை நுண்ணறிவு (ஏஐ) தொழில்நுட்பம் பெரும் சவாலாக உருவெடுத்துள்ளது. தானியங்கி முறையினால் நடுத்தர வர்க்க வேலைவாய்ப்புகள் பறிபோகும் அபாயம் உள்ளது. இந்தியா இத்தொழில்நுட்பத்தைப் பயன்படுத்துபவராக மட்டுமே இல்லாமல், அதை உருவாக்குபவராகவும் மாற வேண்டும். நாட்டின் 45 சதவீத உழைப்பாளர்கள், விவசாயத் துறையில் ஈடுபட்டுள்ள போதிலும், ஜிடிபி-க்கு அவர்களின் பங்களிப்பு வெறும் 15 சதவீதமாக மட்டுமே உள்ளது. எனவே, விவசாயச் சட்டங்கள் திரும்பப் பெறப்பட்டாலும், இத்துறையில் சீர்திருத்தங்கள் இன்றி வளர்ச்சியை எட்ட முடியாது. வெறும் கடன் தள்ளுபடிகளும், மானியங்களும் நிரந்தரத் தீர்வாகாது.

அதேபோல், பெட்ரோலியத் தேவையில் 88 சதவீதத்தை இறக்குமதியை மட்டுமே நம்பியிருப்பது பலவீனமானது. மின்சார வாகனத் தொழில்நுட்பத்துக்கு விரைவாக மாறாவிட்டால், மீண்டும் வெளிநாட்டுத் தொழில்நுட்பங்களைச் சார்ந்திருக்கும் நிலை இந்தியாவுக்கு ஏற்படும்.

பல்வேறு மாநில அரசுகள் அறிவிக்கும் நேரடிப் பணப் பரிமாற்றத் திட்டங்களுக்காக ஆண்டுக்கு ரூ.1.7 லட்சம் கோடி முதல் ரூ. 2.5 லட்சம் கோடி வரை செலவிடப்படுகிறது. இது போன்ற செலவினங்கள் உள்கட்டமைப்பு முதலீடுகளைக் குறைத்து, பணவீக்கத்தை அதிகரிக்கும் அபாயம் உள்ளது. வளர்ந்து வரும் ஒரு நாட்டின் பொருளாதாரத்துக்கு இது நல்லதல்ல.

ஆராய்ச்சி மற்றும் மேம்பாட்டுத் துறைக்கான இந்தியாவின் முதலீடு ஜிடிபி-யில் 0.6 சதவீதமாக மட்டுமே உள்ளது. இது உலக நாடுகளுடன் ஒப்பிடுகையில் மிகக் குறைவு. இந்தியாவிடம் மூலதனம், திறமை, ஆர்வம் ஆகியவற்றுக்குக் குறைவில்லை. ஆனால் கடினமான முடிவுகளை உடனுக்குடன் எடுக்கும் துணிச்சலே இப்போதைய தேவை. இவ்வாறு அந்த கடிதத்தில் பெர்ன்ஸ்டீன் நிறுவனம் சுட்டிக்காட்டியுள்ளது.

## பாகிஸ்தான் பிரதமர் ஷெபாஸ் ஷெரீப்பை, பாகிஸ்தானுக்கான சீன தூதர் ஜியாங் ஜைதாங் சந்திப்பு



**இஸ்லாமாபாத், ஏப்.25:**

பாகிஸ்தான் பிரதமர் ஷெபாஸ் ஷெரீப்பை, பாகிஸ்தானுக்கான சீன தூதர் ஜியாங் ஜைதாங் நேற்று சந்தித்தார். அப்போது பாகிஸ்தான் துணை பிரதமரும் மற்றும் வெளியுறவுத் துறை அமைச்சருமான இஷாக் தர் உட்பட பலர் இருந்தனர். இந்தச் சந்திப்பு குறித்து பாகிஸ்தான் பிரதமர் அலுவலகம் விடுத்த அறிக்கையில் கூறியதாவது: மேற்கு ஆசியா நிலவரம் குறித்து, பாகிஸ்தான் மேற்கொண்டு வரும் அமைதி முயற்சிகள் குறித்து சீன தூதர் ஜியாங் கேட்டறிந்தார்.

மேற்கு ஆசியாவில் அமைதியை ஏற்படுத்த பாகிஸ்தான் மேற்கொண்டு வரும் முயற்சிகளை அவர் பாராட்டினார். பாகிஸ்தான் – சீன உறவுகள் முன்னேற்ற பாதையில் சென்று கொண்டிருப்பது குறித்து பாகிஸ்தான் பிரதமர் திருப்தி தெரிவித்தார். இவ்வாறு அந்த அறிக்கையில் தெரிவிக்கப்பட்டிருந்தது.

## ஈரான் தலைநகரில் நாளை முதல் மீண்டும் சர்வதேச விமானங்கள் இயக்கம்!

**தெஹ்ரான், ஏப்.25:**

ஈரான் தலைநகர் தெஹ்ரானில் இருந்து சனிக்கிழமை (ஏப். 25) முதல் சர்வதேச விமானங்கள் இயக்கப்படும் என அறிவிக்கப்பட்டுள்ளது.

அமெரிக்கா மற்றும் இஸ்ரேலிய படைகள் இணைந்து கடந்த பிப். 28 அன்று ஈரானின் மீது கூட்டுத் தாக்குதல்கள் மேற்கொண்டன. இதையடுத்து, இருதரப்புக்கும் இடையில் போர் தொடங்கியதால், ஈரானின் வான்வழிப் பாதைகள் முழுவதுமாக முடக்கப்பட்டன.

இதனைத் தொடர்ந்து, அமெரிக்கா மற்றும் ஈரான் இடையே போர்நிறுத்தம் அமலுக்குக் கொண்டுவரப்பட்ட நிலையில், ஈரானுக்கும் பிற நாடுகளுக்கும் இடையேயான சர்வதேச போக்குவரத்துக்கான நடவடிக்கைகள் மேற்கொள்ளப்பட்டு வருகின்றன.

இந்த நிலையில், ஈரானின் தலைநகர் தெஹ்ரானில் அமைந்துள்ள இமாம் கொமேனி விமான நிலையத்தில் இருந்து வரும் சனிக்கிழமை முதல் சர்வதேச விமானங்கள் இயக்கப்படும் என அறிவிப்பு வெளியாகியுள்ளது.

இதன்மூலம், முதற்கட்டமாக தெஹ்ரானில் இருந்து துருக்கியின் இஸ்தான்புல் மற்றும் ஓமனின் மஸ்கட் ஆகிய நாடுகளுக்குச் செல்லும் விமானங்கள் இயக்கப்படவுள்ளன.

ஏற்கெனவே, ஈரானின் வடகிழக்கு நகரமான மஷ்ஹதின் விமான நிலையத்தில் இருந்து துருக்கி மற்றும் ஓமன் ஆகிய நாடுகளுக்கு சர்வதேச விமானங்கள் இயக்கப்படுவதாகக் கூறப்படுகிறது.

இருப்பினும், பிராந்தியத்தில் பதற்றமான சூழல் தொடர்வதால், இந்தியர்கள் யாரும் ஈரானுக்குப் பயணிக்க வேண்டாம் என தெஹ்ரானில் உள்ள இந்தியத் தூதரகம் நேற்று அறிவித்திருந்தது குறிப்பிடத்தக்கது.

## இலங்கை நிதி அமைச்சக கணினி அமைப்பில் ஊடுருவல்: ரூ.23.5 கோடி மாயம்

**இலங்கை, ஏப்.25:**

இலங்கை நிதி அமைச்சகத்தின் பரிவர்த்தனை முறையில் ஹேக்கர்கள் ஊடுருவி, சுமார் 25 லட்சம் டாலரை (இந்திய மதிப்பில் சுமார் ரூ.23.51 கோடி) திருடியுள்ளனர்

கடந்த செப்டம்பரில் வெளிநாட்டு கடன் வழங்குநர் ஒருவருக்கு செலுத்த வேண்டிய 2.29 கோடி டாலர் தொகையில், ஒரு பகுதியாக டிசம்பர் முதல் ஜனவரி வரை செலுத்தப்பட்ட இந்த 25 லட்சம் டாலர், உரிய கணக்குக்குச் செல்லாமல் ஹேக்கர்களின் கணக்குக்குச் சென்றுள்ளது விசாரணையில் தெரியவந்துள்ளது.

மின்னஞ்சல் வாயிலாக இந்த சைபர் தாக்குதல் நடத்தப்பட்டுள்ளது. மாயமான இந்த நிதியை மீட்பதற்கான நடவடிக்கைகளை அரசு முடுக்கிவிட்டுள்ளதோடு, இதுகுறித்து விசாரணை நடத்த உயர்நிலைக் குழு ஒன்றும் அமைக்கப்பட்டுள்ளது.

## “அமெரிக்காவின் அனுமதியின்றி எந்த கப்பலும் ஹார்முஸ் ஜலசந்திக்குள் நுழைய முடியாது” - ட்ரம்ப்

**வாஷிங்டன், ஏப்.25:**

ஹார்முஸ் ஜலசந்தி மீது அமெரிக்கா முழுமையான கட்டுப்பாட்டைக்கொண்டிருப்பதாகத் தெரிவித்துள்ள டொனால்ட் ட்ரம்ப், அமெரிக்க கடற்படையின் அனுமதியின்றி எந்த கப்பலும் உள்ளே நுழைய முடியாது என தெரிவித்துள்ளார்.



இது தொடர்பாக அவர் வெளியிட்டுள்ள சமூக ஊடக பதிவில், “தங்கள் தலைவர் யார் என்பதைக் கண்டறிவதில் ஈரான் மிகவும் சிரமப்பட்டுக்கொண்டிருக்கிறது. உண்மையில் அது அவர்களுக்குத் தெரியவில்லை. போர்க்களத்தில் படுமோசமாகத் தோற்றுக்கொண்டிருக்கும் கடும்போக்காளர்களுக்கும், மிதவாதிகள் என்று சொல்லிக்கொள்பவர்களுக்கும் இடையே பூசல் நிலவி வருகிறது. உண்மையில் இது பைத்தியக்காரத்தனமானது.

ஹார்முஸ் ஜலசந்தி மீது எங்களுக்கு முழுமையான கட்டுப்பாடு உள்ளது. அமெரிக்க கடற்படையின் அனுமதியின்றி எந்த கப்பலும் உள்ளே நுழையவோ வெளியேறவோ முடியாது. ஈரான் ஒரு உடன்பாட்டை எட்டும் வரை ஹார்முஸ் ஜலசந்தி இறுக்கமாகவே மூடப்பட்டிருக்கும்” என தெரிவித்துள்ளார்.

அவர் வெளியிட்டுள்ள மற்றொரு பதிவில், “ஹார்முஸ் ஜலசந்தியின் கடற்பரப்பில் கண்ணிவெடிகளை புதைக்கும் ஈரான் கடற்படை படகுகளை (அவர்களின் கடற்படைக் கப்பல்கள் அனைத்தும் அதாவது 159 கப்பல்களும் கடலுக்கு அடியில் உள்ளன.

எனவே, வெளியே பணியில் ஈடுபடுவது படகுகளே) சுட்டு வீழ்த்துமாறு அமெரிக்க கடற்படைக்கு நான் உத்தரவிட்டுள்ளேன்.

இதில் எந்த தயக்கமும் காட்டக்கூடாது. மேலும், நமது கண்ணிவெடி அகற்றும் கப்பல்கள் தற்போது அந்தப் பணிகளை மேற்கொண்டு வருகின்றன. அந்தப் பணிகளை மூன்று மடங்கு அதிகமாக தொடர இதன்மூலம் நான் உத்தரவிடுகிறேன்” என தெரிவித்துள்ளார்.

## லெபனான் - இஸ்ரேல் இடையே அமெரிக்காவில் நேரடி பேச்சுவார்த்தை: போர் நிறுத்தத்தை நீட்டிக்க முயற்சி

**பெய்ரூட், ஏப்.25:**

இஸ்ரேல் மற்றும் ஹிஸ்புல்லா அமைப்பினரிடையே உள்ள தற்காலிகப் போர் நிறுத்தத்தை மேலும் நீட்டிப்பது தொடர்பாக, லெபனான் மற்றும் இஸ்ரேல் நாடுகளின் பிரதிநிதிகள் அமெரிக்கத் தலைநகர் வாஷிங்டனில் நேரடிப் பேச்சுவார்த்தையில் ஈடுபடுகின்றனர்.



நீண்ட காலமாக பகைமை பாராட்டி வரும் இரு நாடுகளுக்கு இடையே, கடந்த 3 தசாப்தங்களில் இல்லாத வகையில் இத்தகைய நேரடிப் பேச்சுவார்த்தை நடைபெறுவது இது 2-வது முறையாகும்.

கடந்த வெள்ளிக்கிழமை முதல் அமலுக்கு வந்த 10 நாள் தற்காலிகப் போர் நிறுத்தத்தை நீட்டிப்பது குறித்து இரு நாடுகளும் ஆலோசிக்க உள்ளன. இதுதொடர்பாக லெபனான் அதிபர் ஜோசப் அவ்ன் கூறுகையில், “அமெரிக்காவுக்கான லெபனான் தூதர் நடா ஹமாதே முவாத் மற்றும் இஸ்ரேல் தூதர் யெச்சியேல் லைட்டர் ஆகியோர் இந்தப் பேச்சுவார்த்தையில் பங்கேற்கின்றனர்.

ஆக்கிரமிப்பு, இடிப்பு... போர் நிறுத்தத்தை நீட்டிக்கவும், எல்லையோர கிராமங்களில் இஸ்ரேல் மேற்கொண்டு வரும் ஆக்கிரமிப்பு மற்றும் இடிப்பு நடவடிக்கைகளை நிறுத்தவும் லெபனான் தரப்பில் வலியுறுத்தப்படும்” என்றார்.

இஸ்ரேலியப் படைகள் லெபனானில் இருந்து முழுமையாக வெளியேறுதல், சிறைபிடிக்கப்பட்ட லெபனான் கைதிகளை விடுவித்தல் மற்றும் எல்லையில் லெபனான் ராணுவத்தை நிலை நிறுத்துதல் போன்ற கோரிக்கைகளும் இந்த பேச்சுவார்த்தையின்போது முன்வைக்கப்பட உள்ளதாக தெரிகிறது.

இதற்கிடையே, இஸ்ரேல் வெளியுறவுத் துறை அமைச்சர் கிதியோன் சார் பேசுகையில், “லெபனான் அரசுக்கும் எங்களுக்கும் பெரிய அளவில் எல்லை பிரச்சினைகள் ஏதுமில்லை.

ஆனால், ஈரான் ஆதரவு பெற்ற ஹிஸ்புல்லா அமைப்பே அமைதிக்கு முட்டுக்கட்டையாக உள்ளது. அந்த அமைப்பை நிராயுதபாணியாக்க லெபனான் அரசு முன்வர வேண்டும்” என தெரிவித்துள்ளார்.

## அமெரிக்கா - ஈரான் 2-ம் கட்ட அமைதி பேச்சுவார்த்தை குறித்து பாக். அமைச்சர் - அமெரிக்க தூதர் ஆலோசனை

**இஸ்லாமாபாத், ஏப்.25:**

அமெரிக்கா - ஈரான் இடையே 2-ம் கட்ட அமைதி பேச்சுவார்த்தை ஏற்பாடு செய்வதற்கான முயற்சிகள் குறித்து பாகிஸ்தான் அமைச்சரும், பாகிஸ்தானுக்கான அமெரிக்கத் தூதரும் இஸ்லாமாபாத்தில் நேற்று ஆலோசனை நடத்தினர்.

ஈரான் மீது அமெரிக்க மற்றும் இஸ்ரேல் படைகள் கடந்த பிப்ரவரி 28-ம் தேதி போர் தொடுத்தன. ஈரானின் ராணுவ இலக்குகளைக் குறி வைத்து தாக்குதல் நடத்தின. இதையடுத்து ஹார்முஸ் ஜலசந்தியை ஈரான் மூடியது. இதன் காரணமாக சர்வதேச சந்தையில் எரிபொருள் விலை கடுமையாக உயர்ந்தது.

அதன்பின் 2 வாரங்களுக்கு முன்பு போர் நிறுத்த அறிவிப்பை அமெரிக்க அதிபர் ட்ரம்ப் அறிவித்தார். அமெரிக்கா - ஈரான் இடையே அமைதி பேச்சுவார்த்தை நடத்துவதற்கான முயற்சியில் பாகிஸ்தான் இறங்கியது.

அதன்படி நடைபெற்ற முதல் கட்ட பேச்சு வார்த்தை கடந்த 11 மற்றும் 12-ம் தேதிகளில் நடைபெற்றது. ஆனால், முடிவு எதுவும் எட்டப்படாமல் தோல்வியடைந்தது.

இந்நிலையில் 2 வார கால போர் நிறுத்தம் கடந்த புதன்கிழமை முடிந்தது. அமெரிக்கா - ஈரான் இடையே 2-ம் கட்ட பேச்சுவார்த்தை ஏற்பாடு செய்வதற்கான முயற்சியில் பாகிஸ்தான் இறங்கியது.

இதனால் போர் நிறுத்தத்தைக் காலவரையறையின்றி நீட்டிப்பதாக அமெரிக்க அதிபர் ட்ரம்ப் அறிவித்தார்.

இந்நிலையில் அமெரிக்கா - ஈரான் இடையே இந்த வார இறுதியில், 2-ம் கட்ட பேச்சுவார்த்தை நடத்துவதற்கான முயற்சிகள் குறித்து பாகிஸ்தான் உள்துறை அமைச்சர் மொசின் நக்வி, பாகிஸ்தானுக்கான அமெரிக்க தூதர் நடாலி பேக்கரை இஸ்லாமாபாத்தில் நேற்று சந்தித்து ஆலோசனை நடத்தினார்.

அப்போது மேற்காசிய நிலவரம், 2-ம் கட்ட பேச்சுவார்த்தைக்குத் தூதரக அளவிலான முயற்சிகள் குறித்து ஆலோசிக்கப்பட்டது.

அமெரிக்க அதிபர் ட்ரம்ப் அறிவித்த போர் நிறுத்த நீட்டிப்பை, ‘வரவேற்கத்தக்க முன்னேற்றம்’ என நக்வி தெரிவித்தார்.

## இனி வாட்ஸ் அப்பில் ரீசார்ஜ் செய்யலாம் அறிமுகமான சூப்பர் வசதி

**வாஷிங்டன், ஏப்.25:**

சமூக வலைத்தளங்களில் மிகவும் தவிர்க்க முடியாத செயலியாக இருப்பது வாட்ஸ் அப் தான். இந்தியாவில் மட்டும் 51 கோடிக்கும் மேற்பட்ட வாட்ஸ் அப் கணக்குகள் உள்ளன. 2009 ஆம் ஆண்டு அறிமுகம் செய்யப்பட்ட வாட்ஸ் அப்பை 2014 ஆம் ஆண்டு மெட்டா நிறுவனம் வாங்கியது. அதன்பிறகு வாட்ஸ் அப்பில் பல்வேறு புதுப்புது அப்டேட்கள் வெளியாகி வருகின்றன.

ஆடியோ, வீடியோ கால் வசதி, கோப்புகளை அனுப்பும் வசதி என வாட்ஸ் அப்பில் தகவல் பரிமாற்றம் மிகவும் எளிதாக்கப்பட்டுள்ளது. வாட்ஸ் அப்பில் யுபிஐ வசதியும் உள்ள நிலையில், தற்போது பயனர்களை கவரும் விதமாக புதிய அப்டேட் ஒன்று வெளியிடப்பட்டுள்ளது. அதாவது வாட்ஸ் அப் யுபிஐயில் மொபைல் போன் ரீசார்ஜ்களை செய்து கொள்ளும் வசதி அறிமுகமாகியுள்ளது. ஏர்டெல், ஜியோ, வோடோபோன் ஆகிய நிறுவனங்களின் சிம் கார்டுகளுக்கு வாட்ஸ் அப் யுபிஐயிலேயே ரீசார்ஜ் செய்யலாம். பிஎஸ்.என்.எல். பயனர்களுக்கு விரைவில் இந்த வசதி அறிமுகமாகும் என்று எதிர்பார்க்கப்படுகிறது.

## ஏஐ-யால் பறிபோகும் வேலைகள்: ஐடி ஊழியர்களுக்கு அடுத்தடுத்து அதிர்ச்சி

**வாஷிங்டன், ஏப்.25:**

ஏஐ எனப்படும் செயற்கை நுண்ணறிவு நாம் நினைத்து பார்க்க முடியாத பல முன்னேற்றங்கள் அடைந்துக்கொண்டு இருக்கிறது. கடந்த நூற்றாண்டை கம்ப்யூட்டர் யுகம் என்று சொல்லப்பட்ட நிலையில் தற்போது ஏஐ யுகம் என சொல்லும் காலம் வந்துள்ளது. செயற்கை நுண்ணறிவு அனைத்து இடங்களிலும் ஆதிக்கம் செலுத்தி வருகிறது. பல தொழில்நுட்பங்கள் செயற்கை நுண்ணறிவை கொண்டு இயக்கப்படுவதால், பலரின் வேலைகளும் கேள்விக்குறியாகி உள்ளது. ஆக்ஸ்போர்டு பல்கலைக்கழகம் நடத்திய சமீபத்திய ஆய்வில், அடுத்த 10 ஆண்டுகளில் செயற்கை நுண்ணறிவு (AI) காரணமாக 47 சதவீத வேலைகள் அமெரிக்காவில் குறைக்கப்படலாம் என்று குறிப்பிட்டுள்ளது. மேலும், இந்தியா போன்ற வளர்ந்து வரும் நாடுகளிலும் இந்த நிலை ஏற்படலாம் என்று கணித்துள்ளனர். குறிப்பாக ஐடி துறையில் அதிக அளவு வேலை இழப்புகள் ஏற்பட்டு வருகின்றன. உலகின் முன்னணி தொழில் நிறுவனங்களும் ஆட்குறைப்பை மேற்கொண்டு வருகின்றன.

அமேசான், ஆரக்கிள் போன்ற நிறுவனங்களும் ஆட்குறைப்பு நடவடிக்கையை எடுத்து வரும் நிலையில், டெக் உலகில் டாப் நிறுவனங்களில் ஒன்றாக இருக்கும் மெட்டாவும் ஆட்குறைப்பை கையில் எடுத்துள்ளது. தனது மொத்த பணியாளர்களில் சுமார் 10% பேரை, அதாவது 8,000க்கும் மேற்பட்டோரைக் பணி நீக்கம் செய்ய திட்டமிட்டுள்ளதாக தகவல் வெளியாகியுள்ளது. இந்த அறிவிப்பு தொழில்நுட்ப துறையில் அதிர்ச்சியை ஏற்படுத்தியுள்ளது.நிறுவனம் வெளியிட்ட விளக்கத்தில், செயற்கை நுண்ணறிவுதுறையில் முதலீடுகள் மற்றும் செலவினங்கள் அதிகரித்து வருவதால், நிறுவனத்தின் செலவுகளை கட்டுப்படுத்தும் நோக்கில் இந்த நடவடிக்கை எடுக்கப்படுவதாக தெரிவிக்கப்பட்டுள்ளது.

## பாகிஸ்தான்: பயங்கரவாதத் தாக்குதலில் 9 சுரங்கத் தொழிலாளர்கள் கொலை



**இஸ்லாமாபாத், ஏப்.25:**

பாகிஸ்தானின் பலூசிஸ்தான் மாகாணத்தில் தாமிரம் மற்றும் தங்கச் சுரங்கத்தின் மீது பயங்கரவாதிகள் நடத்திய தாக்குதலில் 9 தொழிலாளர்கள் சுட்டுக் கொல்லப்பட்டனர்.

பலூசிஸ்தான் மாகாணத்தில் சமீபகாலமாக கனிம வளங்கள் அதிகளவில் கண்டறியப்பட்டு வரும் நிலையில், பயங்கரவாதக் குழுக்கள் இத்திட்டங்களுக்கு எதிராக வன்முறையில் ஈடுபட்டு வருகின்றன. தாக்குதல்களில் வெளி மாகாண தொழிலாளர்கள் குறிவைக்கப்படுவது வழக்கமாகிவிட்டது. ஆனால், ‘பலூசிஸ்தான் மாகாணத் தொழிலாளர்களே 90 சதவீதத்தினர் பணியமர்த்தப்படுகின்றனர். உள்ளூர் மக்களின் வாழ்வாதாரத்தை மேம்படுத்துவதே நோக்கம்’ என்றும் இச்சுரங்கத் திட்டத்தை நிர்வகித்து வரும் தேசிய வளங்கள் நிறுவனம் விளக்கமளித்தது.

## லெபனான் - இஸ்ரேல் போர் நிறுத்தம் 3 வாரங்களுக்கு நீட்டிப்பு: ட்ரம்ப் அறிவிப்பு

**வாஷிங்டன், ஏப்.25:**

லெபனான் - இஸ்ரேல் இடையேயான போர் நிறுத்தம் முடிவுக்கு வந்த நிலையில், அதனை மேலும் மூன்று வாரங்களுக்கு நீட்டித்துள்ளதாக அமெரிக்க அதிபர் டொனால்டு ட்ரம்ப் தெரிவித்துள்ளார்.



அமெரிக்காவும் இஸ்ரேலும் இணைந்து ஈரான் மீது கடந்த பிப்.28-ம் தேதி தாக்குதலை தொடங்கியதை அடுத்து, ஈரான் ஆதரவுபெற்ற ஆயுதக் குழுவான லெபனானின் ஹிஸ்புல்லா இஸ்ரேல் மீது தாக்குதல் நடத்தியது. இதையடுத்து, ஈரானுக்கு எதிரான தாக்குதலை நடத்திக் கொண்டே லெபனான் மீதும் இஸ்ரேல் தாக்குதலை தொடர்ந்தது. இதில், ஹிஸ்புல்லா தலைவர்கள் பலர் உயிரிழந்ததோடு, லெபனான் பொருளாதார ரீதியாகவும் கடும் பின்னடைவைச் சந்தித்தது.

இந்நிலையில், லெபனான் மற்றும் இஸ்ரேல் இடையே கடந்த வாரம் போர் நிறுத்தம் அறிவிக்கப்பட்டது. இதற்கான முயற்சிகளை அமெரிக்கா மேற்கொண்டது. அமெரிக்காவில் உள்ள லெபனான் மற்றும் இஸ்ரேல் தூதர்கள் இடையே நடத்தப்பட்ட பேச்சுவார்த்தையை அடுத்து இந்த போர் நிறுத்தம் ஏற்பட்டது.

இந்தப் போர் நிறுத்தம் கடந்த ஞாயிற்றுக்கிழமையோடு முடிவுக்கு வந்த நிலையில், அதனை மேலும் நீட்டிப்பது தொடர்பான ஆலோசனைக் கூட்டம் வாஷிங்டன் டி.சி.யில் அதிபர் டொனால்டு ட்ரம்ப் தலைமையில் நேற்று (ஏப்.23) நடைபெற்றது.

இதில், துணை அதிபர் ஜே.டி. வான்ஸ், வெளியுறவுத் துறை அமைச்சர் மார்கோ ரூபியோ, இஸ்ரேலுக்கான அமெரிக்க தூதர் மைக் ஹக்கபீ, லெபனானுக்கான அமெரிக்க தூதர் மைக்கேல் இசா, அமெரிக்காவுக்கான இஸ்ரேல் தூதர் யெச்சியல் லீட்டர், அமெரிக்காவுக்கான லெபனான் தூதர் நாடா மோவாட் உள்ளிட்டோர் கலந்து கொண்டனர்.

டொனால்டு ட்ரம்ப்பின் ஓவல் அலுவலகத்தில் நடைபெற்ற இந்த ஆலோசனைக் கூட்டத்துக்குப் பிறகு செய்தியாளர்களிடம் பேசிய டொனால்டு ட்ரம்ப், “போர் நிறுத்தம் மூன்று வார காலத்துக்கு நீட்டிக்கப்படுகிறது. இரு நாடுகளுக்கு இடையே அமைதி ஒப்பந்தம் ஏற்பட அதிக வாய்ப்பு இருக்கிறது.

இஸ்ரேலிய பிரதமர் பெஞ்சமின் நெதன்யாகு மற்றும் லெபனான் அதிபர் ஜோசப் அவுன் ஆகியோரை விரைவில் வெள்ளை மாளிகையில் வரவேற்பதை ஆவலுடன் எதிர்பார்க்கிறேன். ஹிஸ்புல்லாவிடம் இருந்து தன்னை பாதுகாத்துக்கொள்ள லெபனானுக்கு உதவ அமெரிக்கா அதனுடன் இணைந்து செயல்படும்” என தெரிவித்தார்.

இந்தப் பேச்சுவார்த்தையில் ஹிஸ்புல்லா பங்கேற்கவில்லை. கூட்டத்தில் பேசிய அமெரிக்காவுக்கான இஸ்ரேல் தூதர் யெச்சியல் லீட்டர், ஹிஸ்புல்லாவுக்கு எதிராகவும், ஈரான் புரட்சிகர காவல் படைக்கு எதிராகவும் மென்மையாக செயல்படுவது, நமது பரஸ்பர இலக்கை அடைவதற்கான செயல்முறையை சாத்தியமற்றதாகவே மாற்றும் என தெரிவித்தார்.

# வாக்கு எண்ணும் மையங்களில் 4 அடுக்கு போலீஸ் பாதுகாப்பு






# ஆம் ஆத்மி கட்சி 7 மாநிலங்களவை உறுப்பினர்கள் பாஜகவில் இணைகின்றனர்

# சாத்தான்குளம் வழக்கு: 9 பேரின் மரண தண்டனையை உறுதி செய்ய சி.பி.ஐ. தரப்பில் முறையீடு

# ஏப்.30-ல் தூதரக தலைவர்கள் மாநாட்டில் பிரதமர் மோடி விளக்க உரை

# இனி வாட்ஸ் அப்பில் ரீசார்ஜ் செய்யலாம்


தமிழ்நாடு இ பேப்பர்.காம்

www. tamilnaduepaper.com

Tamilnaduepaper

சென்னை 25.04.2026 சனிக்கிழமை இலவச இ–பேப்பர்